கல்கி

KALKI 10.9.95 ரூ. 3.00





"இந்த போலீஸ்காரங்க விஷயம் ரொம்ப பேஜாராப் போச்சு. மாமூல் கொடுக்கறதும் இல்லாம ஊர் முழுக்க நோட்டீஸ் வேற அடிச்சி ஒட்டணுமாம்!"

"என்ன நோட்டீஸ்?"

"எங்கள் ஊரில் கள்ளச்சாராயத்தை ஒழித்த காவல்துறையினருக்கு கிராமவாசிகளின் நன்றி'ன்னு!"

— எஸ். ராஜேந்திரன்

"சேசே! இன்னதுக்குத்தான் ஸ்பான்ஸர்னு கிடையாதா?"

"ஏன் என்னாச்சு?"

"கல்யாண சாப்பாட்டுப் பந்தியில உட்காரவச்சுட்டு இந்த விருந்தினை உங்களுக்கு வழங்குபவர்கள் 'தாமரைத் துணியகம்' நிறுவனத்தினர் அப்படீன்னு மைக்ல திரும்பத் திரும்பச் சொல்லிக்கிட்டே இருக்காங்களே!"

— சிதாஞ்சலி

"உங்க இதயத்திலே ஒரு ஓட்டை இருக்கு. உடனே ஆபரேஷன் பண்ணணும். ரொம்ப செலவாகும். எப்படி கொடுப்பீங்க?"

" ஒரு கிட்னியை வேணும்னா எடுத்துக்குங்க!"

— து. பூவராகன்

"சோகக் காட்சியில, எப்படி கிளிசரின் போடாம அழுவுறீங்க?"

"என் 'கல்யாண நாளை' நினைச்சுக்குவேன்."

— ஆர். வசந்தகுமார்

பொதுக்கூட்டத்தில் ஒரு அரசியல்வாதி : "இங்கே நாங்கள் பெற்றுள்ள திறமையையும் அனுபவத்தையும் கருத்தில் கொண்டு சொல்கிறேன்; மத்தியில் நாங்கள் கூட்டணி ஆட்சி அமைத்தால் சீனா மற்றும் பாகிஸ்தான் வசம் இருக்கும் இந்திய நிலப்பகுதி அனைத்தையும் விலைக்கு வாங்கியே மீட்டு, எங்களது தேசப்பற்றை நிலை நாட்டுவோம்!"

— நாகலை இளவல்

"நான் செத்துப் பிழைச்சவண்டா; எமனை பார்த்துச் சிரிச்சவண்டா!"

"இத பாருங்க! உங்களுக்கு செய்யப்பட்ட ஆபரேஷன் சக்ஸஸ் ஆகியிருக்கலாம். அதுக்காக ஆஸ்பத்திரிக்குள்ளேயே இந்த மாதிரி பாட்டைப் பாடறது கொஞ்சம் கூட நல்லாயில்ல."

— எம். கிருஷ்ணன்

மெட்ராஸ் மசாலா

ஒரு கழுதை அமைச்சரான கதை!

அன்று ஆரம்பித்ததுதான்!

ராஜா வேட்டைக்குப் போக விரும்பினார். அமைச்சரை அழைத்து, "வேட்டைக்குக் கிளம்புகிற அளவுக்கு வானிலை சரியாக இருக்கிறதா?" என்றார்.

"தாராளமாகச் செல்லலாம்; நல்ல வெயில் அடிக்கிறது!" என்றார் அமைச்சர்.

ராஜா கிளம்பிய போது எதிரில் வந்த சலவைத் தொழிலாளி, "ராஜா வேட்டைக்கா போறீங்க?" என்றான்.



"ஆமாம்!"

"சாமி, மழை வர்ற மாதிரி இருக்கே!"

"அமைச்சர் அப்படிச் சொல்லலையே! நீ எப்படி உறுதியாச் சொல்றே?"

"என் கழுதை சொல்லுதுங்க சாமி... அதோட காது தூக்கிக்கிட்டு இருந்தா மழை வரும்னு அர்த்தம்!"

சிறிது நேரத்தில் மழை பெய்ய, அரண்மனைக்குத் திரும்பிய ராஜா, அமைச்சரைப் பதவி நீக்கம் செய்து, கழுதையை மந்திரியாக்கினார்! கழுதைகளும் மந்திரியாகிற நிலைமை அப்போது ஆரம்பித்ததுதான்!

– வி. பாலாஜி, சென்னை - 11.

ராவோடு ராவாக...

முதல் நாள் மாலை வரை கல் குத்திக் கால்களைப் பதம்பார்த்துக் கொண்டிருந்த நங்கநல்லூர் சாலையொன்று மறுநாள் (10.8.95) காலை பால் வாங்கப் போகும் போது பார்க்கையில், கறுப்புப் போர்வை போர்த்திப் பளபளவென்று மின்னிக் கொண்டிருந்தது. பால் கியூவில் நின்ற போது அது பற்றி இருவர் அடித்துக் கொண்ட கமெண்ட் :

"என்ன, ராவோடு ராவா இந்த ரோட்டுக்குத் தார் போட்டிருக்காங்களே, என்ன விசேஷம்?"

"காஞ்சிபுரம் வர்ற போது நம்ம பிரதமர் ராவ் நம்ம ஊர் ஆஞ்சநேயரையும் தரிசிக்க வர்றதா இருக்காரில்லையா... அதுதான். அந்த ராவுக்காகத்தான் இந்த ராவோடு ராவான வேலை!"

– ஆர். ஜானகி ரங்கநாதன், சென்னை - 61.

பெயர் வந்த கதை!

பிரிட்டிஷ் ஆட்சியின் போது காலட் என்னும் ஆங்கிலேயர் சென்னையின் கவர்னராகச்



சில காலம் இருந்தார். அவருக்கு இந்த மண்ணில் தம் பெயரைப் பதித்து விட்டுச் செல்ல வேண்டும் என்கிற ஆசை! (அந்தக் காலத்திலும் இந்த ஆசைதானா?) திருவொற்றியூர் போகும் வழியிலுள்ள ஒரு பேட்டைக்குத் தம் பெயரைச் சூட்டினார். அதுதான் 'காலட் பேட்டை'. அதுவே மருவி இன்று 'காலடிப் பேட்டை' என்று அழைக்கப்படுகிறது.

– டி. என். பாலகிருஷ்ணன், சென்னை – 91.

எழுப்பிய மர்மம்!

சைதாப்பேட்டையிலிருந்து பெருங்குடி பஸ்ஸில் ஏறியமர்ந்து டிக்கெட் வாங்கினேன். எனக்குப் பின்னால் உட்கார்ந்திருந்த இருவர்

என்னை ஒருவித ஆவலுடன் பார்த்தனர். நான் கண்டுகொள்ளாமலிருந்தேன். பெருங்குடிக்கு ஏழெட்டு நிறுத்தங்கள் இருக்கும் என்பதால் நான் லேசாகக் கண்ணயர்ந்தும் விட்டேன். அப்போது பின்னால் அமர்ந்திருந்தவர்களில் ஒருவர் என் தலைமீது தட்டி எழுப்பினார். நான் கோபமாக அவரிடம் சண்டைக்குப் போனேன். அவரோ, "என்னை மன்னித்து விடுங்கள். நாங்கள் சென்னைக்குப் புதியவர்கள். பெருங்குடியில்தான் நாங்களும் இறங்க வேண்டும். நீங்களும் பெருங்குடிக்கு டிக்கெட் வாங்குவதைப் பார்த்ததும் நீங்கள் இறங்கும் போது சுலபமாக இறங்கி விடலாம் என்று நினைத்தோம். நீங்கள் தூங்கி விட்டால் எப்படி? அதனால்தான் எழுப்பினேன்!" என்றார். நான் கோபத்தையும் மறந்து சிரித்து விட்டேன்.

– எஸ். தயாளன், சென்னை – 88.

இது எப்படி இருக்கு?

ஓர் இளைஞர் 'மணமகள் தேவை' என்று விளம்பரம் செய்திருந்தார். அதில் தமது படிப்பு, வேலை விஷயங்களோடு, தமக்கு H.I.V. பாஸிடிவ் இருப்பதாகவும் தெரிவித்திருந்தார். இருப்பினும் பல படித்த பணக்காரப் பெண்கள் அதற்குப் பதில் போட்டிருந்ததைப் பார்த்து அவருக்கு ஒரே ஆச்சர்யம்! எல்லாப் பெண்களையும் அழைத்து ஒரு நாள் இன்டர்வியூ நடத்தினார். அப்போது, "எனக்கு H.I.V. பாஸிடிவ் இருப்பது தெரிந்தும் எப்படி மணக்க முன்வந்தீர்கள்?" என்றார். அதற்கு அவர்களோ M.B.A., I.C.W.A. மாதிரி இதுவும் ஒரு குவாலிபிகேஷன் என்று நினைத்துக் கொண்டதாகச் சொன்னார்களாம். எயிட்ஸ் பற்றிய விழிப்புணர்வுக் கூட்டமொன்றில் நடந்த பட்டிமன்றத்தில் கேட்டது இது!



– திருமதி ராதா நாயகம், சென்னை - 40.

ஜோக் :

முதல் அரசியல்வாதி : நம்ம ஜனங்க நம்மை விட புத்திசாலியா இருக்காங்க, போங்க...!



இரண்டாவது அரசியல்வாதி : எதனால அப்படிச் சொல்றீங்க?

முதல் அரசியல்வாதி : நம்ம தலைவரைப் பிடித்து ஜெயில்ல போட்டது, ஜெயிலைச் சுற்றிப் பார்த்து விலைபேசி வாங்கத்தான்னு கண்டுபிடிச்சிட்டாங்களே!

– டி. சந்திரசேகரன், சென்னை - 13.

முதல் பந்திப் பிரியன்!

எங்கள் பகுதியில் முத்துகிருஷ்ணன் என்று ஓர் அநாதை. யார் என்ன வேலை சொன்னாலும் செய்வான். யார் வீட்டிலாவது விசேஷம் என்றால் எல்லா வேலையும் அவன் தலையில்தான்! கூலியாக விரும்புவதெல்லாம் முதல் பந்தியில் அவனைச் சாப்பிடச் சொல்ல வேண்டும்; அவ்வளவுதான்! ஒரு சமயம் என் வீட்டு விசேஷத்தின் போது முதல் பந்தியில் அவனைச் சாப்பிடச் சொல்ல முடியாதபடி அவனுக்கு ஓர் அவசர வேலை இருந்தது. அவனோ முதல் பந்தியை விட்டு விட்டுப் போகத் தயங்கினான். உடனே நான், "கிருஷ்ணா, முதல் பந்தியில் ஒரு லட்டு என்றால் உனக்கு இரண்டு; முதல் பந்தியில் ஒரு பழம் என்றால் உனக்கு இரண்டு என்று எல்லாமே இரண்டு மடங்காகப் பரிமாறுகிறேன். போய் வேலையை முடித்துக் கொண்டு வா!" என்று அனுப்பினேன். அரை மனதோடு சென்று வந்த அவன் சாப்பிடும் போது, சொன்னபடியே பரிமாறி, "என்ன கிருஷ்ணா, திருப்திதானே?" என்றேன். அவனோ, "கடைசிப் பந்திக்கே இவ்வளவு என்றால் முதல் பந்திக்கு எவ்வளவு கிடைத்திருக்கும்!" என்றானே பார்க்கலாம்!

– புலியூரை கணேசன், சென்னை – 30.

மெட்ராஸ் மசாலா இந்த இதழுடன் நிறைவடைகிறது. சிறந்த துணுக்குக்கான சிறப்புப் பரிசு ரூ. 100/- பெறுபவர் லா. ரா. சப்தரிஷி, சென்னை - 33. (3.9.95 இதழ் - எம்.ஜி.ஆர். ரசிகருக்கு காப்பி வாங்கிக் கொடுத்த அனுபவத் துணுக்கு.)

‘சிரிக்க வையுங்கள்; சிங்கப்பூர் செல்லுங்கள்!’

— ஞாபகம் வந்து விட்டதா?

பொன் விழாவை முன்னிட்டு, கல்கி நடத்திய இந்த ஜோக் எழுதும் போட்டியில் வென்ற பி.ஜி.பி. இசக்கி, சமீபத்தில் வெற்றிகரமாகத் தம் சிங்கப்பூர் பயணத்தை முடித்துத் திரும்பியிருக்கிறார்! அவரது குஷியான பயண அனுபவங்களைப் படியுங்கள்.

மனைவியோடு புதிதாக ஓர் இடத்துக்குப் போவதற்குக் கொஞ்சம் தென்பு வேண்டும். தென்பை இருவகையாகப் பிரிக்கலாம். மனத்தென்பு மற்றும் பணத்தென்பு. இவ்விரு தென்புக்கும் திருவிளையாடல் பரமசிவன் மாதிரி சோதனை வைத்துக் கொண்டே இருப்பதுதான் திருமதிகளின் விருப்பமான பொழுதுபோக்கு என்பதுதான் இந்த சிங்கப்பூர் பயணத்தில் எனக்கு சித்தித்த ஞானம்.

பாருங்கள், அசல் நாட்டுப்புறத்தான்... பொம்மை ஏரோப்ளேன் பார்ப்பதற்குக் கூட பஸ் ஏறிப் போக வேண்டியவன்... கல்கி அலுவலகத்தில் ஆசிரியர் குழுவினர் அன்போடு விடைகொடுக்க, இந்தியன் ஏர்லைன்ஸினர் சிங்கப்பூர் சென்று வருவதற்கான இரண்டு டிக்கெட்டுகளை இலவசமாகக் கொடுக்க, ஏர்-போர்ட்டில் நண்பர்கள் முதுகு தட்டி வழி அனுப்ப, ‘ஏர்-பஸ் என்றால் பறக்கும் பல்லவன் போலவா’ என்கிற ஆர்வக் கோளாறுச் சிந்தனைகளையெல்லாம்



• “சாப்பிட வாங்க”



• இசை நீரூற்று



• சந்தோஷா கடற்கரை

சிரிக்க வைத்தார்; சிங்கப்பூர் சென்றார்!



• சந்தோஷாவில் கேபிள் கார்....

வெளியே காட்டிக் கொள்ளாமல், இந்தியன் ஏர்லைன்ஸின் ஏர்பஸ்ஸில் அமர்த்தலாக ஏறி உட்கார்ந்தோம்.

"எக்ஸ்கியூஸ் மீ..."

– ஜில்லொலி கேட்டுத் திரும்பினால் சாக்லேட் தட்டை நீட்டும் விமானப் பணிப்பெண்.

கொஞ்ச நேரத்தில்





ஆரஞ்சு பழச்சாறு! அடுத்த கொஞ்ச நேரத்தில் மது பானம் வந்தது. 'அய்யய்ய...' முகம் சுளித்து, 'இதெல்லாமா கொடுப்பாங்க!' என்று அதிர்ச்சிக்குள்ளான வாழ்க்கைத் துணைவி, 'எங்களுக்கு வேணாம்' – பன்மையில் சொன்னாள்!

தலைக்கு மேல் இருக்கும் சிவப்பு விளக்கைத் தட்டி விட்டால் போதும். அடுத்த கணத்தில், 'குறிஞ்சி மலரைக் கொய்து கொண்டு வரவா? பீனிக்ஸ் பறவையைப் பிடித்துக் கொண்டு தரவா?' என்கிற மாதிரி நம்முன் ஒயிலாய் ஓடி வந்து குழைவாய்க் கேட்கிறார்கள் விமானப் பணிப்பெண்கள்.

ஆங்கிலத்தில் கேட்டால் ஆங்கிலம். தமிழில் கேட்டால் தமிழ். இந்தியில் என்றால் இந்தி. முகம் சுளிக்காமல் புன்னகை சிந்திப் பதில் தருகிறார்கள்.

இந்தியன் ஏர்லைன்ஸின் இந்த இனிய உபசரிப்போடு சிங்கப்பூரில் இறங்கினோம்.

இறங்கியதுமே "அடிக்கு அடி நுட்பமாய் செதுக்கி நெஞ்சைக் கொள்ளை கொள்ளும் இந்த பிரும்மாண்டமான கட்டடப் படைப்பினைப் பார்! பார்க்கும் இடமெல்லாம் பச்சையாய்ப் படர்ந்து பரவசப் படுத்துகின்ற அடர்த்தி மரங்களின் அழகினைப் பார்! பரந்து விரிந்த இந்த பூமியின் பல பாகங்களிலிருந்தும் உல்லாசப் பறவைகளாய் உற்சாகக் களிப்போடு பாடித் திரிய வந்திருக்கும், பாகுபாடே தெரியாத பண்பட்ட மனிதர்களைப்பார்..." என்று ஒரு நீள 'வசந்த மாளிகை' பாணி வசனத்தை எடுத்து



• சீனப் பெண்மணியின் சங்கக் காதல்

விட்டதுதான் தாமதம்.. வாய் விட்டுச் சிரித்து விட்டாள் வா.து! (வாத்து அல்ல!)

தகவல் பிரேக் : *1965 க்கு (ஆக 9) முன் வரை சிங்கப்பூரும் மலேசியாவும் ஒரே நாடு. 1959ல் ஆங்கிலேய காலனி ஆதிக்கத்திலிருந்து விடுதலை வாங்கியிருந்தாலும் 9.8.65 –ஐத்தான் தேசிய நாளாகக் கொண்டாடுகிறார்கள். 1960க்கு முன் இன்றைய இந்தியாவின் எல்லா சிரழிவுகளும் அங்கு புகுந்து விளையாடியிருக் கின்றன! விழித்துக் கொண்டு புதிய முகம் காட்ட ஆரம்பித்தது அப்புறம்தான்!*

குடும்பத்தோடு சிங்கையில் குடியிருக்கும் நண்பர் காஜா மைதீனுக்கு ஏர்போர்ட்டி விருந்து ஃபோன் செய்தேன்.

"நீங்க அதிர்ஷ்டசாலி.. ஹோட்டலில் ரூம் போட வேண்டாம். நேற்றுத்தான் எங்க பிளாக் கில் வசிக்கும் ஒருவர் சாவியை எங்களிடம் ஒப்படைத்து விட்டு, இந்தியா போயிருக்கிறார். அவர் திரும்பி வர ஒரு மாசமாகும். அதுவரை நீங்க கவலையில்லாம இருக்கலாம்" என்று சொன்னதும் எங்களுக்கு மிக நிம்மதி. காரணம், அங்கே ஒரு வார ரூம் வாடகையில் இங்கே வண்டலூர் தாண்டி ஒரு பிளாட் வாங்கிப் போட்டு விடலாம்!

போகட்டும், சப்ஜெட்டுக்கு வருவோம். ஒரு வித்தியாசமான சீனப் பெண்மணி! வயது அறுபதுக்கு மேலே. 'ஹெண்டர் சன்' சாலையி லுள்ள சூதாட்டக் குருவிகளைப் பார்க்கப் போன இடத்தில் அறிமுகமானார்.

(சூதாட்ட குருவி விவகாரம் அப்புறம்!)

இந்த அம்மணிக்கு இன்னும் கல்யாணமாக வில்லை என்பதில் புதிய செய்தி ஏதும் இல்லை. காதல் தோல்வி காரணமாம்.

சிங்கை தேசத்தில் நம் சங்கக் காதலா?

ஆர்வத்தில் துருவினேன்.

"ஒரு தலைக் காதலா மேடம்?"

"நோ."

"பெற்றோர்கள் எதிர்ப்பா?"

"நோ... நோ!"

"நீங்களே சொல்லுங்களேன், ப்ளீஸ்?"

"அடுத்த மாதம் கல்யாணம் என்ற நிலை யில் சாலை விபத்தொன்றில் இறந்து விட் டார்!"

– சுருங்கிய சோகக் கண்களில் நீர் எட்டிப் பார்க்கிறது.

"இன்னொருவரை மணப்பதில் பிரச்னை ஏதும் இருந்ததா?"

"நான் விரும்பவில்லை. அவ்வளவுதான். இதற்கு மேல் என்னைக் கேட்காதீர்கள், ப்ளீஸ்..."

சரித்திர காதலுக்குப் பேர் போன நம் நாட் டில் இப்படி ஒரு பா(ர்)ட்டி பார்க்கக் கிடைப் பாரோ?

சொந்தம் என்று சொல்லிக் கொள்ள யாரு மில்லாத இவருக்கு, அரசாங்கம் மாதம் 250 டாலர் உதவிப் பணம் அளிக்கிறது. கூடவே இலவசமாய் சிங்கிள் ரூம் பிளாட்! அறை முழுக்க புத்தகங்கள், புத்தகங்கள்!

உதவிப் பணம்.. இலவசம்... வகையறா நோய்கள் அங்கேயும் ஜீவிக்கிறதா என்கிறீர் களோ?

நோயாக இல்லை. உண்மையான மனித நேயப் பண்பாக!

வோட்டு நோக்கம் எதுவுமில்லாமல் – 'ஆதரவுக்கு யாரும் இல்லை' என்று அங்கிங் கசையாத தராக முன்னால் தீர்மானித்த பிறகே உதவிக்கு வருகிறது அரசு.

இன்னொரு விஷயத்தையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

பெண்சாதி பேச்சைக் கேட்டு வயதான பெற்றோருக்குப் பைசா கொடுக்காமல் டேக்கா காட்டுகின்ற பாச்சாவெல்லாம் அங்கே பலிக் காது!

பெற்ற பிள்ளைகளின் கவனிப்பு சரியில்லை என்றால் அரசாங்கமே அவர்களின் சம்பளத்தி லிருந்து ஒரு குறிப்பிட்ட தொகையைப் பிடித்து பெற்றோர்களுக்குக் கொடுத்து விடுகிறது!

தகவல் பிரேக் : *சிங்கையில் சைனர்கள் 78% மலேசியர்கள் 12%, இந்தியா உட்பட பிற தேசத்தவர் 10% ஆணும் பெண்ணும் ஏறக் குறைய சரிக்குச் சரி இருக்கிறார்கள். 15 வய துக்கு மேல் கணக்கெடுத்தால் சிங்கையின் மக்கள் தொகை 26 லட்சம் மட்டுமே!*

சந்தோஷா!

சுற்றுலாப் பிரியர்களுக்கென்றே சமுத்திரத் தில் சொர்க்கத் தீவுகளைப் படைத்திருக்கிறார்



பரிகோடா என்ற ஊரைச் சேர்ந்த ட்ரைலோகம் நாயக் என்ற விவசாயி விடா முயற்சியில் ராபர்ட் புரூஸையும் மிஞ்சி விட்டார்.

இதுவரை அவர் எஸ்.எஸ்.எல்ஸி. தேர்வை 42 முறைகள் எழுதி, 42வது தடவையில் வெற்றி பெற்றுவிட்டார். (வயது) நாற்பதுகளில் இருக்கும். அவர் தேர்வு எழுதும்போது பலமுறை புத்தகத்தைப் பார்த்து எழுதுமாறு கண்காணிப்பாளர்கள் அனுமதியளித்தும், அதை மறுத்துவிட்டார் இந்த நேர்மையாளர்! அவர் தேர்ச்சி பெற்ற அன்று ஊர் மக்கள் அனைவரும் இனிப்பு உண்டு மகிழ்ந்தனர்!

ஆதாரம் : வீக்; தகவல் : ஸ்ரீகாந்தன்



தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம்

திண்டுக்கல் அண்ணா மாவட்டக் குழு நடத்தும்

பாரதிராஜா படைப்புகள்

ஆய்வரங்கம்

★ தமிழக திரையுலக வரலாற்றில் மேற்கொள்ளப்படும் முதல் முயற்சி!

★ கிராமத்து மண்வாசனையை மணம் கமழப் பரப்பி புதிய வேதம் சொன்ன புதுமைக் கலைஞரின் படைப்பு களை அலசி ஆராயும் புதுமை நிகழ்ச்சி!

திண்டுக்கல் மாநகரில் 1995 டிசம்பர் திங்களில்

இயக்குநர் இமயம் **பாரதிராஜா**

முன்னிலையில் நடைபெறவிருக்கும் ஆய்வரங்கத்தில் விவாதிக்கப்பட கீழ்க்காணும் தலைப்புகளில் ஆய்வுக்கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.

"பாரதிராஜா படைப்புகளில்..."

- கிராமத்தின் மண்வாசனை
- திரைப்படங்களின் முகமாற்றம்
- மகாகவியின் பெண்ணுரிமையைப் பெருமைப்படுத்திய விதம்
- மனித நேயம்
- சமூக உணர்வு
- அழகிய நளினம்
- நகர்களக் கதைகளில் யதார்த்த வெளிப்பாடு
- திரைக்கதையமைப்பில் புதுமை
- புதிய வேதம்
- காதல்
- சப்பாணி முதல் மொக்கையன் வரை...
- பதினாறு வயதிலே முதல் பசும்பொன் வரை...

'கருத்தம்மா' படத்தில் கருத்தம்மா பேசும் வசனம்
"ஐயா, இந்த மரத்த வெட்டாதீங்க" "ஏன்?"
"இது மரம் இல்ல... இது எங்க ஆத்தா!"

ஆம்! மரம் வளர்ப்போம்!
மழை தருவிப்போம்!

★ கட்டுரைகள் முழுத்தாளில் (Foolscape) தட்டச்சில் பத்துப் பக்கங்களுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும். ★ ஒவ்வொரு தலைப்பிலும் சிறந்த இரண்டு கட்டுரைகள் நடுவர் குழுவால் தேர்வு செய்யப்பட்டு ஆய்வரங்கத்தில் விவாதிக்கப்படத் தகுதி பெறும். ★ தேர்வு செய்யப்பட்ட ஆய்வுக் கட்டுரையாளர்களுக்கு ஆய்வரங்கப் பங்கேற்புக் கான வழிச்செலவு, உணவு-தங்கல் வசதி உண்டு. ★ நடுவர் குழுவினர் தீர்ப்பே இறுதியானது. ★ தேர்வு செய்யப்படாத கட்டுரைகளை திருப்பியனுப்ப இயலாது. ★ ஆய்வுக் கட்டுரைகள் வந்து சேரவேண்டிய கடைசிநாள்:15.10.95. ★ கட்டுரைகள் அனுப்பவேண்டிய முகவரி: ஆர்.எஸ்.மணி, மாவட்டச் செயலாளர், தமுஎச திண்டுக்கல் அண்ணா மாவட்டக் குழு, தமுஎச அலுவலகம். 14, சொசைட்டித் தெரு, பழனி ரோடு, திண்டுக்கல் - 624 001.

பி.கு. ஆய்வு செய்யப்பட்ட கட்டுரைகள் புத்தக வடிவில் பின்னர் வெளியிடப்படும். புத்தகப் பதிப்புரிமை தமுஎசவுக்கு உரித்தாகும்.

சிறந்த ஆய்வுக்கு

தங்க பதக்கம்

முதல் பரிசு	:	3 பவுன் தங்க பதக்கம்
இரண்டாம் பரிசு	:	2 பவுன்தங்க பதக்கம்
மூன்றாம் பரிசு	:	1 பவுன் தங்க பதக்கம்
8 ஆறுதல் பரிசுகள்	:	1/2 பவுன் தங்க பதக்கம்


Sponsors: **MOTHER EARTH PLANTATIONS**

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள்

Rtn.G. பவானி சங்கர்

நாவலாசிரியர் டி. செல்வராஜ்

புகைப்படக் கலைஞர் யோகா



''வருமானத்தில் சரி-பாதியை நான் தர்மத்துக்கு என்றே செலவிடுவது வழக்கம்...!''

''இன்னொரு பாதியை....?''

'அதர்மத்துக்கு....!''

— பெ. கலாசாமி

கள். நம் பாஷையில் சொல்வதானால் - சின்ன மீனைப் போட்டு, பெரிய மீனைப் பிடிக்கிறார்கள்.

இக்கரையிலிருந்து அங்கு சென்று வர ஏகமாய் கேபிள் கார் + கப்பல் சர்வீஸ். 5–7 நிமிட ஜில்ல் பயணம். ஓர் அனுபவத்துக்காக கேபிளில் போய் (வாது.க்குப் படு திரில்லிங்!) கப்பலில் திரும்பினோம்.

துறைமுகம் அருகில் இருப்பதால் காணும் இடமெல்லாம் சரக்குக் கப்பல்களின் அணி வகுப்பு.

மாலை நேர சந்தோஷாவில் மக்கள் கூட்டம் நம்ம முதல்வராய் – புரியவில்லை? 'ஜேஜே' என்றிருக்கிறது! சொர்க்கத் தீவின் கொள்ளை அழகை மினி ரயிலில் டிராம் வண்டியில் ஹாய்யாக ரவுண்ட் அடித்துக் கொண்டே ரசிக்கலாம்! அட்டகாசம்!

பீச்சில் உட்கார்ந்திருந்தோம்.

வித்யாச 'நால்வர்' அணி கண்ணில் பட்டது. இரண்டு பேர் புதுமணத் தம்பதிகள். (கழுத்தில் மாலை. ஜோடியாய் நெருங்கியிருந்த ஸ்டைலைக் கொண்டு நாமாக யூகித்தது.) ஒரு போட்டோகிராபர். இன்னொரு இளம் லேடி!

"தாலி கட்டிய சூட்டோடு - இல்லை - மாலை மாற்றிய கையோடு புகைப்பட ஆல்பத்துக்காக இங்கே ஓடி வந்து விட்டார்கள் போலிருக்கு!"

அந்த இளம் லேடி, புதுத் தம்பதிகளிடம் ஏதோ சொல்ல... அவர்கள் போஸ் கொடுக்க... காமிராமேன் 'ரெடி' சொல்ல...

எனக்குள் ஒரு சந்தேகம் :

'ஷூட்டிங்காக இருக்குமோ?'

கேட்டே தெளிந்து விடுவது என்ற தீர்மானத்தில் எழுந்தேன். நினைத்தது சரியாகவே இருந்தது!

ஆரவாரமில்லாத - எளிமையான படப்பிடிப்பு. ஹீரோ... ஹீரோயின். காமிராமேன்... டைரக்டர் மட்டும்! 'மேக் அப் மேன்' இல்லை. மேக்-அப் மேன் இல்லை. அவர்களை நாங்கள்தான் பட்டிக்காட்டுத் தோரணையில் பார்த்தோமே தவிர, அங்குள்ள வேறு யாரும் ஒரு குறைந்தபட்ச ஓரப் பார்வை பார்க்கட்டுமே... ம்ஹூம்!

'சந்தோஷா'வின் இன்னொரு சிறப்பு, அந்த ம்யூஸிக் ஃபவுண்டன். கம்ப்யூட்டர் இசையில் கண்ணைப் பறிக்கும் வண்ண ஜாலத்தில் களிநடனம் புரியும் அந்த 'செட்-அப்' நீரூற்றின் உயிரோட்டமான தெளிவும் களிவும் – அதைப் பதிவு செய்து கொள்ளத் துடியாய்த் துடிக்கின்ற தாஸிரி நிறைந்த காமிரா – வீடியோக் கூட்டம்... அது ராத்திரி சொர்க்கம்!

இங்கே சீனர்கள் சூதாட்டப் பிரியர்களாக இருக்கிறார்கள். அரசு அங்கீகாரத்தோடு ஒவ்வொரு ஏரியாவிலும் பிஸியாக இயங்கிக் கொண்டிருக்கும் லாட்டரி பூத்தில் எப்போதும் கியூதான். (பத்துக்கு ஒரு தமிழ்த் தலையும் தெரிகிறது!)

சிங்கையில் நீண்ட நாட்களாய் ஹோட்டல் வியாபாரம் நடத்தி வரும் நம்ம ஊர் உமர்கத்தாவிடம் இது பற்றிக் கேட்ட போது,

''சூதாட்டம் ஆடுவதில் சீனர்களுக்கும் தமிழர்களுக்கும் மனோதத்துவ ரீதியில் வேறுபாடு உண்டு. சீனர்கள் அதிகமான பணம் வைத்துச் சூதாடினாலும் பரிசு இல்லை என்றால் 'போனால் போகட்டும் போடா' பாணியில் 'டேக் இட் ஈஸி'யாக எடுத்துக் கொள்கிறார்கள். ஆனால் நம்மவர்களோ... மிஞ்சி மிஞ்சிப் போனால் அஞ்சு டாலர் கட்டியிருப்பார்கள். நம்பர் இல்லை என்றால், 'அய்யோ போச்சே... அம்மா போச்சே' என்று ஒப்பாரி வைத்து விடுவார்கள்."

அன்று கழுத்தில் காமிரா தொங்க பிளாக்கில் நடந்து கொண்டிருந்தேன். எத்தனை மாடிக் கட்டடமாக இருந்தாலும் கிரௌண்ட் ஃப்ளோரில் குடித்தனங்களை வைத்து அடைக்காமல் ஃப்ரீயாக விட்டு விடுகிறார்கள்.

என்னைப் பார்த்ததும் அங்கே வட்ட மேஜைக் கல்லில் உட்கார்ந்திருந்தவர்கள் குபீரென்று எழுந்து ஓட ஆரம்பித்தார்கள். அடியேனுக்கு ஆச்சர்யம் + அற்ப ஆனந்தம். விசாரித்த பின்தான் புதிர் அவிழ்ந்தது.

சட்டத்துக்குப் புறம்பான ஏதோ ஒரு வகையான சூதாட்டம் ஆடிக் கொண்டிருந்தவர்கள் என்னை அரசு அதிகாரி என்று நினைத்துப் பயந்து ஓடி விட்டார்களாம்!

டிக்கெட் கன்ஃபர்ம் பண்ணுவதற்காக

செண்டன்வேயிலுள்ள இந்தியன் ஏர்லைன்ஸ் அலுவலகத்துக்குப் பஸ்ஸில் போய்க் கொண்டிருந்தோம். எங்கள் அருகிலிருந்த இளைஞர் குருவி உள்ளேயிருந்த மூங்கில் கூடையை மடி மேல் வைத்திருந்தார். வித்தியாசமாகத் தெரியவே, விசாரித்தேன். விஷயம் கிடைத்தது.

குருவி ஆட்டத்துக்கென்றே போட்டி போட்டுக் கொண்டு ஆளாளுக்குக் குருவி வளர்ப்பார்களாம்! யாருடைய குருவி ஓங்கி ஒலி எழுப்புகிறதோ அதன் சொந்தக்காரருக்குப் பரிசு! இதைக் கேட்டதும் நம்ம சேவல் சண்டைதான் நினைவுக்கு வந்தது.

'குட்டி இந்தியா' என்றழைக்கப்படும் 'தேக்கா' பஜாரில் தமிழ்நாட்டின் வாசனை மூக்கை மட்டுமல்ல. சில இடங்களில் நெஞ்சையும் துளைக்கிறது.

அவியல் - பொரியல் அப்பளத்தோடு ஆசை தீர சாப்பிட முடிகிறது. கூச்சப்படாமல் தமிழில் பேரம் பேச முடிகிறது. கைரேகை - கிளி சோதிடம் பார்த்து பரவசப்பட முடிகிறது. கல்கி - விகடனை ஒரே விலைக்கு (தலா ரூ 29 சொச்சம்) வாங்கிப் படித்து ஆனந்திக்க முடிகிறது. சாலை ஓரத்தில் சக்களத்தி சண்டைகளை சரவெடி வசனத்தில் கண்டு - கேட்டு களிக்க முடிகிறது.

"நாப்பது வெள்ளிதான்!" - சிவி சிங்காரித்து சிக் உடையில் நின்று சிரித்துக் கூப்பிடும் 'வழுக்கல்' நாயகிகளை சங்கடமாய் நெளிந்து, கடந்து போக முடிகிறது.

தேக்கா பஜாரில் திரும்பிய இடமெல்லாம் தங்க நகை மாளிகை. 'பத்து பகாட்' கடைக்குப் பக்கமிருந்த கூண்டுக்கிளி, சோதிடம் பார்க்கக் கூப்பிடவே, திடுக்கிட்டுத் திரும்பி அருகில் போனோம். 'இங்கேயுமா இது?'

கேரளாவைச் சேர்ந்த சாரதா, கிளி பக்கம் நின்று புன்னகையோடு போஸ் கொடுத்தார்.

"எத்தனை வருஷமா...?"

"நாலஞ்சு வருஷமாச்சுங்க."

"ஜோசியம் பார்க்க யாரு அதிகமா வராங்க?"

"எல்லாருந்தான்!"

"சீனர்களுமா?"

"அவங்கதான் அதிக பைத்தியம்!"


- எதிலும் சீனர்கள்!

முஸ்தபா சென்டர் - செராங்கூன் சாலையின் 'சூப்பர் ஷாப்பிங்' காம்ப்ளக்ஸ். மனைவி முகத்தில் உற்சாகத்தைப் பார்க்க வேண்டுமே. அடடா... ஐந்தாண்டு மணவாழ்க்கையில் நான் பார்த்தறியாத பரவசத் துள்ளல்! ஒரு சோக அனுபவத்துக்கான முன்னோட்டம் என்று அப்போது எங்களுக்குத் தெரியவில்லை.

(மீதி அடுத்த இதழில்...)

தேசியகீதம் வந்த கதை!

நமது தேசிய கீதம் முதன்முதலாகப் பாடப்பட்டபோது, பலத்த சர்ச்சையைக் கிளப்பியது. 1911ம் வருடம் கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ் மாநாடு 'வந்தே மாதரம்' பாடலுடன்தான் துவங்கியது. மறுநாள் (27.12.1911) ஜார்ஜ் அரசரை வரவேற்று தலைவர்கள் பேசினார்கள். அன்றுதான் 'ஜன கண மண' பாடப்பட்டது. உடனே ஆங்கிலேயர் ஆதரவுப் பத்திரிகைகள், அரசரை வரவேற்பதற்காகவே ரவீந்திரநாத் தாகூர் இந்தப் பாடலை விசேஷமாக எழுதியதாகக் கதை கட்டிவிட்டன. "இந்தியன்" பத்திரிகை கூட இதை ஒப்புக் கொள்ளத்தான் செய்தது. ஆனால் ரவீந்திரர் மறுப்பு எதுவும் வெளியிடாமல் மௌனம் சாதித்ததுதான் பலரையும் திகைப்பில் ஆழ்த்தியது. கடைசியில், 'பாரத பாக்ய விதாதா' என்ற வார்த்தைகள் ஜார்ஜ் அரசரைத்தான் குறிக்கிறது என்ற அளவுக்கு விஷயம் வளர்ந்தபோதுதான், தாகூர் வெகுண்டெழுந்து மறுப்பு வெளியிட்டார். எல்லாம் வல்ல இறைவனைத்தான் அவை குறிப்பிடுவதாக விளக்கம் கொடுத்தார். பல வருடங்கள் கழித்து அரசியல் நிர்ணய சபையில் தேசிய கீதம் பற்றி விவாதம் நடந்தபோது கூட, 'வந்தேமாதரம்', 'ஜன கண மண', மற்றும் 'சாரே ஜஹான்சே அச்சா' ஆகிய மூன்றுக்கும் இடையே பலத்த போட்டி. கவிஞர் இக்பால் பாகிஸ்தான் உருவாக முக்கிய காரணகர்த்தா என்பதால் 'சாரே ஜஹான்சே அச்சா' அடிபட்டுப் போயிற்று. காந்தியடிகள் வந்தேமாதரத்தை பலமாக ஆதரித்தார். கடைசியில், ராணுவ மெட்டில் எளிதில் இசையமைத்து எல்லோரும் சேர்ந்து எளிதில் பாடத் தகுந்ததாக 'ஜன கண மண' ஏற்றுக் கொள்ளப்பட்டது.



"டெக்கான் ஹெரால்டு" பத்திரிகையில் : குஷ்வந்த் சிங்.

— இரத்தின. மனோகரன்

SANMAC

30

சான்மேக்கின்

விசேஷ நாட்கள்

டெபாசிட் சேகரிப்பு விழா

ஆகஸ்டு 15 முதல்
செப்டம்பர் 13, 1995 வரை.

ரூ.25 கோடி டெபாசிட் அடிப்படையையும், 20,000 டெபாசிட்தாரர்களையும் கொண்டுள்ள வெற்றிகரமான சான்மேக் நிதி நிறுவனம், செழிப்பான வருங்காலத்தை அமைத்துக் கொள்ள உங்களை வரவேற்கிறது.

ABSOLUTE SAFETY
A
CARE

- நிகர லாபம் ரூ. 9.5 கோடி.
- ஈடுபடுத்தப்பட்டுள்ள நிதி ரூ.50 கோடி.
- EPS ரூ.5/- (ஆண்டு கணிப்பிலானது).
- கிளைகளின் எண்ணிக்கை 26.

ஒவ்வொரு டெபாசிட்டுக்கும் கவர்ச்சிகரமான
▲▲▲ பரிசு ▲▲▲

SMF

SANMAC MOTOR FINANCE LIMITED

HIRE PURCHASE • LEASING • PUBLIC DEPOSITS
OTCEI • PROPERTY DEVELOPMENT

கார்ப்பரேட் அலுவலகம் : "ஜே.வி.எல். பிளாசா", 501, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. போன் : 4349678 / 4349508 / 4349805 .பேக்ஸ்:4343305

பதிவு அலுவலகம் : 14, கே.என்.கே. சாலை, சென்னை - 600 006. போன் : 8250601.

கிளைகள் : சென்னை - அண்ணாநகர் மேற்கு ✆ 6214454. அண்ணா சாலை ✆ 8520921. அசோக் நகர் ✆ 4824525, 4824624. மயிலாப்பூர் ✆ 8258637, 8251232, 4992488. புரசைவாக்கம் ✆ 6425036. தி.நகர் ✆ 8278515. மேற்கு தாம்பரம் ✆ 2366327. கோயம்புத்தூர் ✆ 446375. கடலூர் ✆ 22728. கும்பகோணம் ✆ 24844. மதுரை ✆ 23334. நெய்வேலி ✆ 22984. சேலம் ✆ 446607. திருநெல்வேலி ✆ 322032. திருவண்ணாமலை ✆ 23333, 22922. திருச்சி ✆ 25324. வேலூர். பெங்களூர் ✆ 5583856. மங்களூர் ✆ 428114. பாண்டிச்சேரி ✆ 37779. ஹைதராபாத் ✆ 397879. திருப்பதி ✆ 24376. விசாகப்பட்டினம் ✆ 545854. புது தில்லி ✆ 5618257 . பம்பாய் ✆ 8930278 (PP.). கோச்சி ✆ 366221.

SRICHAKRA COMS. 68595

இருட்டு அரண்மனைகள்-6

சின்னியின் முகத்திலே பரவிய பீதியைப் பார்த்து இன்பசாகரன் கலங்கி விட்டான். சட்டென்று இழுத்து அணைத்துக் கொண்டான்.

"வாரிடா."

"பரவால்லேப்பா."

"யாரு இந்த ஆளு? பென்ஜமின்னு சொன்னே? தெரியுமா உனக்கு?"

"காட்டிலே தோட்டத்துக்குச் சில சமயம் வருவான். ஒரு தடவை சரக்கு ஏத்திட்டுப் போன படகிலும் இருந்தான்."

"இவ்னோதுவனோ?"

"இந்தத் தொழில்ல ஒருத்தரைப் பற்றி ஒருத்தருக்கு ரொம்ப ஒண்ணும் தெரியாது. தெரியப்படுத்தவும் மாட்டாங்க. தெரிஞ்சுக்க பிரியப்படவும் மாட்டாங்க."

"அது சரி, ஆனா இதுக்காக நீ இவ்வளவு பயப்பட வேண்டியதில்லையே?"

"ஒரு சந்தர்ப்பத்துல தோட்டத்துல அவன் நடந்துக்கிட்ட விதத்தைப் பார்த்திருந்தா நீங்களும் நடுங்குவீங்க."

"உனக்கு அதைப் பற்றிப் பேச இஷ்டமில்லேன்னா வேண்டாம், சாப்பிடப் போவாம்."

"இல்லே, சொல்லிடறேன். அதே நினைவா இருந்தா சோறு இறங்காது."

காத்திருந்தான்.

"உங்களுக்குத் தெரியும். காட்டுக்கு மத்தில மறைவா தோட்டம்; பக்கத்துல ஃபாக்டரி. வெள்ளைப் பவுடர் உற்பத்தில, பாக்கெட் கணக்கு சரிப்பட்டு வரலை. ஒரு சின்ன பங்கு காணாமப் போயிட்டிருந்தது. நாலைஞ்சு நாள்ல கண்ணி வைச்சு கண்டுபிடிச்சுட்டாங்க. தோட்டத்துல கூலி வேலை செய்யற ஆதிவாசிப் பொண்ணு ஒருத்தி. டோலின்னு பேரு. ஃபாக்டரில அவளுக்கு ஒருத்தன் உதவி. தினம் ரெண்டு மூணு பாக்கட் மடியிலே அவ கட்டிட்டுப் போறதா தெரிஞ்சு போச்சு."

"ஹெராயின் போதைப் பொருள், தங்கம் மாதிரி யாச்சே! செம பணம். அதான் ஆசைப்பட்டுட்டா."

"அந்தச் சமயத்துல இந்த ராட்சசன் அங்க இருந்தான். வந்து ரெண்டு நாளாகியிருந்தது. விஷயம் கேள்விப்பட்டதும், 'நான் பார்த்துக்கறேன்; எங்கிட்ட விடுங்க'ன்னான். டோலி, வீட்டுக்குக் கிளம்பறப்ப வாசல்ல நின்னு, 'மடியை உதறு'ன்னான். கைல தைல மரத்தின் கிளை ஒண்ணு ஒடிச்சு வைச்சிருந்தான். அவ தயங்கினா. இவன் கையிலிருந்த குச்சியை தலைப்பில் செருகி இழுத்தான். தலைப்பு தளர, மடியிலிருந்து 'பொத்' 'பொத்'துன்னு பாக்கெட்டுங்க விழுந்துச்சு. எல்லாரும் பார்த்துட்டிருந்தாங்க. டோலிக்கு வெட்கமாப் போச்சு. ரோஷம் பொத்துக்கிச்சு. 'நீங்க செய்யறது மலையத்தனை திருட்டு; அதுக்குள்ள நடக்கற கடுகத்தனை சின்னத் திருட்டு இது.



கன்னம் வைச்சுக் கொள்ளையடிக்கிறவன், பிக்பாக்கெட்காரனுக்கு புத்தி சொல்ல வந்த மாதிரி இருக்கு. நகருய்யா, நேரமாவுது'ன்னு வீம்பா பேசிட்டா. இந்த தடியனுக்குக் கோபம் தலைக்கேறிடுச்சு. 'மடில மட்டும்தானா இன்னும் வேற எங்கியாச்சும் ஒளிச்சு வைச்சிருக்கியா'ன்னு கேட்டான். அவ அடுத்தாப்பல நடக்கப் போறதைப் புரிஞ்சுக்கிட்டா. ஒண்டி ஒடுங்கினா. ராட்சசன் விடலே. அங்கியே, அப்பவே அவளை அம்மணமாக்கி அடிச்சான். கையிலிருந்த விளாறு நார்நாரா கிழியற வரை அடிச்சான். அவ உடம்பு பூரா கறுப்புத் தரையிலே சிவப்புக் கோலம் போட்டது போல... மறுநாள் பள்ளத்தாக்கிலே குதிச்சு, பாறையிலே தலை மோத செத்துப் போனா. உடம்பு ரணத்தைப் பச்சிலை வைத்துக் கட்டி குணமாக்கியிருக்கலாம்; ஆனா அத்தனை பேர் எதிரே ஏற்பட்ட அவமானத்தை யாரால, எப்படி சரிப்படுத்த முடியும்?"

சின்னியின் முதுகை வருடிக் கொடுத்தான் இன்பா. "முகம் கழுவிட்டு வா, சாப்பிடலாம். நான் அம்மாவை எழுப்பி அழைச்சிட்டு வரேன்."

இரவு கட்டிலில் சாய்ந்தபடி பென்ஜமினின் படத்தைப் பார்த்தவாறே இன்பா


கி. ராஜேந்திரன்

யோசித்துக் கொண்டிருந்த போது, சாயாவின் கரம் நீண்டு அதை அவன் கையிலிருந்து உருவிப் பறக்க விட்டது. படம் காற்றில் மிதந்து மெல்லத் தரை இறங்குமுன் இவன் முகம் அவள் நெஞ்சில் புதைந்திருந்தது.

இன்பா புன்னகையுடன் சுற்றி வளைத்து அள்ளிக் கொண்டான். 'டென்ஷன்' மிகுந்த நாட்களில் எப்போதுமே சாயா இப்படித்தான் ஒண்டிக் கொண்டு பாதுகாப்பும் ஆதரவும் தேடுவாள். அது எப்படியோ போய் முடிவதும் உண்டு.

'என்றேனும் ஒருநாள் நிச்சயம் தாயாகப் போகிறவளே! எனக்குத் தகப்பன் என்ற அந்தஸ்தை தரப் போகிறவளே! உன்னை வாழ்த்துகிறேன். உனக்காக இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

வெகுகலபமாக பென்ஜ



மினின் படத்தை என்னிடமிருந்து பிடுங்கி எறிந்து விட்டாய். ஆனால் அவனால் நேரக் கூடிய அபாயங்களை நான் அல்லவோ எதிர் கொள்ள வேண்டும்? சின்னிக்கும் உனக்கும், அதைவிட நிச்சயமாக ரனியாவுக்கும் எப் போது என்ன துன்பம் இவனால் நேரக் கூடுமோ? நான் எச்சரிக்கையாக இருக்கிறேன், அன்பே! உனக்கு விவரங்கள் கூறி கலங்க அடிக்கப் போவதில்லை. இன்றைய உன் டென்ஷனை அதிகரிக்கப் போவதில்லை. கவ லையின்றி உறங்கு. என்னுடைய தூக்கத்தையும் சேர்த்து அனுபவி. நிம்மதியான நித்திரையில் ஆழ்ந்து போ...!'

மூன்றாவது நாள் அவன் அனுபமாவுக்கு போன் செய்த போது வீட்டுக்கு வரச் சொன் னாள்.

"ஏன்?"

"ஏற்கெனவே சொல்லியாச்சு. இங்கே சூழ் நிலை சரியில்லை." வைத்து விட்டாள்.

அவள் குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னதா கவே ஆவல் அவனை அழைத்துப் போனது. அசோக்நகரில் ஃபிளாட் ஸிஸ்டம் பிரபலமா வதற்கு முன் வீட்டுக்கு ஒரு மனை (ஒரு கிரவுண்டு) என்று ஒதுக்கிக் கட்டப்பட்ட இல் லங்களில் ஒன்று. நாலைந்து தென்னைகளுக் கும் ஒரு மாதுளைக்கும் ஒரு மாவுக்கும் கூட இடமிருந்தது தோட்டத்தில். அந்த அளவுக்கு வீடு சின்னது. அனுபமா உத்யோகத்தில் அமர்ந்த பிறகு, லோன் போட்டு மாடி போர் ஷன் கட்டியிருந்தார்கள். இரண்டு அறைகள்; பின்னால் திறந்தவெளி.

அனுவின் தகப்பனார் வரவேற்றார். "வா இன்பா, அப்பா சௌக்கியமா?"

பழசையெல்லாம் அவர் மறந்திருக்க முடி யாது. ஆனாலும் அவற்றால் பாதிக்கப்படா மலிருக்க அவர் எடுத்துக் கொண்ட முயற் சியை அவன் தனக்குள் பாராட்டி நன்றி செலுத்தினான். நேருஜி உருவாக்கிய theory of peaceful co-existence உலக நாடுகளுக்கு மட்டு மல்ல; மனித உள்ளங்களுக்கும் பொருந்தும். அனுபமாவின் காதலை இவன் காலால் எட்டி உதைத்ததை நினைத்து நினைத்துப் பகைமை பாராட்டுவதால் யாருக்கு என்ன லாபம்? வாழு வாழவிடு.

"அப்பாவும் சௌக்கியம், அவர் ரம்மியும் சௌக்கியம்" என்றான்.

"நான்ஸி ரேகன் எழுதிய புத்தகம் ஒண்ணு கிடைச்சுது. நினைவலைகள். அப்பாவுக்கு வேணும்னா படிக்க எடுத்துப் போ. ரேகன் என்னமோ சினிமா ஸ்டார் ஆனதால சுலபமா அமெரிக்க ஜனாதிபதியா வந்துட்டான்னு தான் நினைக்கிறோம். அதுக்கு முன்னாடி சினிமா துறைலயே தொழிற்சங்கத் தலைவனா இருந்திருக்கான்னு அவன் பெண்டாட்டி எழு தின இந்த புத்தகத்தைப் படிச்சாத்தான் தெரிய வருது. முதல்லே கவர்னரா வரதுக்கே எத் தனை பாடுபட்டிருக்கான், மனுஷன்? நம்ம ஊர் கதை மாதிரி இல்லே! அங்கே கிளாமர் மட்டும் போதாது!"

"அப்பாவுக்கு த்ரில்லர்தான் பிடிக்கும். கேட்டுட்டு வந்து வாங்கிப் போறேன்" என்றான்.

அனு உள்ளே நுழைந்தாள். "வா இன்பா. காப்பி சாப்பிடறியா?"

"நான் கொண்டு வரேன். நீங்க மாடில போய் பேசிட்டிருங்க" என்றார் ஆதிமூலம்.

உத்யோக ரீதியில் என்றாலும் அவர்கள் அந்தரங்கமாகப் பேச விரும்புவார்கள் என் பதைப் புரிந்து கொண்டிருந்தார்.

மொட்டை மாடியில் மோடாக்கள் எடுத்துப் போட்டு அமர்ந்தார்கள்.

"போலீஸ் டிபார்ட்மெண்ட் கீழே உன் னோட இலாகா வந்துட்டா என்ன? எதுக்கு இப்படி பயப்படுறே?" என்றான்.

"பயம் இல்லே. வருத்தம். சுதந்திரம் போயி ருச்சே. அதோட சத்தியமும் டாட்டா சொல் லிடும். இந்த மாதிரி ரிப்போர்ட் வேணும்னு கேட்டா, அந்தப் படிக்கு எழுதித் தர ஆராய்ச்சி எதுக்கு? விஞ்ஞானம் எதுக்கு?"

"ஏற்கெனவே ஹோம் மினிஸ்டிரி கீழே இருந்தப்ப மட்டும் என்னவாம்...?"

"அப்பவும் சில சமயம் தலையீடு இருக்கும்; ஆனா போலீஸ் மாதிரி அவ்வளவு மோசமா இருக்காது. எந்த கேஸானாலும் அதுல நேர டியா ஈடுபடறது போலீஸ் இல்லியா?"

"இப்பத்தான் அரசியல்வாதிக்கும் கிரிமி னலுக்கும் வித்தியாசம் இல்லாமப் போச்சே!"

"அதிகாரவர்க்கமோ, அரசியல்வாதியோ, போலீஸோ, ஆட்சி பீடமோ யாருடைய தலை யீடும் இல்லாம இருக்கிறதுக்காகத்தான் மேல் நாடுகள்ல ஃபாரின்ஸிக் இலாகாவை பல் கலைக் கழகத்துடன் இணைந்த ஆய்வுக் கூட மாக வைச்சிருக்காங்க. போலீஸ் இலாகாவுல மட்டுமின்றி, குற்றம் சுமத்தப்பட்டிருப்பவர் சார்பிலே வாதாடற வக்கீல் கூட ஆய்வுப் பணிகளைக் கொடுத்து ரிஸல்ட் வாங்கிப் போவாங்க. ரெண்டு தரப்புக்கும் நடுநிலையா தடய ஆய்வுத் துறை இயங்கும்."

"தனியார்துறைல கூட உண்டு இல்லியா?"

"ஆமாம். அவங்களிடமும் போலீஸ் ஆலோ சனை கேட்கும்; ஆய்வு அறிக்கை கோரும். இங்கதான் எல்லாம் தலைகீழா நடக்குது."

"போகட்டும்; நம்ம விஷயத்துக்கு வா. நான் ஒரு பொட்டலம் தந்தேன். பிரிச்சுப் பார்த் தியா? என்ன தெரிஞ்சுது...?"

"டி.என். ஏங்கறது மனிதனுக்கு மனிதன் வேறுபடும். இரட்டைக் குழந்தைகளுக்குக் கூட

டி.என்.ஏ. மாறுபடும். ஒரே முட்டையிலிருந்து உருவான இரட்டைக் குழந்தைகள் என்றால் மட்டுமே டி.என்.ஏ. ஒரே மாதிரி இருக்கும். அதாவது குரோமோசோம்..."

"இத பாரு, நீ மூணு வருஷம் பி.எஸ்ஸி முடிச்சு, ரெண்டு வருஷம் எம்.எஸ்ஸி ஃபாரின்ஸிக் ஸைன்ஸ் படிச்சு, இப்ப பிஹெச்.டி. ஆராய்ச்சி கூட பண்ணறேங்கறது எனக்கு ஏற்கெனவே தெரியும்...."

"அதனால, 'விஞ்ஞான விவரங்களை விட்டுட்டு விஷயத்துக்கு வா; என்ன கண்டு பிடிச்சே, சொல்லு'ங்கறே, அதானே?"

"அதே! உன் ஆராய்ச்சிகளையெல்லாம் சொல்லி அறுக்காதே!"

"ஓகே! கேட்டுக்க. விரல் ரேகை அடையாளங்கள் எடுத்திருக்கேன். ஆனா அதை ஒப்பிட்டுப் பார்க்கணும்னா இவன் ஏற்கெனவே குற்றவாளியா இருந்து, இவன் விரல் ரேகை அடையாளங்கள் போலீஸ் ஃபைல்ல இருக்கணும். அப்படி இருந்தாலும் அதுங்கிட்ட நெருங்க முடியாது. 'ஏன், எதுக்கு' என்கிற கேள்விகள் எழும். 'சி.பி.ஐ.ல கேட்கிறாங்க'ன்னா ஒத்துழைப்பு கிடைக்காது."

"சரி, நான் சீஃப்கிட்ட பேசி, அஃபிஷியல் அப்ரோச்சுக்கு முயற்சி பண்றேன். ஃபிங்கர் பிரிண்ட் செக்ஷன்ல யார் இன்சார்ஜ்னு பார்க்கறேன். மேலே...?"

"போதைப் பொருள்கள் தடுப்புக்கு இருக்கிற மாதிரி குண்டுவெடிக்கிற குண்டர்களுக்கும் தனியா ஒரு பிரிவையே உருவாக்கணும்; அப்பத்தான் இவங்களோட ஜாதகமெல்லாம் சேகரிக்க முடியும். சொல்லிச் சொல்லி அலுத்துப் போச்சு; செவிடன் காதுல ஊதின சங்கு...."

"இல்லாததைப் பற்றி எதுக்குப் புலம்பறே? என்ன தகவல் கிடைச்சது, அதைச் சொல்லேன்!"

"கேட்டுக்கிட்டு ஓடிடுவே. அப்புறம் உங்கிட்ட சற்று நேரமாவது எப்படி பேசறது? அதுக்காகத்தான் இல்லாததையும் பொல்லாததையும் இழுக்கிறது" என்று கூறியபடியே வந்த ஆதிமூலம், காப்பி கோப்பைகளைத் தட்டுடன் தரையில் வைத்து விட்டுத் திரும்பினார்.

அவர் உண்மையை விண்டு உரைக்க, இருவருமே மறைத்து வைக்கப்பட்ட மன உணர்வுகள் காட்சிப் பொருள் ஆனதாய் உணர்ந்தார்கள். ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளவும் கூசி, வேறு பக்கம் நோக்கினார்கள். மாமரத்துக் குயில் தன் மாலை நேரத்துச் சோக கீதத்தை ஆரம்பித்தது. திரும்பத் திரும்ப ஒரே பல்லவியைத் தொண்டை கட்டும் வரை பாடித் தீர்த்தது.

அவள் புடைவைத் தலைப்பால் கண்ணீரைத் துடைத்துக் கொள்வதைக் கவனியாதவன் போல அவன் காப்பியை ருசித்தான். மௌனமாக காப்பி அருந்தி முடியும் வரை காத்திருந்து, "சரி, குறிச்சுக்க" என்றாள்.

"ஒண்ணு : அவன் தொழிலாளி. மம்மட்டியோ அல்லது சுத்தியலோ புடிச்சு வேலை செய்து காய்ச்சிப் போன விரல்கள். ரெண்டு : அவன் பயன்படுத்தியது நவீன ஆர்.டி.எக்ஸ். இல்லே. சாதா ஜெலடின்தான். இரண்டுக்கும் என்ன வித்தியாசம்னு சொல்ல ஆரம்பிச்சா மறுபடி 'போர் அடிக்குது'ன்னு சண்டைக்கு வருவே. சுருக்கமா ஆர்.டி.எக்ஸ். தனு உபயோகிச்சது; ராஜீவை அமரராக்கியது. ஜெலடின்றது சாதாரணமா குவாரியிலே உபயோகப் படுத்தறது. டைனமட்னும் சொல்லுவாங்க. பாறைகளைப் பெயர்க்க ஃபியூஸ் வைச்சு வெடிப்பாங்க. இவன் குவாரியிலே கல்லுடைச்சவனா இருக்கலாம். அங்கிருந்து ஜெலடின் ஸ்டிக்ஸ் திருடிட்டு வந்திருக்கலாம். ஃபியூஸ் வைச்சானோ, டெடனேட்டர் பயன்படுத்தினானோ, அனுபவம் போதாமல் தப்பு செய்துட்டான். அவன் எதிர்பார்த்ததை விட சீக்கிரமா வெடிச்சு, சிதற அடிச்சுடுச்சு. பயிற்சி கொடுத்தவன் சரியா சொல்லித் தரலை, அல்லது அலட்சியம். ஏதோ ஒண்ணு. மனித உயிருக்கு மரியாதை இல்லே."

"நீ சொல்றது பொருந்தி வருது. அவனோட இன்னொருத்தன் வந்திருந்தான். பெஞ்ஜமின். ராட்சசன்."

"மூணு : கரத்திலே பழைய காயத்தோட வடு ஏதுமில்லே. மோதிரம், மருதாணிக் கறைன்னு ஒண்ணும் காணோம். அதனால இதையெல்லாம் தொடர்புபடுத்திப் பார்க்க முடியாது. ஆனா, கருகிய நிலையிலும் கெமிக்கல் பயன்படுத்திப் பார்த்தா, பச்சை குத்தின இடம் ஒண்ணு இலேசா தெரியுது..."

இன்பா ஆர்வமானான். முன்னுக்குச் சாய்ந்து "சொல்லு! சொல்லு!" என்று அவசரப் படுத்தினான்.


(தொடரும்)



விலைவாசி உயர்வும், ரிஸர்வ் வங்கி கவர்னர் பதவியும் முடிச்சுப் போடப்பட்டுள்ள ஒரு நாடு உள்ளதென்றால் ஆச்சர்யமாக இருக்கிறதா? நியூஸிலாந்து நாடுதான் அது.

விலைவாசி உயர்வு ஒரு குறிப்பிட்ட அளவைத் தாண்டி விட்டால், அந்த கவர்னர் தாமாகவே பதவியை விட்டு விட வேண்டும் என்று ஒரு சட்டம் உள்ளது.

தகவல் : A. சுந்தரம்





1995 செப்டம்பர் 10
யுவ ஆவணி 25
மலர் : 54
இதழ் : 6

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிட்டி பாப்பா — பாரதியார்.




என்.டி.ஆரின் வீழ்ச்சி: ஆணவத்தின் எதிரொலி!

ஆந்திராவில் அபரிமிதப் பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்த என்.டி.ஆர். அரசு, அற்ப ஆயுளில் வீழ்ந்து விட்டது.

இந்த நாடகம் உணர்த்தும் பாடங்கள், எல்லா அரசியல்வாதிகளுக்குமான எச்சரிக்கை.

தமது சொந்த வாழ்க்கையை அரசியலுடன் இணைத்து, பெரும் குழப்பம் உண்டாக்கிவிட்டார் ராமராவ். லக்ஷ்மி பார்வதி, ராமராவின் வலக்கரமாக இருந்து உணவு ஊட்டியிருக்கலாம். ஆனால் அதே கைகள்தான் அதிருப்தி எம்.எல்.ஏக்கள் மீது செருப்பைக் கழற்றி வீசியிருக்கின்றன. இத்தகைய நடத்தையும் அதை அனுமதிக்கும் ஆணவமும் வீழ்ச்சியைத் தவிர வேறெதற்கும் வழி வகுக்க முடியாது.

மறுபடி தேர்தல் அறிவித்து, பணம் விரயம் செய்யாமல், சீரிய சிந்தனையுடன் செயல்பட்டிருக்கிறார் ஆளுனர் கிருஷ்ணகாந்த். அந்தப் பதவியின் முக்கியத்துவம் மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது.



அகம்பாவம் என்.டி.ஆரை வீழ்த்தியுள்ளது என்றாலும், பெரும்பான்மை பெற்றுள்ள சந்திரபாபு நாயுடு, அதை நேர்மையான முறையில் அடையவில்லை என்பதே உண்மை.

சட்டசபையில் குடுமிப்பிடி சண்டைகள் தொடரும். என்.டி.ஆரைக் கட்சியிலிருந்தே வெளியேற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம். அந்த காலகட்டத்தில் மக்களின் அனுதாபம் முழுதும் ராமராவ் பக்கமே சரியும்.

மக்கள் ஆதரவுடன் தலைமை ஏற்பவர்கள், இதர தலைவர்களை அரவணைத்தும் அவ்வப்போது விட்டுக் கொடுத்தும் போனாலன்றி, அரசியலில் பெரிதாக எதையும் சாதிக்க முடியாது.


மாவீரர் மறைந்தார்!

ரத்தவெள்ளம் ஓடிய பஞ்சாபை அமைதிப் பூங்காவாக மாற்றிய மாவீரர் பியாந்த் சிங், அநியாயமாக, குரூரமாகக் கொலை செய்யப்பட்டிருக்கிறார்.

இந்தப் பாதகச் செயலுக்குப் பொறுப்பேற்று அறிக்கை விடுத்திருக்கிறது 'பாபர் கல்சா' அமைப்பு.

சி.பி.ஐ. விசாரணையின் முடிவில் இந்த கொடுமைக்குப் பாகிஸ்தான் தூண்டுதலாக இருந்தது என்று தெரிய வந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

பாதுகாப்பைப் பலப்படுத்தி, எச்சரிக்கையாக இருந்தால் மட்டுமே பயங்கரவாதத்தை வென்றுவிட முடியாது. திட்டமிட்ட சதிக்கு பியாந்த் சிங் பலியாகியிருப்பது, இதை மேலும் அழுத்தமாக உணர்த்துகிறது.



காவல் துறையும் உளவுத் துறையும் இணைந்து பயங்கரவாதத்தை எதிர்க்கும் அதே நேரத்தில், அயல்நாட்டு விவகார அமைச்சகம், அண்டை நாடுகளுடன் உறவுகளைப் பலப்படுத்திக் கொள்ள நேசக்கரம் நீட்ட வேண்டும். இதற்காகப் பழைய பகைமை மறந்து, பிடிவாதம் தளர்த்தி, ஓரளவு விட்டுக் கொடுப்பதுகூட வரவேற்கத்தக்கதே.


ரஜினிக்கு விரித்த ரத்தினக் கம்பளம்

வெகு சமீப காலம்வரை தமிழக ஆளுனருடன் நேரடியான தொடர்பைத் தவிர்த்த ஜெயலலிதா, ஆர்.எம்.வீயை வெளியேற்ற வேண்டும் என்பதற்காகத் தாமே ராஜ்பவனுக்குச் சென்றிருக்கிறார். வீரப்பனை வெளியேற்றுவதில் முதல்வர் எவ்வளவு குறியாயிருந்திருக்கிறார் என்பதை இச் செய்கை உணர்த்துகிறது.

ஆனால் ஆர்.எம்.வீரப்பனின் அமைச்சர் பதவியைப் பறித்ததன் மூலம் ரஜினியின் அரசியல் பிரவேசத்திற்கு ரத்தினக் கம்பளம் விரித்துள்ளார் ஜெயலலிதா.

ஜானகி அணி மீண்டும் உயிர்பெற்று தமிழக அரசியலில் திருப்பங்களை ஏற்படுத்தும். அந்தத் திருப்பங்களின் முடிவில் ஜெயலலிதா இருக்கும் இடமே தெரியாமல் போகும் சாத்தியக்கூறுகள் மிக அதிகம்.

யானை தன் தலையில் தானே மண் அள்ளிப் போட்டுக் கொள்வது போன்றது முதல்வரின் செய்கை. அவர் இவ்வாறு ராஜதந்திரமின்றிச் செயல்படுவது இது முதல் முறையுமல்ல...!



பார்லிமெண்ட்டில் திடீரென்று ஒருநாள் சரண்சிங் அதிரடி அறிவிப்பு ஒன்று செய்து விட்டார்.

"நாங்கள் இந்திரா ஆட்சியில் (எமர்ஜென்ஸி சமயம்) சிறையிலிருந்த சமயம், இந்திரா எங்கள் உணவில் விஷம் கலந்து, கொல்ல முயற்சி செய்திருக்கிறார் என்று எனக்குத் தகவல் வந்திருக்கிறது!" அதிர்ந்து விட்டது பார்லிமெண்ட்!

5

ஊழல்

கடந்த சில வாரங்களில், இத் தொடரில், ஆங்காங்கே சந்திக்க நேர்ந்த சரண்சிங்கை இந்த வாரம் சற்று உள்ளார்ந்து பார்க்கலாம். அது அவசிய மும் கூட! ஏனெனில், பொது வாழ்வில் கறை படியாமல் வாழ விரும்பிய - வாழ்ந்து காட்டிய நம் நாட்டின் மிகச் சில அரசியல்வாதிகளுள் அவரும் ஒருவர்.

1977-ல் சி.பி.ஐ. இயக்குநராகப் பொறுப்பு ஏற்கும் முன் எந்த சந்தர்ப்பத்திலும் அவரை நான் சந்தித்ததில்லை. ஆனால் நிறைய கேள் விப்பட்டிருந்தேன்.

மக்கள் பணிக்காக, பொது வாழ்க்கையில் ஈடுபடுபவர், வாழ்வின் எந்த ஒரு நெருக்கடி யான கட்டத்திலும் ஊழலே செய்யாதிருப்பது தான் மக்கள் நம்பிக்கையை இழக்காதிருக்க ஒரே வழி என்று அவர் தீவிரமாக நம்பினார். அதோடு கூட, இயல்பாகவே ஆட்சி மட்டங் களில் நிலவிய சீரழிவுகளை அவர் மிகவும் வெறுத்தார். 'நான், ஏழைகளுக்காக உழைப் பவன்; ஊழலுக்கு எதிரானவன்' என்பதைத் தமது ஒவ்வொரு சொல்லிலும் செயலிலும் காட்டி வந்தார். இதனாலேயே அவரை யாருக்கும் பிடிக்காமல் போனதுதான் வேத னையான விஷயம்.

ஒரு சந்தர்ப்பத்தில் அவரே என்னிடம் இப்படி தமாஷாகக் குறிப்பிட்டிருக்கிறார் :

"நரசிம்மன்ஜி! உலகிலேயே நான்தான் கம்யூனிஸ்டுகளாலும் காப்பிடலிஸ்டுகளா லும் சேர்ந்தாற்போல வெறுக்கப்படும் ஒரே ஆள் என்று நினைக்கிறேன்!"

சரண்சிங் இதனை விளையாட்டாகச் சொன்னாலும், மிகவும் ஆழமாக யோசிக்க வேண்டிய கருத்து இது. பொது உடைமைவாதிகளும் முதலாளித் துவப் பிரதிநிதிகளும் இரு வேறு துரு வங்கள். இதில், இருவருக்கும் பிடிக்காத ஒரு விஷயம் இருப்பதென்பது அபூர்வம். அந்த 'ஒரு விஷயம்', 'ஊழலுக்கு எதிரான போக்கு' என்று அவர் குறிப்பிட்டது எத்தனை வேதனையான கருத்து!

ஊழல் ஒழிப்பில் அவருக்கு இருந்த வெறி, வேகம், ஈடுபாடு - வேறெந்த ஓர் அமைச்சரிடமும் நான் பார்த்த தில்லை.

சரண்சிங்குக்கு எப்போதும் போலீஸ் துறையின் மீது அலாதி பற்று. மக்கள் பணியில் அவர்கள்தாம் நேரடியாக ஈடுபடுபவர்கள் என்பதுதான் காரணம். திறமையான - நேர்மை யான போலீஸ் ஆபீசர்களை அவருக்கு மிகவும் பிடிக்கும்.

சாதாரணமாக அமைச்சர்கள் தமது சிறப்பு உதவியாளராக ஐ.ஏ.எஸ். ஆபீசர்களையே வைத்துக் கொள்வது வழக்கம். சரண்சிங்தான் முதன் முதலில் தமது ஸ்பெஷல் அஸிஸ் டெண்ட்டாக ஒரு ஐ.பி.எஸ். ஆபீசரை (விஜய கரன்) நியமித்தார்!

சாதாரணமாக போலீஸ் ஸ்டேஷன் களில், கொடுக்கப்படும் புகார்கள் அனைத்

துமே பதிவு செய்யப்படுவதில்லை. குறிப்பாக, அரசியல் அல்லது நிர்வாக செல்வாக்கோ, சமூக அந்தஸ்தோ துளியும் இல்லாதவர்கள், சமூகத்தில் நலிந்த பிரிவைச் சேர்ந்தவர்கள் போன்றோர் கொடுக்கும் புகார்கள் பெரும்பாலும் பதிவாவது இல்லை. இது இன்றல்ல - என்றைக்கும் எங்கேயும் நடக்கிற விஷயம்தான்!

61–62ல் உத்தரப் பிரதேச உள்துறை அமைச்சராக இருந்த சரண்சிங், தம் மாநில அளவிலாவது இந்நிலையை மாற்றியாக வேண்டும் என்று உறுதி கொண்டார். அப்போது உ.பி.யில் ஐ.ஜி.யாக இருந்த சாந்தி பிரசாத் என்பவர் துணையுடன், போலீஸ் துறையை முடுக்கி விட்டார். கேஸ் பதிவாவது கட்டாயமாக்கப்பட்டது.

ஓர் உதாரணம் பாருங்கள். 1960-ல் மாநிலம் முழுதும் 62,610 குற்றங்கள் பதிவாகி இருந்தன. அதுவே 61ல் 99,756 ஆனது!

இதனை, 'குற்றங்களின் எண்ணிக்கை அதிகமாகி இருக்கிறது' என்று தவறாகக் கருதி விட இடமிருக்கிறது! தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். நடக்கிற குற்றங்களை உண்மையாகப் பதிவு செய்கிற கணக்குத்தான் இது!

1970-ல் அவர் உத்தரப்பிரதேச முதல் மந்திரி ஆன போதும் இப்படியேதான். தமது நேரடி கவனத்தில் போலீஸ் துறையை இருத்திக் கொண்டார். அத்தனை ஆவல் அவருக்கு!

ாவது கண்

அதனால்தான் ஜனதா அரசில் மத்திய உள்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், 'தேசிய போலீஸ் கமிஷன்' என்ற அமைப்பை உருவாக்குவதில் வெகு தீவிரம் காட்டினார் சரண்சிங்.

மொத்தம் ஆறு பேர் கொண்ட அக் கமிஷனின் சேர்மன் முன்னாள் வங்காள கவர்னர் தர்மவீரா என்பவர். பழுத்த அனுபவம் கொண்ட ஐ.சி.எஸ். அதிகாரி. மற்ற ஐந்து உறுப்பினர்கள் : ஜஸ்டிஸ் கிருஷ்ணசாமி ரெட்டியார், எல்லைப் பாதுகாப்புப் படையின் முன்னாள் டி.ஜி. ருஸ்டம்ஜி, உத்தரபிரதேச முன்னாள் ஐ.ஜி. சக்ஸேனா, சமூக அறிவியல் வல்லுனர் டாக்டர் எம்.எஸ். கோரே மற்றும் நான்.

கமிஷனின் உறுப்பினராக மட்டுமல்லாமல், அதன் செயலர் பணியையும் நான் ஏற்றதால் அதன் முடிவுகளையும், பரிந்துரைகளையும், அறிக்கைகளையும் உருவாக்கும் பொறுப்பு என்னுடையதாயிற்று. இதை நான் ஒரு பெரிய சவாலாகவும் வாய்ப்பாகவும் எடுத்துக் கொண்டேன்.

போலீஸ் துறையைச் சீரமைக்கும் நோக்கில், மூன்று வருடங்கள் இயங்கி, எட்டு அறிக்கைகளைச் சமர்ப்பித்தது எங்கள் குழு. மிகவும் ஆழ்ந்து சிந்தித்து, செயல்படுத்தினால் நல்ல பயன் தரக்கூடிய வழிமுறைகளைக் கொண்ட அறிக்கைகள் அவை!

மேலும் ஒரு வருடம் ஜனதா அரசு இருந்திருந்தால் எங்கள் அறிக்கைகளுக்கு சரண்சிங் கட்டாயம் உயிர்கொடுத்திருப்பார்! அதற்கு வழி இல்லாததால் அந்த அறிக்கைகள் கிடப்பில் போடப்பட்டன!

இன்றைக்கும் கூட –

புதிய, அடிப்படையான மாற்றங்களை மனமுவந்து ஏற்கக்கூடிய ஓர் அரசு வருமானால் – அன்றைய எங்கள் அறிக்கை – இப்போதும் நல்ல பயன் தருவதாகவே இருக்கும்!

சரண்சிங்கிடம் எனக்கு மிகவும் பிடித்த விஷயம் –

அவருக்கு எதிரான கருத்துக்களைக் கூட அவரிடமே நேரடியாகப் பேசலாம் என்பது! இரண்டு உதாரணங்கள் சொல்லத் தோன்றுகிறது.

இந்திராகாந்தி கைதான சந்தர்ப்பத்தில் சரண்சிங் என்னிடம், "நரசிம்மன்ஜி, இந்திராவை நாம் ஏன் திகார் ஜெயிலிலேயே காவல் வைக்கக் கூடாது?" என்று ஆரம்பித்தார். (1975 – இந்திரா ஆட்சியில், எமர்ஜென்ஸியின் போது, சரண்சிங்கை திகார் ஜெயிலில்தான் வைத்தார்கள் என்பதை இங்கே நினைவு கொள்ள வேண்டும்!)

நான் உடனே மறுத்தேன். தீர்மானமாக, குற்றம் நிரூபிக்கப்பட்டு, தண்டனை அளிக்கப்பட்ட நபர்களை மட்டுமே திகாரில் அடைக்க முடியும். அல்லது 'மிசா' போன்ற தடுப்புக் காவல் சட்டங்களின் கீழ் கைதாகிறவர்களைத்தான் வைக்க முடியும். இந்த இரண்டிலும் அல்லாமல், வெறுமனே ரிமாண்டில் கைதாகிறவர்களையெல்லாம் அங்கே சிறை வைக்க முடியாது! இது சட்டம்.

இதனை நான் சரண்சிங்குக்கு நினைவூட்டினேன். அதுவும் போதாமல் ஆதாரங்களுடன்

> • பல அறிஞர்களுடன் உறவாடினால் நீயும் அறிஞனாகிறாய். பல பணக்காரர்களுடன் உறவாடினால் பணக்காரனாக மாட்டாய்.
>
> — எபிக்டெட்டஸ்; தகவல் : ஆர். பார்த்திபன்
>
> • ஜப்பானியர்கள் கவிதை மோகம் கொண்டவர்கள். கடைகளில் உள்ள விளம்பரப் பலகைகள், பத்திரிகை விளம்பரங்களில் எல்லாம் கவிதைகள் பயன்படுத்தப்படுகிறது. அங்கு முழுக்க முழுக்க கவிதைகளைக் கொண்ட வார, மாத இதழ்கள் 102 வெளி வருகின்றன.
>
> — ஒரு ஜப்பானிய இதழிலிருந்து: ரமா ராமநாதன்

ஒரு குறிப்பும் அனுப்பினேன்.

பதில் பேசாமல் ஏற்றுக் கொண்டார்! அப்புறம்தான் இந்திராவை பரிதாபாத்துக்குக் கொண்டு போக முடிவு செய்ததும், முடியாமல், மீண்டும் டெல்லிக்குத் திரும்பி 'கிங்ஸ்வே காம்ப்'பில் ஓரிரவு தங்க வைத்ததும் நடந்தது!

இன்னொரு சம்பவம், வேடிக்கையானது!

பார்லிமென்ட்டில் திடீரென்று ஒருநாள் சரண்சிங் அதிரடி அறிவிப்பு ஒன்று செய்து விட்டார்.

"நாங்கள் இந்திரா ஆட்சியில் (எமர்ஜென்ஸி சமயம்) சிறையிலிருந்த சமயம், இந்திரா எங்கள் உணவில் விஷம் கலந்து, கொல்ல முயற்சி செய்திருக்கிறார் என்று எனக்குத் தகவல் வந்திருக்கிறது!"

அதிர்ந்து விட்டது பார்லிமென்ட்! திடீரென்று இப்படி ஒரு அறிவிப்பை யார் எதிர்பார்த்திருக்க முடியும்?

சொன்ன கையோடு என்னைக் கூப்பிட்டனுப்பினார். நானும் போனேன்.

"நரசிம்மன்ஜி, இப்படி ஒரு செய்தி எனக்கு வந்திருக்கிறது. பார்லிமென்ட்டிலும் சொல்லி விட்டேன். நீங்கள் இதைப் புலன் விசாரித்து விரைவில் எனக்கு அறிக்கை தர வேண்டும்!"

எங்கிருந்து, யார் மூலம், எப்படி அவருக்கு அந்தத் தகவல் வந்தது என்கிற விஷயங்களையெல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்டேன்! மிகச் சிறந்த சில டிடெக்டிவ் ஆபீசர்களைத் தேர்ந்தெடுத்து ஆக்ரா, அலகாபாத், கோரக்பூர் என்று திசைக்கொருவராக அனுப்பினேன்.

மூன்று நாளில் என் டிடெக்டிவ் ஆபீசர்கள் திரும்பி வந்து, அவர்கள் விசாரணையின் முடிவைத் தந்தார்கள்.

சரண்சிங்குக்குக் கிடைத்த தகவல் முற்றிலும் பொய் எனத் தெரிந்தது.

சி.பி.ஐ. சேகரித்த விவரங்களை நான் சரண்சிங் முன்வைத்து, அவருக்குக் கிடைத்த தகவல்கள் ஆதாரமற்றவை என்பதை விளக்கினேன்.

"அப்படியா சொல்கிறீர்கள்?"

"ஆமாம்! உறுதியாக!"

"அப்படி என்றால் சரி!"

அத்தோடு விட்டு விட்டார்! பார்லிமென்ட்டில் அறிவித்து விட்டோமே, நாளை கேள்வி எழும்புமே, மாற்றிச் சொன்னால் விவாதம் எழுமே என்றெல்லாம் அவர் கவலைப்படவில்லை! 'ஆராயப்பட்டு ஓர் உண்மை அறிவிக்கப்படுகிறதென்றால் அதை ஏற்பதே கடமை' என்று அவர் நம்பிச் செயல்பட்டார்!

தமது straight forward நடவடிக்கைகளால் பொது வாழ்வில் மட்டுமல்ல; வீட்டிலும் அவர் சிம்ம சொப்பனமாகவே இருந்ததை நான் அறிவேன்.

சரண்சிங் குடும்பத்திற்கு மிகவும் தெரிந்த ஒருவர் சி.பி.ஐ.யின் 'பிராஸிக்யூட்டிங் பிராஞ்ச்'சில் அஸிஸ்டென்ட் பிராஸிக்யூட்டராக இருந்தார். லக்னோவில் பணியாற்றிக் கொண்டிருந்த அவர், தன் குடும்பச் சூழ்நிலையை முன்னிட்டு வேறெங்கோ டிரான்ஸ்ஃபர் கேட்டிருந்த மனு, என் பார்வைக்கு வந்தது.

திருமதி சரண்சிங்கிடம் தம் குடும்ப நிலையை விளக்கி, தனக்கு டிரான்ஸ்ஃபர் வாங்கித் தருமாறு வற்புறுத்தியிருப்பார் போலிருக்கிறது. திருமதி சரண்சிங், தம் கணவரின் ஸ்பெஷல் அஸிஸ்டென்ட்டிடம் இப்படிச் சொன்னார் :

"நீங்கள் சி.பி.ஐ. இயக்குநரிடம் பேசிப் பாருங்கள். முடிந்தால், வாய்ப்பு இருக்குமானால், பிரச்னை ஏதும் இல்லையென்றால் இவரது டிரான்ஸ்ஃபருக்கு உண்டானதைச் செய்ய முடியுமா என்று கேட்டுப் பாருங்கள். ஆனால் எக்காரணம் கொண்டும் இவ்விஷயம் என் கணவருக்குத் தெரிய வேண்டாம். அவர் இதுபோன்ற நடவடிக்கைகளை அறவே விரும்ப மாட்டார்!"

அதுதான் சரண்சிங்!

இன்றைய அரசியல் சூழ்நிலையை, அரசியல் புகும் இடங்களில் நேரும் அவலங்களை இதனோடு ஒப்பிட்டுப் பாருங்கள்! வேதனை கலந்த சிரிப்பு வரவில்லை?

என் பணிக்காலத்தில், தமது நேர்மையான நடவடிக்கைகளால் எனக்கு பிரமிப்பு ஏற்படுத்திய இன்னொருவர் உண்டு. அவர் வாழ்ந்த காலத்தில், அவருக்குக் கீழே பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தது பற்றி இன்றளவும் – நினைக்கும்போதெல்லாம் பெருமிதம் பொங்குகிறது; மெய்சிலிர்க்கிறது!

அவர் –

காமராஜர்!

அப்பா... எப்பேர்ப்பட்ட தலைவர் அவர்!

(அடுத்த வாரம்)



கோலாகலத் திருமணம்!

கல்கி வாசகர்களுக்கு ஒரு குடும்ப நிகழ்ச்சியைத் தெரிவித்து, மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறோம்.

மணமகன் செல்வன் ஹரி கிருஷ்ணன் :

ஸ்ரீ சதாசிவம், ஸ்ரீமதி எம்.எஸ். சுப்புலட்சுமி தம்பதியின் பேரன். கல்கி பத்திரிகையின் நிர்வாக ஆசிரியர் கி. ராஜேந்திரனின் புதல்வன். அமரர் "கல்கி" அவர்களின் பேரன்.

மணமகள் செல்வி ப்ரியா :

கர்நாடக அரசில் மிகச் சிறந்த கல்வியாளராகப் பணியாற்றிய அமரர் ஏ.வி. தேவேகௌடா அவர்களின் பேத்தி. சிக்மகளூர் காப்பி தோட்ட அதிபர் ஸ்ரீ ஏ.டி. சந்திரசேகர் அவர்களின் புத்திரி.

ஹரி கிருஷ்ணன் - ப்ரியா திருமணம் சென்னை காஞ்சி ஹோட்டல் கல்யாண மண்டபத்தில் ஆகஸ்டு 28 ம் தேதி விமரிசையாக நடைபெற்றது.

சென்னை நகரப் பிரமுகர்களும் தொழிலதிபர்களும் எழுத்தாளர்களும் அதிகாரிகளும் இசைக் கலைஞர்களும் மற்றும் நண்பர்களும் உறவினர்களும் பெருந்திரளாக வந்திருந்து மணமக்களை வாழ்த்தினர்.

வரவேற்பு வைபவத்தில் ஸ்ரீ டி.வி. சங்கரநாராயணன் கான மழை பொழிந்தார். அமரர் "கல்கி" அவர்களின் சாகித்தியமான "வண்டாடும் சோலை" பாடிய போது அனைவரும் மெய்சிலிர்த்து மகிழ்ந்தனர். ஸ்ரீ டி.கே. மூர்த்தியும் (மிருதங்கம்) ஸ்ரீ எம். சந்திரசேகரனும் (வயலின்) பக்கவாத்தியம் வாசித்துச் சிறப்பித்தனர்.

முகூர்த்த சமயத்தில் ஸ்ரீ டி.எஸ். லட்சப்பா பிள்ளையின் நாதஸ்வரம் மங்கள இசையாக ஒலித்தது.

மணமக்களுக்கு கல்கி வாசகர்களின் நல்லாசிகளைக் கோருகிறோம்.



உறவுகள் தொடரட்டும் மகிழ்ச்சிகள் பெருகட்டும்

* காலம் காலமாய் நிலைத்திருக்கும் உறவுகள் இனிமையானவை.
* ஸ்ரீராம் சிட்ஸ்க்கும் அதன் 10 லட்சம் சந்தாதாரர்களுக்குமிடையே நிலைத்து நீடிக்கும் உறவைப்போல.
* உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள சுலபமான வாய்ப்பை ஸ்ரீராம் அளித்து வருகிறது. இன்று நேற்றல்ல; கடந்த 22 வருடங்களாக.
* கௌரவமான முறையில் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்ளும் வாய்ப்பு. தேவைகளுக்கும் வசதிகளுக்கும் ஏற்ப விரைவாக உங்கள் பணத்தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள உதவும் வாய்ப்பு.
* குடும்பத்தின் ஒரு தலைமுறையோடு நின்று விடுவதில்லை. அடுத்த, அதற்கடுத்த தலைமுறைக்கும் தொடர்கிறது.

திருமதி எம். சித்ரா சான்று கூறுகிறார்:

"எந்தவொரு நெருக்கடியையும் எதிர்பார்த்து முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும். என் அப்பாவிடமிருந்து தெரிந்து கொண்டது இது. அந்த நிகழ்ச்சி:-

நிலத்துக்காக வாங்கியிருந்த 10,000 ரூபாய் கடனை உடனே அடைக்க வேண்டிய அவசரம். பணம் செலுத்தாவிட்டால் ஜப்தி" என்கிற பயமுறுத்தல் வேறு. அப்பா கலங்கவில்லை. ஸ்ரீராமில் அவர் சீட்டு கட்டி வந்தார். அது இந்த நெருக்கடியிலிருந்து அவரைக் காப்பாற்றியது.



இது என் மனத்தில் ஆழப்பதிந்து விட்டது. நானும் ஸ்ரீராமில் சீட்டு கட்டி வந்தேன். திடீரென எனக்கு உடல் நலக்குறைவு. அறுவை சிகிச்சை தேவை என்றார்கள். பணத்துக்கு என்ன செய்வது என்றெல்லாம் நான் கவலைப்படவில்லை. ஸ்ரீராம் சீட்டு இருக்கிறது என்கிற தைரியம். அது இப்போது உதவியது.

-எம். சித்ரா,
மன்னார்குடி - 614 001."

தொடரும் இனிய உறவுகள்!

* நிலைத்து நீடிக்கும் இத்தகைய உறவுகள் ஒரு குடும்பத்தோடு நின்றுவிடுவதில்லை. சமூக நடவடிக்கையாக, சமுதாயப் பண்பாடாகப் பல்வேறு வடிவங்களில் இடம் பெற்று வருகின்றன. அந்த இனிய பண்பாட்டுக்கு ஸ்ரீராம் தலை வணங்குகிறது.

மகிழ்ச்சிப் பயணத்தில் தொடங்கிய நண்பர்கள் மனமகிழ் குழு

சுற்றுலா செல்வதில் ஆர்வம் நிறைந்த 5 நண்பர்கள். இவர்கள் ஒன்று சேர்ந்து சீட்டுப்பிடித்து 68 நண்பர்கள் உறுப்பினர்களுடன் தொடங்கிய மகிழ்ச்சிப் பயணம் இன்று 'நண்பர்கள் மன மகிழ்குழு'வாக உருவாகியுள்ளது. இன்றைய உறுப்பினர்கள் எண்ணிக்கை 275. இதில் பலதரப்பட்டவர்களும் உண்டு. பல துறைகளைச் சேர்ந்தவர்களும் உண்டு. கடந்த பதினைந்து ஆண்டுகளில் காஷ்மீர் முதல் கன்யாகுமரி வரை கால்பதித்தாயிற்று.

இந்த 275 நண்பர்களின் குடும்பங்கள் கலந்து கொள்ளும் ஆண்டு விழா மகிழ்ச்சியின் உச்சக்கட்டம். காலை முதல் மாலை வரை விருந்து, விளையாட்டு, பரிசளிப்பு, உற்சாக ஆரவாரம். வெளியிலிருந்து காண்பவர்கள் ஏதோ கல்யாண விசேஷம் என நினைத்துக்கொண்டு விடுவார்கள்.

இந்த இனிய உறவின் பலனாகப் பலருடைய வாழ்க்கையில் சாதனை வாயில்கள் திறக்கப்பட்டுள்ளன. ஒரே மாதிரியான கருத்துக்களைக் கொண்ட நண்பர்கள் ஒன்று சேர்ந்து பல்வேறு தொழில், வணிக முயற்சிகளில் இறங்கியுள்ளனர். அதுவே அவர்களுடைய வாழ்க்கையில் திருப்பு முனையாக அமைந்ததும் உண்டு. ஏழை மாணவர்களுக்கு ஆண்டு தோறும் சீருடை வழங்குவதோடு, ரத்தவங்கி - இலவச டிஸ்பென்சரி ஆகியவற்றைத் தொடங்குவதற்கான திட்டங்களும் உண்டு.

நட்பு என்கிற சிறு விதையில் அன்று தோன்றிய குழு இன்று மாபெரும் குடும்பமாக உருவாகியுள்ளது.

-ஹேப்பி ராஜன்,
சென்னை - 600 013.

தொடரும் இனிய உறவுகள்!

ADWAVE/SCI/5105

SHRIRAM GROUP COMPANIES
MADRAS

ஸ்ரீராம் சிட்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ் பி. லிமிடெட்.

நிர்வாக அலுவலகம்: "சுப்பிரமணியம் பில்டிங்,"
1, கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை - 600 002.
போன்: 8520700/8523932/8522651/
8525536/8520797

ஊருலகு காணாத வளர்ப்பு மகன் திருமணம்!





"ஒரு முதல் அமைச்சரின் மகனுக்குத் திருமணம் நடக்கும்போது ஆகும் செலவுகளே என் வளர்ப்பு மகன் திருமணத்தின்போது ஆகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மற்றவர்கள் இந்தச் செலவுக் கணக்கு விவகாரங்களில் தலையிட்டு வீணாக அலட்டிக் கொள்ள வேண்டியதில்லை."

– ஜூலை மாதம் ஜெயலலிதா வெளியிட்ட அறிக்கையிலிருந்து.

• மங்களகரமான யுவ ஆண்டு ஆவணி மாதம் 22ம் நாள் (7.9.95) வியாழக்கிழமை திரியோதசி திதியும், உதயத்தில் திருவோண மும், பின் அவிட்ட நட்சத்திரமும், சித்தி யோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் சந்திர ஹோரையில், விருச்சிக லக்னத்தில் நடைபெறுகிறது முதல்வரின் வளர்ப்பு மகன் செல்வன் சுதாகர் திருமணம். மணமகள் நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் பேத்தி யும் திருமதி சாந்தி- திரு நாராயணசாமியின் இரண்டாவது மகளுமான சத்தியலட்சுமி.

• மணமகன் சுதாகர் சூப்பர் டூப்பர் நிறு வனத்தில் மானேஜிங் டைரக்டர்; ஜெ.ஜெ. டி.வி. சார்பாக, டிஷ் ஆண்டெனாக்கள் அமைத்துக் கொடுக்கும் நிறுவனம் இது. எம்.பி.ஏ. படித்தவர். இவருக்கு பாஸ்கரன், தினகரன் (அமுலாக்கப் பிரிவு புகழ்) ஆகிய மூத்த சகோதரர்கள் உண்டு.

• மணமகள் சத்திய லட்சுமி பி.ஏ. படித்தவர்.

• திருமணத்திற்காக, சென்னை ராஜா அண்ணாமலை புறத்தில் உள்ள எம்.ஆர்.சி நகரி லுள்ள, . செட்டி நாடு குடும்பத்துக் குச் சொந்தமான, கடற்கரையை ஒட் டியுள்ள எழுபது ஏக்கர் நிலம் 'எடுத் துக்' கொள்ளப்பட் டிருக்கிறது. அதில் முப்பது ஏக்கர் பரப்பள வில் பன்னிரண்டு பந்தல் கள் அமைக்கப்பட்டுள்ளன. இரண்டு லட்சம் பேர் அமரலாம். பொதுப் பணித்துறை இன்ஜினியர்கள் மேற்பார்வையில் அமைக்கப்பட்ட இந்த பந்தல்களுக்கான செலவு இரண்டு கோடி. என்று மதிப்பிடப்படுகிறது. ("ஒன்றேகால் கோடி செலவில் தென்னங்கீற்று பந்தல் போடுவது ஆடம்பரமா?" என்று கேட்டார் அமைச்சர் இந்திரகுமாரி.) பத்தாண்டு களுக்கு முன்னர் இந்த இடத்தில்தான் சிவாஜி தமது ரசிகர் மன்ற மாநாடு ஒன்றை நடத்தினார்.

• நூறடி நீளமும் ஐம்பதடி அகலமும் பத்தடி உயரமும் கொண்டது மணமேடை. இதை யொட்டி மணமகன், மணமகள் குடும்பத்தினர் தங்குவதற்கு பெரிய்ய நான்கு குளுகுளு அறை கள்.

• மாநில அரசுகளின் துறைகளான பொதுப் பணி, மின்சாரம் ஆகியவற்றைச் சேர்ந்த ஊழியர்களைத் தவிர, மத்திய அரசின் தொலைத் தொடர்பு ஊழியர்களும் ஜரூராகப் பணியாற்றினார்கள். மின்சார வசதியை முழு வதுமாகப் பெறும் பொருட்டு, கூடுதலாக அந்தப் பகுதியில் 5 டிரான்ஸ்ஃபார்மர்கள் அமைக்கப்பட்டுள்ளன.

● திருமணப் பந்தலை ஒட்டியுள்ள செட்டி நாடு வித்தியாசிரம பள்ளிக்குப் பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னிட்டு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. சுற்று வட்டார வீடு களில் உள்ளவர்களின் சிரமத்தைத் தவிர்க்க ஓட்டலில் தங்க வைக்கப் பட்டுள்ளார்கள்.

● மூன்று விதமான திருமண அழைப்பிதழ்கள் அடிக்கப்பட்டுள்ளன. பட்டுச்சேலை, பட்டு வேட்டி, வெள்ளி குங்குமச் சிமிழுடன் திருமண அழைப்பு முக்கிய பிரமுகர்களுக்கும், தொழிலதிபர்களுக்கும் கொடுக்கப்பட்டது. அமைச்சர்களுக்கும் சினிமா நட்சத்திரங் களுக்கும் முதல்வரே அவர்களை வீட்டுக்கு அழைத்து அழைப்பிதழைக் கொடுத்தார். ஆர்.எம்.வீக்கு மட்டும் தபாலில் அனுப்பப் பட்டது.

● தமிழ்நாட்டு சைவ, அசைவ, உணவைத் தவிர, வட இந்திய உணவும் தயாரிக்கப் படுகிறது. பிரியாணிக்காக ஆயிரம் ஆடுகளும், 5000 கோழிகளும் 'வாங்கப்'பட்டிருக்கின்றன. பால், காய்கறி, வாழைஇலை, தாம்பூலம், தண் ணீர் ஆகியவற்றுக்குப் பொறுப்பாக அமைச் சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

● திருமண நிகழ்ச்சிகளை அனைவரும் காண ஆயிரம் தொலைக்காட்சிப் பெட்டிகள் பந்தல்களில் வைக்கப்படுகின்றன. ஜெ.ஜெ. டீ.வி. படம் எடுக்கிறது. அதை அப்போதே கேபிள்கள் மூலம் ஒளிபரப்ப ஏற்பாடுகள் நடக்கின்றன. அதற்கு மத்திய அரசின் ஒத் துழைப்பு கோரப்பட்டிருக்கிறது.

● திருவிதாங்கூர் மன்னர்களுக்கு உடைகள் தைக்கும் கலைஞர்தான் சுதாகருக்கும் திருமண உடைகளை தைத்துக் கொடுத்திருக்கிறார்.

● தேனிலவு ஐரோப்பிய நாடுகளில் என்கிறது ஒரு தகவல்.

சில முன்னெச்சரிக்கைகள்!

● சென்னை நகரில் திருமணத்தின் போது ஆங்காங்கே மின் தடைகள் அல்லது குறைந்த வோல்டேஜ் சப்ளைக்கான வாய்ப்பு இருக்கிறது.
● வாகன ஓட்டிகள் அடையாறு, சாந்தோம் பகுதியைத் தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

— கௌசல்யா

கொசுறு: திருமணத்தை முன்னிட்டு, தினகரனுக்கெதிரான தமது நடவடிக்கை களை தவிர்த்துக் கொண்டதாம் அந்நியச் செலாவணி அமுலாக்கப் பிரிவு!



"தப்பிக்க போனவங்கள்ல எத்தனை பேரை பிடிச்சிருக்கீங்க"

"நாங்க எங்கே பிடிச்சோம்; வெளியில சட்டம் ஒழுங்கு ரொம்ப கெட்டுப் போயிருக்குன்னு அவங்களே திரும்பி வந்துட்டாங்க."

- தஞ்சாவூர் ராஜபாரதி




"வேலூரில் தப்பிச்சவங்களைக் கண்டா விடாதீங்க."

"ஏங்க?"

"தோட்டத்துல குழி போடணும், கிணறு தோண்டணும்."

—கானா. கணேசன்



"அந்த சிறைச்சாலையில் என்ன! கொடிகட்டி, தோரணம் அமைக்க, ஸ்பீக்கர் வேற பாடுது. யாராவது மந்திரி வர்றாங்களா!"

"நீங்க ஒண்ணு. ராத்திரிக்கு கைதிகள் தப்பிக்கப் போறாங்களாம், அதைத்தான் சந்தோஷமாகக் கொண்டாடுறாங்க!"

- புலவர் எஸ்.கே. மூர்த்தி.



அடக்கமாக அழகாக ஒரு ஃபிளாட் வேணுமே!
சொந்த வீடு வேணும்னு ஆசைதான். ஆனால், மொத்த பணமும் கொடுக்க முடியாதே...
எங்க குடும்பம் பெரிசு... கொஞ்சம் பெரிய ஃபிளாட்டா வேணுமே...?
ஃபிளாட்தான் என்றாலும் அழகாக இருக்க வேண்டாமா?
நேரத்தோட எந்த பில்டர்ஸ் முடித்துத் தராங்க.....?
தரமான கட்டமைப்புன்னு நம்பி வாங்க முடியுமா?

நிழலுக்குத்தான் பந்தலா?

● பி. ராம் முருகன், சென்னை - 81.

? ஜெயலலிதா ஆட்சி தமிழகத்திற்கே ஒரு தலைகுனிவு என்கிறாரே ப. சிதம்பரம்....?

! மத்திய ஆட்சி நாட்டுக்கே தலைகுனிவாக உள்ளதே!

● வலங்கை ஜி. ராஜசேகர், வளையமாபுரம்.

? 'வீரப்பனைப் பிடித்தே தீருவோம்' என்று கூறும் தேவாரம்; 'ஜெ' ஆட்சியை அகற்றியே தீருவோம் என்று கூறும் சு. சுவாமி - ஒப்பிடுக...?'

! பின்னவர் சொல்வது நடந்தாலும் நடக்கும்; மீசைக்காரர் பற்றிய முழக்கம்தான் கேட்டுக் கேட்டு 'போர்' அடித்துப் போச்சு!

● எம். பிரபு, குமராட்சி.

? ரஜினிகாந்த் அரசியலுக்கு வர பயப்படுவது ஏன்...?

! பயப்படுபவராயிருந்தால் ஆந்திராவுக்கு ஓடோடிப் போய், தலையிட்டு, கருத்துச் சொல்லி, தலைப்புச் செய்தியாகியிருப்பாரா...? சரியான தருணத்துக்குக் காத்திருப்பதாகத் தெரிகிறது.

● ஜோ. ஜெயக்குமார், நாட்டரசன்கோட்டை.

? நெல்லைத் தமிழ், மதுரைத் தமிழ், கோவைத் தமிழ், சென்னைத் தமிழ்... இவற்றில் 'தராசை'க் கவர்ந்த தமிழ் எது?

! தமிழ்!

● வி. மோகன், நெல்லிக்குப்பம்.

? ராமராவ் - ஜெயலலிதா... ஒப்பிடுக?

! ஒருவர் பெண்ணால் வீழ்ந்தார்; இன்னொருவர் பெண்ணால் வீழ்ந்து கொண்டிருக்கிறார்!

● மு. இரவிச்சந்திரன், சேலம் - 9.

? 'வேலூரில் தப்பிய 43 புலிகள் என்ன குற்றம் செய்தார்கள்? பொது மக்களுக்குச் சேதம் விளைவித்தார்களா? குண்டு வீசினார்களா?' எனக் கேட்கிறாரே வை. கோபாலசாமி?

! வை.கோ. தமது 'புலி ஆதரவு' மனப்பான்மையை இதைப் போல் பலமுறை வெளிப்படுத்தி விட்டார். ஒரு பயங்கரவாத அமைப்பை இப்படி சொல்லாலும் செயலாலும் அவர் ஆதரிப்பது தெரிந்தும் அவருக்குக் கோஷம் போட இங்கு கூட்டம் இருப்பதுதான் மகத்தான சோகம்!

● வி. எஸ். ராமு, செம்பட்டி.

? பதவியில் இல்லாத ஜெயலலிதாவைப் புகழ, கட்-அவுட் வைக்க, காலில் விழ... எத்தனை அ.இ.அ.தி.மு.க.வினர் தயாராய் இருப்பார்கள்...?

! காலம் நிச்சயம் பதில் சொல்லும்; கவலைப்படாதீங்க!

● ஏ. ஜஹ்பர் காதர், அரியநாயகிபுரம்.

? இலவசச் சீருடை என்ற பெயரில் தரப்படுவன தையல் பிரிந்து, பட்டன்கள் பிய்ந்த பரிதாப நிலையில் உள்ளன. அளவில், நிறத்தில் கவனம் செலுத்தப்படாமல் தாறுமாறாகத் தைக்கப்படுகின்றன. இதெல்லாம் போதாதென்று பள்ளி திறந்து இரண்டு மூன்று மாதங்கள் கழித்தே இவை விநியோகிக்கப்படுகின்றன... யாருக்கும் உபயோகமில்லாமல் இப்படி ஓர் உதவி தேவையா?

! இலவசம் என்றாலே இப்படித்தான் சார்! 'தானம் கொடுத்த மாட்டுக்குப் பல்லைப் பிடித்துப் பார்க்க முடியுமா?' என்பது பழமொழி. தானத்தை மறுக்கிற தன்மானம் தமிழனுக்கு வர வேண்டும். அது வந்து விட்டால் பிச்சை போடும் மனப்பான்மை அரசுக்கு நீடிக்காது!

● க. நா. இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்.

? 'புரட்சித் தலைவி தமது வளர்ப்பு மகன் திருமணத்துக்குப் பந்தல் போடுவது நிழலுக்குத்தானே யொழிய...

• பயமா...?



• தலைகுனிவு...?



• 'என்ன குற்றம்?'



• 'பிடித்தே தீருவோம்...'





• "அகற்றியே தீருவோம்...."



• "நிழலுக்குத்தான்"

ஆடம்பரத்துக்கு அல்ல' என இந்திரகுமாரி அறிக்கை விட்டிருக்கிறாரே?

! 'ஒரு சாதாரண கல்யாண மண்டபத்தில் எளிமையாகக் கல்யாணம் நடத்தும் பெற்றோரே முழி பிதுங்கிப் போகிற நிலையில், மாதம் ஒரு ரூபாய் சம்பளம் வாங்கும் ஒரு நபர், தமது வ. மகன் திருமணத்துக்கு எப்படி இவ்வளவு செலவு செய்ய முடிகிறது?' - இக் கேள்விக்குப் பதில் சொல்லி விட்டால், நிழலுக்கு என்ன... விழலுக்கு வேண்டுமானாலும் பணத்தை வாரி இறைக்கலாம்!

● ஈ. டி. விஜயகுமார், ஈரோடு.

? சசிகலா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட செய்தியை மறுத்து வந்த அறிக்கை, கோட்டையிலிருந்து அனுப்பப்பட்டதைக் கவனித்தீர்களா?

! கோட்டை அவர்கள் கைவசமாகி விட்டதை உணர்த்தும் நிகழ்ச்சி.

● பஞ்சவர்ணமகன், கருப்பம்புலம்.

? காமராஜர் பிறந்த நாளையொட்டி கதர் துணிக்குத் தள்ளுபடி வழங்க மத்திய அரசு மறுத்து விட்டதாமே?

! தள்ளுபடி பிஸினஸே தேவையில்லை! கதர் விலையை உயர்த்தி, அது வசதியானவர்களின் ஆடையாக அறியப்படும்படி, அணியப்படும்படி பிரசாரம், விளம்பரம் செய்யப்பட வேண்டும். நீடித்து உழைக்காத, விலையும் அதிகமான கதரை பணக்காரர்கள்தான் வாங்கி உபயோகிக்க முடியும். இதை ராஜாஜி எப்போதோ சொல்லி விட்டார்!

● கி. பாஸ்கரன், சென்னை - 39.

? உங்களை ஒரே ஒருநாள் தலைமைத் தேர்தல் கமிஷனராக நியமித்தால், என்ன செய்வீர்கள்?

! அதற்கு அவசியமில்லாமல் சேஷனே பிடிவாதம் தளர்ந்து போய், மற்ற இரு கமிஷனர்களுடனும் ஒத்துழைப்பதாகச் சொல்லி விட்டாரே...

● என். ராமச்சந்திரன், திருவாரூர்.

? தமது பதவிக் காலத்தில் தமிழக முதல்வர் ஒருமுறையாவது பத்திரிகை நிருபர்களைச் சந்திப்பாரா...?

! பதவிக்கு வந்த புதிதில் நடத்திய ஓரிரு சந்திப்புகளுக்குப் பிறகு, முதல்வர் பத்திரிகையாளர்கள் பக்கம் திரும்பிக் கூட பார்க்கவில்லை. அப்படிச் செய்வதற்கு தைரியமும் தார்மிக பலமும் வேண்டும். இவ்வளவு குற்றச்சாட்டுகள் அவர் பேரில் இருக்கும் போது, எங்கிருந்து தைரியம் வரும்!

● ருக்மிணி சுவாமிநாதன், சென்னை - 61 ❐

? ஏன் தமிழ்நாட்டில் மட்டும் சினிமா மோகம் பிடித்து, மக்கள் நடிக - நடிகையர்களையே ஆட்சியில் அமரச் செய்கிறார்கள்?

! பேச்சாலும், பண்பட்ட செயலாலும், அறிவாற்றலுடன் கூடிய ஆளுமையினாலும் மக்களை ஈர்ப்பதற்கு வேறு தலைவர்கள் இல்லாத நிலையில் 'மின்மினி' தலைவர்களின் பக்கம் அவர்களுடைய கவனம் செல்கிறது. ஒரு நேருஜி அல்லது ஒரு அண்ணாவைப் போல் தலைவர்கள் அமைந்து விட்டால் பிறகு ஏன் மக்கள் சினிமா பக்கம் திரும்புகிறார்கள்.

● முத்துவேணி அரசு, பாம்பன்குளம்.

? என் கணவர் கொலை விசாரணை சரியாக நடக்கவில்லை என்று சோனியா குற்றஞ் சாட்டியுள்ளாரே...?

! கொலை செய்தவர் கொலை நடந்த இடத்திலேயே இறந்து விட, உடந்தையாக இருந்த முக்கியமான வேறு இருவரை கார்த்திகேயன் தலைமையிலான சிறப்புப் புலனாய்வுக் குழு துரத்தி முற்றுகையிட்டது. அவர்களும் சயனைட் சாப்பிட்டு இறந்து போனார்கள். இதர சதிகாரர்கள் மீது பூந்தமல்லியில் வழக்கு நடந்து வருகிறது. பிரதம குற்றவாளியான பிரபாகரனை இந்தியாவுக்கு அழைத்து விசாரிக்க இலங்கை அரசிடம் அனுமதி கேட்கப்பட்டுள்ளது. எனவே கொலையாளிகளைப் பிடிக்கவில்லை என்று புகார் சொல்ல இடமில்லை. ஜெயின் கமிஷன் விசாரணை முற்றுப் பெறவில்லை என்ற குறை இருக்கக்கூடும். உண்மையில் அவ்விசாரணைக்குழு சர்வதேச சதி ஏதேனும் நடந்துள்ளதா என ஆராய்வதற்கே அமைக்கப்பட்டது. சாட்சி சொல்பவர்களின் 'கற்பனை வளத்தால்' அந்த விசாரணை கேலிக் கூத்தாக்கப்பட்டு வருகிறது.

● தேவந்தி துரைராஜ், திருப்பத்தூர்.

? ரஜினியின் அரசியல் பிரவேசத்துக்கு அனந்தன் ஆரத்தி எடுத்து விட்டாரே?

! முக்கால் மணி நேரம் பேசி ரஜினியைக் கவர்ந்திழுக்க முயற்சி செய்திருப்பதாகத் தெரிகிறது. அடுத்த முதுகு சவாரி ரஜினி மீது நடத்தத் திட்டம் போலும்!

❐ ரூ 25 பரிசு பெறுபவர் :

ருக்மிணி சுவாமிநாதன்,
பிளாட் 43 C/4, 40 வது தெரு,
நங்கநல்லூர், சென்னை — 61.

பெண்களுக்கு ஆண்களும் சளைத்தவரல்லர்

பெண்களின் உணர்வுகள், செய்கைகளையே பிரதானமாகக் கொண்ட நாட்டிய நிகழ்ச்சிகள்தான் பெரும்பாலும் பார்க்கிறோம். அண்மையில் நடந்த 'புருஷ்' நிகழ்ச்சி ஆணின் உணர்வுகளை மட்டுமே வெளிப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டிருந்தது. பொறுப்பேற்று நடத்தியவர் ஒரு பெண்!



"முழுக்க முழுக்க ஆண்கள் நடனமாடும் ஒரு நிகழ்ச்சியை இந்தியாவில் ஏற்பாடு செய்ய முடியுமா?"

சென்ற வருட ஆரம்பத்தில், இந்தியாவிலும் ஸ்ரீலங்காவிலும் வெற்றிகரமாகத் தமது நடன நிகழ்ச்சிகளை வழங்கியிருந்த பாட்டரி டான்ஸ் கம்பெனியின் ஆர்ட்டிஸ்ட்டிக் டைரக்டர் ஜொனாதன் ஹாலண்டர், அனிதா ரத்னத்திடம் கேட்டார்.

"ஆகா, செய்யலாமே!" என்று சொல்லிவிட்டார் அனிதா. ஆனால், பேராசிரியர் ஏ.கே. ராமானுஜனின் சில கவிதைகளை நடனமாக வழங்கும் ஏற்பாடுகளில் பிஸியாக இருந்து விட்டதால், 'புருஷ்' என்ற அந்த நிகழ்ச்சியின் வேலைகள் கொஞ்சம் தாமதமாயின.

அதற்குள், போபாலில் உள்ள பாரத் பவனில் கிட்டத்தட்ட இதே 'புருஷ்' தலைப்பில் ஆண்களின் நடன நிகழ்ச்சிகள் நடந்து, அதன் வெற்றி பலராலும் பேசப்பட்டபோது, இனியும் தாமதிக்கக் கூடாது என்று முழு மூச்சாக இறங்கினார் அனிதா ரத்னம்.



• அனிதா ரத்னம்

'புருஷ்'ஷின் ஆர்ட்டிஸ்ட்டிக் டைரக்டர் அனிதா தான்.

பரோடா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் சி.வி. சந்திரசேகரும், கீர்த்திக் நாய

ரும் (பரத நாட்டி
நாயர் (கதகளி), ப
இந்திய நடன வ
'டெஸ்ட்டிமா
சியை நியூயார்க்
ஜான் ஃப்ரீமேனு
ஆண் எதற்கு
"இந்த உலகத்
அதிகாரத்தை ை
ஆணின் பணியா
கலைஞர்களிடம்


மனத்தின் வெளிப்பாடுகளும், அ
வடிவில் இசையோடு வெளிப்
வாழ்க்கைக்கு அவசியம் என்று
ளுடன் எனது டான்ஸ் ஸ்டுடியோ

அர்ஜுன் மிஸ்ரா (கதக்), சசிதரன்
ார்த்தி விட்டல் (குச்சுப்புடி) என்று
ளில் சிலவற்றை வழங்கினார்கள்.
் நடராஜா' என்ற நடன நிகழ்ச்
சேர்ந்த கெவின் ப்ரெட்மோரும்,
வழங்கினார்கள்.
ளம் ஆட வேண்டும்?
வெறுமனே பணம் சம்பாதித்து,
துக் கொள்ளுவது மட்டும்தானே
கருதப்படுகிறது? என்னுடைய சக
ளம் விட்டுப் பேசினேன். பதவி,
அதிகாரம், பணம் எல்லா
வற்றையும் தாண்டி, உப்
புச் சப்பற்ற வாழ்வுக்கு
உயிர்நாடியைத் தருவது
நடனம்தானே? மனித

• 'புருஷ்....'



க அசைவுகளாக அவற்றை உடல்
த்துவதில் உள்ள அனுபவமும்
ணர்ந்தேன். என் நாலு வயது மக
வில் புகுந்து கொண்டேன். புதிது



• டெஸ்டிமனி டு நடராஜா....

புதிதாக நடன வடிவங்களும், புதிது புதிதான கதிகளும் என் கற்பனையில் ஊற்றாக ஊறி என் படைப்புக் கலை ஆர்வத்தைக் கிளறி விட்டன. நடராஜரின் நடனத்துக்கு அத்தாட்சியாக என் டெஸ்ட்டிமனி டு நடராஜா பிறந்தது!" என்கிறார் ஜொனாதன் ஹாலண்டர்.

காலை முதல் மாலை வரை செமினார், கதகளி, யட்சகானம், ஃபாதர் பார்போஸாவின் மதம் மற்றும் மதச் சார்பற்ற நடனங்கள், ரன்வீர் ஷாவின் கவிதை அரங்கம் (இதற்குத் தேவையான ஓவியங்களை ஷரன் அப்பாராவ் தமது 'காலரி' யிலிருந்து கொடுத்து உதவினார்.) நா. முத்துச் சாமியின் கூத்துப்பட்டறை நிகழ்ச்சி, என்று இடைவிடாமல் நடந்தன. ஆனால், வீணா பாணி சாவ்லா இயக்கி, வினய்குமார் வழங்கிய 'இம்ப்ர ஷன்ஸ் ஆஃப் பீமா' வெகு அழுத்தமான நிகழ்ச்சி யாக இருந்தது. அந்த மாவீரனின் மனக்குமுறல் களையும் துடிப்பையும் பலத்தையும் மிக நுணுக்க மாக வெளிப்படுத்தி அசத்தி விட்டார் வினய் குமார்.

— சாருகேசி

மகன்

சிநேகிதா

வர வர சரவணனிடத்தில் அவன் பேச்சில், நடவடிக்கையில் ஒரு மாற்றம் இருப்பதைக் கண்டுகொண்டாள் காந்திமதி.

அம்மா... அம்மாவென்று ஒட்டுதலோடு பேசுவதில்லை, சிரித்த முகத்துடன் பேசுவதில்லை, முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு வேண்டாவெறுப்பாய்ப் பேசுவது புரியாமலில்லை.

என்ன கோளாறு? எதுவாக இருந்தாலும் மனம் விட்டுப் பேசினால்தானே புரியும்.

ஆனால் கல்யாணியின் முகம் கண்டு மலருகிறான்.

"வாங்க.... ரொம்பக் களைச்சிப் போய் வந்திருக்கீங்க... முகம் கழுவிக்கிட்டு வாங்க டிபன் சாப்பிடலாம்" என்றாள் கல்யாணி.

காந்திமதிக்கு வியப்பாய் இருந்தது. 'எல்லா மகன்களைப் போலவும்தானா என் மகன் சரவணனும்...? மனைவி வந்ததும் தாயாரை மறந்து, வெறுத்து விலகுவது போலத்தான் இவனுமா?' மனதுக்குள் ஆற்றாமையுடன் ஒரு சோகமும் வந்து குடிகொண்டது அவளுக்கு.

உடுப்பு மாற்றி கைலிக்குள் புகுந்து கொண்டு, பாத்ரூம் சென்று முகம் கழுவிக் கொண்டு டைனிங்டேபிளுக்கு வந்தான்.

"உங்களுக்குப் பிடிக்குமேன்னு சேமியாவுல கட்லட் பண்ணி இருக்கேன் சாப்பிட்டு எப்படி இருக்குன்னு சொல்லுங்க!" என்றாள்.

"என்னது சேமியாவுல கட்லெட்டா...!" அவன் குரலில் குழந்தைத்தனம் மிளிர்ந்தது.

"ஆமாம்... டி.வி.யிலே காட்டினாங்க... அப்போ பார்த்துத் தெரிஞ்சுக்கிட்டேன்..." என்றாள் உற்சாகத்துடன்.

எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த காந்திமதி, 'தன்னை விலக்கினாலும் அவனாவது சந்தோஷமா இருக்கானே' என்று மனசுக்குள் ஆறுதலடைந்தாள்.

சாப்பிட்டு விட்டு நேராகப் படுக்கை அறைக்குள் சென்று விட்டான்.

'என்னம்மா... ஏதும்மா...' என்று ஏதாவது விசாரிச்சானா... அவனுக்கு என் மீது கோபம் வரும்படி நானென்ன அவனுக்குத் தீங்கு செய்தேன்? புருஷனை இழந்த பிறகு சொந்தக் கால்ல நின்னு புள்ளைங்களைப் படிக்க வச்சேன். 'சரி என்னதான் ஆகுதுன்னு பார்க்கலாம்' என்றபடி எழுந்து சென்றாள்.

எட்டு மணிக்கு சின்னவன் முருகானந்தம் வந்தான், கையெல்லாம் கிரீஸ் கரையோடு. ஒரு மெக்கானிக் ஒர்க் ஷாப்பில் வேலை பார்க்கிறான்.

இரண்டு குழந்தைகளையும் படிக்க வைத்து விட முடியுமா என்ன? காந்திமதி கஷ்டப்பட்டு பாடுபட்டதெல்லாம் மூத்தவன் சரவணனைப் படிக்க வைக்கத்தான் முடிந்தது. இரண்டாமவன் முருகானந்தம் ஸ்கூல் ஃபைனலுடன் படிப்பை நிறுத்தி விட்டு நான்கு வருடங்களாக மெக்கானிக் ஒர்க் ஷாப்பில் வேலை பார்த்து வருகிறான்.

முகம், கை காலெல்லாம் கழுவிக் கொண்டு வந்த போது அவனுக்கு ஆறிப் போன உணவே காத்திருந்தது.

மருமகள் புதிதாய் செய்திருக்கும் சேமியா கட்லெட்டை மகனுக்கு எடுத்து வைக்கலாம் என்று எண்ணியபடி பாத்திரத்தைத் திறந்தாள் காந்திமதி. பாத்திரம் வெறுமையாய் இருந்தது.

மருமகளை அணுகி, "சேமியா கட்லெட் பண்ணியிருந்தியே எங்க வச்சிருக்க..." சின்னவனுக்கும் ஒரு துண்டு கொடுக்கலாம் என்றபடி கேட்டாள்.

'ஆமா... பக்குவமா இவங்களுக்குத்தான் செய்தேனா?' என்று மனசுக்குள் நினைத்தபடி, "ஐயைய்யோ! தீர்ந்து போயிச்சே அத்தே... அவரு ரொம்ப நல்லா இருக்குன்னு எல்லாத்தையும் சாப்பிட்டுட்டாரே..." என்றாள் தீர்ந்து போனதற்கு வருத்தப்படுவது போன்ற பாவனையில்.

'என்ன மனசு இவளுக்கு, வீட்ல உள்ள மத்தவங்களுக்கும், நாம புதுசா செய்திருக்கிற பதார்த்தம் எப்படி இருக்குன்னு கொடுத்து அபிப்ராயம் கேட்கணுங்கிற நினைப்பே இல்லாதவளா இருக்காளே...' என்று வருத்தப்பட்டாள்.

சாப்பிட்டுக் கொண்டிருந்த முருகானந்தம் கேட்டான். "என்னம்மா நீ சாப்பிட்டியா..." என்று.

"எனக்கென்னடா அவசரம்... நீதானே



வேலை செய்து சோர்ந்து போய் வந்திருக்க்கே..."

"நீயும் உட்காரும்மா... எனக்குப் பரிமாறிக் கிட்டு சிரமப்பட வேண்டாம்... வேணும்னா நான் பரிமாறுறேன் உனக்கு" என்றான்.

'மூத்தவனும் முன்பெல்லாம் இப்படித் தானே வெகு பிரியத்துடன் பழகி வந்தான். பெண்டாட்டி வந்து என்ன தலையணை மந்திரம் சொன்னாளோ. இப்போ முகம் கொடுத்துக் கூட பேச மாட்டேன்கிறானே?'

நாளுக்கு நாள் மகனிடம் வெகுவாய் மாற்றம் இருந்தது. திடீரென்று ஒருநாள் அந்த வெடிகுண்டை எடுத்து வீசினான்.

"அம்மா... நாங்க தனிக்குடித்தனம் போகலாம்னு தீர்மானிச்சிட்டோம்" என்றான்.

ஒரு நிமிடம் விக்கித்துப் போய் நின்று விட்டாள்.

'எத்தனை வளர்ந்து எவ்வளவு சம்பாதித் தால்தான் என்ன... இன்னும் எனக்கு இவன் சிறுவன்தானே என்று நினைத்திருந்தது எவ்வளவு மடத்தனம்!'

'நல்வாழ்க்கையும் வசதியும் ஏற்படுத்தித் தந்த என்னை உதறி விட்டுச் செல்வதற்கு எப் படிப்பா மனம் வந்தது... உன்னை மயக்கி அவள் இழுத்த இழுப்புக்கெல்லாம் செல்லும் படி செய்ய இவள் என்ன ரம்பையா, மேனகையா... மாநிறம், குதிவால் ஜடை. இதுக்கே இந்த பல்ட்டி என்றால் இன்னும் பேரழகாக ஒருத்தியைப் பார்த்துக் கல்யாணம் செய்து வைத்திருந்தால் என் மகன் என்னவெல்லாம் பேசுவான்?'

"ஏதோ சில சந்தர்ப்பங்களில் சண்டையும் வெறுப்பும்தான் வரச் செய்யும், அதுக்காகத் தனிக்குடித்தனம் போயிடறதா...?"

"நாங்க சுதந்திரமா வாழ விரும்புறோம்..." என்றான் அழுத்தமாக.

அதற்கு மேல் தடைசொல்ல முடியாத வளாக, "சரிப்பா உன் இஷ்டம்..." என்று சொல்லி விட்டாள்.

சரவணனும் கல்யாணியும் தனிக்குடித்த னம் போய் விட்டார்கள். ஆனால் முருகானந் தம் பிரியமாய் தாயாருடன் பழகினான்.

'இவனும் இன்னும் எத்தனை நாளைக்கோ, நாளைக்கு இவனுக்கும் ஒருத்தி வந்திட்டா

அம்மா முகமற்று, முக்கியமற்றுப் போயிடுவா. காந்திமதிக்கு, தான் மருமகளாய் வலம்வந்த நாட்கள் நினைவுக்கு வந்தன.

அவள் மாமியார் ஒரு முசுடு. புருஷனோடு கொஞ்சம் சிரிச்சுப் பேசுவதைக் கண்டாலே பொறுக்காது. இருபத்தி நான்கு மணி நேரமும் வீட்டுக் காரியங்கள் செய்தாக வேண்டும். கணவனின் மறைவுக்குப் பிறகு சாறு பிழிந்து விட்டு வீசியெறியும் சக்கையாய் உணர்ந்தாள்.

அதன் பிறகு பாடுபட்டு, கஷ்டப்பட்டு குழந்தைகளை வளர்த்ததெல்லாம் பெரிய கதை.

அன்று ஊரிலிருந்து தூரத்து உறவுக்காரர் சதாசிவம் வந்திருந்தார்.

வந்தவர் சுற்றி வளைத்துப் பேசாமல் நேரடியாய் விஷயத்திற்கு வந்தார். தன் பெண் நீலாவுக்கும் முருகானந்தனுக்கும் முடிச்சுப் போட்டார்.

காந்திமதி இதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. 'இப்பொழுதுதானே மூத்த மகன் பிரிந்து சென்றுள்ளான். அதற்குள் அடுத்த மகனையும் இழந்து விடுவதா? முடியாது!' மனது துடித்தது அவளுக்கு.

"இல்லே, அப்படியென்ன வயசாயிடுச்சி... அதுக்குள்ளே அவனுக்குக் கல்யாணம் பண்ணி வைக்க..." என்றாள்.

"என்னங்க... அப்படி. என்னங்க... பள்ளிக்கூடம் போற பையனா... மெக்கானிக் வேலையெல்லாம் கத்துக்கிட்ட பெரிய பையன்தானுங்க. அதோட இல்லாம எம் பொண்ணையும் கொடுத்து சின்னதா மெக்கானிக் ஷாப்பும் வச்சிக் கொடுத்திடலாம்னு ஆசைப்படறேன்.. தானா வர்ற சீதேவியை எட்டித் தள்ளாதீங்கம்மா. உங்க மகனோட எதிர்காலம் நல்லா அமையப் போறதிலே உங்களுக்கு ஆசையில்லையா... உங்க மகனோட அந்த சவுகரியமான வாழ்க்கையை நீங்க கண்குளிரப் பார்க்க வேண்டாமா?"

அவள் சவுக்கால் அடிபட்டதைப் போன்று துடிதுடித்துப் போனாள். 'என்ன சுயநலபுத்தி எனக்கு... என் மகன் வாழ்க்கை நல்லா அமையறதுக்கு நானே இடைஞ்சலா இருக்கலாமா? என்னைக்கு இருந்தாலும் அவனுக்கு ஒரு கல்யாணம் பண்ணித்தானே ஆகணும்... ஒரு பெத்த தாயே மகனோட கல்யாணத்தைக் கண்குளிரப் பார்க்க ஆசைப்படாமல்... என்ன ஒரு கொடுமைக்காரி நான்?'

நெஞ்சுக்குள் குமுறித்தான் போனாள் அந்தத் தாய்.

"மகனுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமையறதுல எந்தத் தாயார்தான் குறுக்கே நிற்பா. என் மகனுக்கு நல்லதுன்னா எனக்கும் அதுல முழு சந்தோசமே... எதுக்கும் ராத்திரி வேலையை முடிச்சிட்டு என் மகன் வந்ததும் கேட்டுட்டு என் முழு சம்மதத்தையும் சொல்றேன்" என்றாள்.

"அவரு என்னம்மா வேணாம்னா சொல்லிடப் போறாரு... சொந்தமா மெக்கானிக் ஷாப்புன்னா தம்பி மறுத்திடவா போவுது... ஊருக்குப் போயிட்டு ரெண்டு நாள் கழிச்சி வர்றம்மா..." என்றபடி விடைபெற்றார்.

இரவு கிரீஸ் கறையைக் கழுவி விட்டு வந்து சாப்பிடும் வரை பொறுமையாக இருந்த காந்திமதி அவன் கை கழுவியதும் கேட்டாள்.

"இதபாரு முருகானந்தம், நம்ம தூரத்து உறவுக்காரரு ஒருத்தரு தம் பொண்ணை உனக்குக் கொடுக்க முன்வராரு... பெண்ணைக் கொடுக்கிறது மட்டுமில்லே... உனக்கு சொந்தமா ஒரு ஒர்க் ஷாப்பும் வச்சிக் கொடுக்கிறேன்கிறாரு... வாழ்க்கையிலே ஒரு நல்ல வாய்ப்பு வரும்போதே பயன்படுத்திக்கணும்... உன் எதிர்காலத்துக்கு இது நல்லதுன்னு படுதுப்பா..." என்றாள்.

"என்னம்மா இது... பெரிசா சீதனம்னு ஏதும் கொண்டு வராதப்பவே அண்ணனை நம்மை விட்டு பிரிச்சு அண்ணி அழைச்சிக்கிட்டுப் போயிட்டாங்க... இன்னைக்கு என் எதிர்காலத்து வசதிக்காக நீங்க சொல்ற பொண்ணைக் கட்டிக்கிட்டா நான் அவளுக்கு அடிமையாகித்தான் போகணும்... மெக்கானிக் ஷாப் வைக்க நான்தானே உதவினேன்கிற மாதிரி அவ ஒவ்வொரு பேச்சும் பேசுவா... நானும் ஏதோ அவளுக்குக் கடன் பட்டவன்கிற எண்ணத்துல அவ பேச்சைக் கேட்டு நடக்கிற மாதிரி ஆகிடும்... அதனால இந்தப் பொண்ணு வேணாம்... நானே என் சுயமுயற்சியாலே சொந்தமா ஒர்க்ஷாப் வச்சிடுவேன். அதுக்கப்புறம் ஏழ்மையான இடத்துல எனக்குப் பெண் பாருங்க... அப்பத்தான் நீ எப்பவும் போல என் வீட்டுல சுதந்திரமா இருக்க முடியும்மா...!"

அவளுக்கு ஆனந்தத்தில் கண்களில் அருவியாய்க் கண்ணீர் பொங்கி வழிந்தது.

நிருபர் : உங்களோட சின்னச் சின்ன ஆசைன்னு என்ன நினைச்சிட்டிருக்கீங்க?

பிச்சைக்காரன் : ஏராப்ளேன் ஒண்ணு சொந்தமா வாங்கி, நாடு நாடா பிச்சை எடுக்கணும்கிறதுதான்!

- அருள்ராஜ்



Kalki Shopping Page

WE WELCOME YOU TO THE WORLD OF KARISHMA CHURIDARS AND COTTON SAREES

OUR PRODUCTS

1) Karishma Churidars
2) Karishma Sarees
3) Andhra Pochham Palli Cotton Sarees
4) Belgaum Polyster (Saradha) Sarees
5) Seiko Sarees
6) Banaras cotton sarees
7) Beekay Sarees (New Product)

AALURI SAREES

The Shop exclusively for Ladies

(DEALER OF KARISHMA CHURIDARS & SAREES)
WHOLESALE & RETAIL
4/24, R.K. MUTT ROAD, LUZ BAZAAR,
MYLAPORE, MADRAS - 600 004.
NEXT TO SRINIVAS SILK
PHONE : 4935791

WE WELCOME CITIBANK CARDS

KOMALA ADS

DISCOUNT

10 to 15%

ON FRESH STOCK OF

RANI SAREES

BENGAL COTTON

FROM 1.9.95 TO 9.9.95
SHOP OPEN ON 3.9.95

MADURAI TEXTILES

2, SIVAPRAKASAM ROAD,
PONDY BAZAAR, MADRAS - 17
(Near Vegetable Market)



SREE KRISHNA

CUT PIECE COLLECTION PVT. LTD.

THE SHOP FOR WHOLE FAMILY
39 GODOWN STREET, MADRAS - 1 PH: 589596

EXCLUSIVE FOR READY MADE
EXCLUSIVE MATCHING BLOUSES
EXCLUSIVE FOR UNIFORM

specialists in suitings, shirtings, cut-pieces, summer cotton sarees, madurai chungudi cotton, belgaum pattu silks, benaras silks, venkatagiri bengal cotton and churidar


Avail 10% Discount till Deepavali.
Shop open on all Sundays till Deepavali. Even at midnight



• இரா. இளங்கோவன்

சமூகப் பிரக்ஞை, மனித நேயம், தேசப்பற்று ஆகிய மூன்றும் போட்டி போட்டுக் கொண்டு பரிசுகள் வாங்கியிருக்கின்றன இந்த ஆண்டின் 'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி'யில். இரண்டாம், மூன்றாம் பரிசுகளுக்குரிய கதைகளாக இரண் டிரண்டு கதைகள் தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்தே நடுவர்கள் எந்த அளவுக்கு விவாதித்துப் பரிசுக் கதைகளைத் தேர்ந்தெடுத் திருப்பார்கள் என்பதைச் சுலபமாகப் புரிந்து கொள்ளலாம்!

முதல் பரிசு பெற்ற 'சமூக நலக் காடுகளும் சாம்பல் பூத்த குழந்தைகளும்' கதையைப் படிப்பவர்களுக்கு ஒன்று புரியும். ஒரு மனிதன் எத்தனைதான் நேர்மையாளனாக இருந்தாலும் கூட அவன் சார்ந்திருக்கிற நிறுவனமோ அல்லது அரசாங்கமோ நேர் மையைப் பின்னுக்குத் தள்ளுகிற போது, அந்தத் தனி மனிதனின் நேர்மை சமூகத்துக்குப் பயன்படாமல் போகிற அவலம்தான் நேருகிறது. இருப்பினும் அந்தக் கதையின் நாயகன், யதார்த்தத்தின் அழுத்தத்தில் தனது நேர்மையை நசுங்க விட்டு விடவில்லை. அந்த நேர்மையைத் தன்னளவிலேனும் தக்க வைத்துக் கொண்டு, எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை ஊட்டு கிறான்.




• அ. விநாயகமூர்த்தி



• ச. ரெங்கநாதன்

இப்படியொரு நம்பிக்கையை ஊட்டி முதல் பரிசைத் தட்டிச் சென்ற முத்துராஜனின் பின்னணி மிகவும் சுவா ரஸ்யமானது. பிறப்பு, வளர்ப்பு, எல்லாமே பாலக்காட்டுக்குப் பக்கத்தில் பசுமை கொஞ்சும் சிற்றூ ரான தத்தமங் கலத்தில். வீட்டு



• ப. முருகேசன்



• முத்துராஜன்

பள்ளி நாட் களில் ஒருவித மோக வேகத்துடன் அமரர் கல்கியின் படைப்பு களைப் படித்ததாகக் கூறும் முத்துராஜன், நமது உள்ளத்தில் முதன் முதலில் இலக்கிய விதை களைத் தூவியது திராவிட இயக்க ஏடுகள்தான் என்றும்

பரிசு பெறுவதில் போட்டா போட்டி!

மொழியோ தெலுங்கு. எம்.ஏ. சமூகவியல் படித்த இவர், கடந்த முப்பதாண்டுகளாக வாழ்ந்து கொண்டிருப்பது பெங்களூரில். வேலை பார்க்குமிடம் 'பாரத் எலக்ட்ரானிக்ஸ்' கம்பெனி. சிறு கதைகள் எழுதுவதோ தமிழில். அவ்வப்போது ஆங்கில தினசரி களுக்கு 'ஆசிரியருக்குக் கடிதம்' எழுதுவதும் உண்டு.

குடும்ப வேலைகள் காரணமாகக் கடந்த நான்கைந்து ஆண்டு களாக எழுதாமல் விட்டுவிட்ட இவர், அந்த இடைவெளியைத் தவிர்க்க எழுதிய கதைதான் இந்த முதல் பரிசுக் கதை. "பரிசு அறிவிப்பைப் பார்த்தபோது, அஞ்ஞாத வாசம் முடிந்து அரி யணை ஏறிய சிலிர்ப்பு!" என்று சந்தோஷமாகக் கூறும் இவர், ஒருமுறை சுஜாதா பாராட்டியதையும் பெருமையாகக் கருதுகிறார்.

சொல்கிறார். பின்னர் இடது சாரி இலக்கியம். "எனது இலக் கிய ஆர்வத்தை விசாலப்படுத் தியது மலையாள, ஆங்கில இலக்கியமும் தமிழின் சிற்றிதழ் இலக்கியமும்தான்!" என்கிற இவர், மலையாளத்திலிருந்து தமிழுக்குச் சில மொழியாக்க முயற்சிகளையும் செய்திருக் கிறார் என்பது குறிப்பிடத் தக்கது.

இரண்டாம் பரிசுக்குரிய கதைகளில் ஒன்றான 'உயிர்' சிறுகதையை எழுதிய இரா. இராமையா இருபத்து மூன்றே வயது நிறைந்த இளைஞர். திருநெல்வேலிக்காரரான இவர், பி.டெக். முடித்த கையோடு இப்போதுதான் வேலையிலும் சேர்ந்திருக்கிறார்.

''உயிர்'' தான் இவர் எழுதிய முதல் சிறுகதை. "இந்தச் சிறுகதை எழுதுவதற்கு ஓர் உணந்துதலாக இருந்தது ஹிந்து நாளிதழில் வெளியான ஒரு செய்திக் கட்டுரைதான்!" என்கிறார்.

வாழ்க்கைச் சூழ்நிலைகள் காரணமாக என்னதான் ஒருவன் இரக்கத்தைத் தொலைக்க நேர்ந்தாலும் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம், அவனுக்குள் இருக்கிற மனச்சாட்சி விழித்துக் கொண்டு, அவனை எப்படியெல்லாம் சிந்தித்துச் சிந்தித்து அலைக்கழிக்க விடுகிறது என்பதை ரொம்பவும் எளிமையாகச் சொல்லியிருக்கும் இவரது கதையோட்டம் பாராட்டத் தகுந்தது.

இன்னொரு இரண்டாம் பரிசைத் தட்டிச் சென்ற 'நாகூர்ப் பயணம்' சிறுகதையை எழுதிய ப. முருகேசன், நாற்பது வயதைத் தாண்டியவர். பாண்டிச்சேரியிலுள்ள வீரமாமுனிவர் அரசு உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றும் இவர், படித்தது புகுமுக வகுப்புத்தான் என்றாலும் வாங்கிய பரிசுகள் ஏராளம். எல்லாமே இலக்கியத்துக்கான பரிசுகள். ஆயினும் எழுதியதென்னவோ சுமார் ஐம்பது சிறுகதைகளும், சுமார் 45 வானொலி நாடகங்களும்தான்.

குறைவாக எழுதினாலும் என்ன? இவரது 'ஆட்கொள்ளும் பருவம்' என்கிற சிறுகதை ஹிந்தியில் மொழி பெயர்க்கப்பட்டு வெளிவந்ததோடு வங்காளத்திலும் மொழி பெயர்க்கப்பட்டிருப்பது நிறைவான விஷயம்தானே!

பரிசு பெற்றுள்ள இவரது கதைக்கு ஆதாரம், பஸ் பயணத்தின் போது நிகழ்ந்த சொந்த அனுபவம்தானாம். தமது இடத்தில் ஒரு முஸ்லிம் பெரியவரை நிறுத்தி, கற்பனையைச் சேர்த்து, சம்பந்தப்பட்டவர்களிடம் விசாரித்து கதைக்காக நிறைய பாடுபட்டிருக்கிறார்.

மூன்றாவது பரிசுக் கதைகளில் ஒன்றான 'இன்னமும் கங்கை'யை எழுதிய பிருதிவிராஜின் இயற் பெயர் ச. ரெங்கநாதன். பொறியியல் பட்டதாரி. கம்ப்யூட்டர் புரொக்ராமராக குவைத்தில் வேலை பார்க்கிறார்.

நாடு விட்டு நாடு சென்று வேலை பார்ப்பதாலோ என்னவோ இவருக்குச் சதாசர்வ காலமும் தாய் நாட்டின் நினைவு போலிருக்கிறது. விளைவுதான் 'இன்னமும் கங்கை' என்று சொல்லலாம்.

"எனது முதல் சிறுகதையும் கல்கியில்தான் பிரசுரமானது. இதுவரை எழுதிய பதினைந்து சிறுகதைகளில் பெரும்பாலானவையும் கல்கியில்தான் பிரசுரமாகியுள்ளன!'' என்கிறார், சென்ற மாதம் திருமணம் செய்து கொண்டுள்ள இந்தப் புதுமாப்பிள்ளை.


''இன்னொரு சந்தோஷமான விஷயம், எனது மனைவிக்கும் தமிழ் எழுத்துக்களில் ஆர்வமிருக்கிறது என்பதுதான்!'' என்கிற இவரின் லட்சியம், கல்கியில் தொடர்கதை எழுதுவதும் அதற்கு சாகித்ய அகாடமி பரிசும் வாங்குவதுதானாம்!

மற்றொரு மூன்றாம் பரிசுக் கதையான 'பரிசு' எழுதியவர் அ. விநாயகமூர்த்தி. காட்பாடிக்காரரான இவர், மதுரை காமராஜர் பல்கலைக் கழக அஞ்சல்வழிக் கல்வித் துறையின் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றுகிறார். ஏட்டுச் சுவடி ஆராய்ச்சிகளில் ஆர்வமுடைய இவர், மூலபாட ஆய்வியல், பதிப்புக் கலை, விளம்பரக் கலை என்று பதினொரு நூல்களையும் எழுதியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

பரிசு பெற்ற ஐவருக்கும் மீண்டும் நமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, மேலும் மேலும் பரிசுகள் பெற்றுச் சிறக்கவும் வாழ்த்துகிறோம்!

— ஆசிரியர் குழு

தத்தெடுத்துக் கொண்ட எதிர்க்கட்சித் தலைவர்!



அண்மையில் சந்தன வீரப்பனின் அட்டகாசம் மைசூர் பகுதியில் அதிகரித்து வருகிறது. மைசூர் அருகே உள்ள பஞ்சனூர் கிராமத்தில் ஒருவரைக் கொன்று விட்டான். கொல்லப்பட்டவனின் குடும்பம் அநாதையாக - ஆதரவற்றதாக ஆகிவிட்டது. ஒரே மகன் பள்ளி இறுதியாண்டு படித்து வந்தான். கணவனை இழந்த அந்த மனைவி தன் மகனை யாராவது தத்து எடுத்து மேற் கொண்டு படிக்க வைக்க வேண்டும் என்று உருக்கமான முறையில் கோரிக்கை விடுத்தார். கர்நாடக மாநில எதிர்க்கட்சித் தலைவர் எதியூரப்பாவின் மனம் இளகியது! சந்தன வீரப்பனால் பாதிக்கப்பட்ட அந்தக் குடும்பத்திற்கு உதவியாக அந்தச் சிறுவனை அவர் தத்து எடுத்துக் கொண்டு மேற்படிப்பு படிக்க உதவி புரியப் போவதாக அறிவித்தார்!

தகவல் : வீவெல்லவன்

சரியான நெற்றியடி!

வட்டமேஜை

◆ 'பிரதமருக்கு ஒரு பகிரங்க கடிதம்' தலையங்கம் அருமை. இப்படிக் கூட ஒரு பத்திரிகை அதுவும் தமிழ்நாட்டில் துணிச்சலாகத் தலையங்கம் எழுதுமா? தலையங்கத்தைப் படித்தவுடன் நாம் காண்பது கனவா அல்லது நனவா என்று என்னையே ஒரு முறை கிள்ளிப் பார்த்துக் கொண்டேன்.
தஞ்சாவூர். வனிதா ரவி.

◆ ஏ.சி. அறையில் கல்கியைக் கையில் எடுத்தும் 'இந்தச் சூடு... சுடுகிறதே...' என்று நினைத்தபடியே தலையங்கத்தைப் படித்தால்.... அப்பப்பா... ஆட்சியில் இருப்பவர்களுக்கு இந்தச் சூடு.. ஏறுமா...?
திட்டக்குடி. அ. சரவணராசன்.

◆ தலையங்கம் கண்டேன். நெற்றியடி. நடுநிலைப் பத்திரிகை என்பதை நிரூபித்து விட்டீர். நன்றி.
சென்னை - 53,
ஜெயந்தி நாகராஜன்.

◆ தாய்த்திரு நாட்டின் - கங்கைத் தாயின் பெருமையினை எடுத்துக் கூறிய வெங்கட்டுக்கும், கதை எழுதிய பிரதிவிராஜுக்கும் தமிழ் மக்கள் (வாசகர்கள்) சார்பில் வாழ்த்துக்கள்.
உ. நெமிலி, க. பழனிவேல்.

◆ "ஒரு நாதஸ்வரம் வாசிக்கப்படுகிறது" கதையில் வருகிற மாதிரி நாதஸ்வரத்தை சம்பிரதாயத்திற்கு மட்டுமே பயன்படுத்துகிறார்கள். ஆனால் இசையை ரசிப்பதில்லை. திருமண விழாக்களில் மட்டுமல்ல, கோவில் திருவிழாக்களிலும் இப்படித்தான் புறக்கணிக்கப்படுகிறது! நன்றாகச் சுட்டிக் காட்டியுள்ளார் அஸ்வினி!
நாட்டரசன்கோட்டை,
ஜோ. ஜெயக்குமார்.

◆ சண்டைக்காட்சிகள் எடுக்கும் போது "ஸ்டண்ட் மாஸ்டர்களுக்கு"க்குத்தான் ரிஸ்க் மற்றவர்கள் ஜாலியாக இருப்பார்கள் என எண்ணி இருந்த என்போன்ற வாசகர்களுக்கு புரொடக்ஷன் மானேஜர் படுகின்ற அவஸ்தைகளை அறிய வைத்தது கவர் ஸ்டோரி.
திருவண்ணாமலை,
என். சண்முகம்.

◆ சினிமா சண்டைக் காட்சிகள் என்றாலே ஒருவித சலிப்புடன் பார்த்து வந்த எனக்கு, இனி புரொடக்ஷன் மானேஜருடைய சங்கடங்களையும் கருத்தில் கொண்டு பார்க்க வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தியது நாச்சியாபுரம் நாகப்பனின் அனுபவங்கள்.
பொன்மலை. ஆர். பிரகாஷ்.

◆ கோட்டையில் குப்பைகள் குவிவதற்கு இனிச்சவாயர்கள் என்னும் சராசரி வாக்காளர்கள்தான் காரணம் என்பதை, 'சராசரிகள்!' என்னும் தமது எளிய கவிதை மூலம் அழகாக வெளிப்படுத்திய, செங்கீரன் அவர்களுக்குப் பாராட்டுக்கள்.
சென்னை - 78,
பூங்கோதை குப்புசாமி.

◆ சிறுநீரகக் கற்கள் குறித்துக் கல்கி நிருபர் கேட்ட எட்டு கேள்விகளும் வாசகர்களாகிய எங்களுடைய சந்தேகத்தினைப் போக்குவதாக அமைந்தன. மேலும் சிறுநீரகக் கற்களை உடைக்கப் பயன்படுத்தப்படும் அதிர் அலை சிகிச்சை முறையின் மூலம் சிறுநீரகத்திற்கு அபாயம் ஏதும் நேரிடாது என்ற டாக்டர் அ. ராஜசேகரனின் அனுபவக் கூற்றும் பயனளிக்கும் ஒன்று!
திருச்சி - 5, தமிழ்தாசன்.

◆ 'தி லீடர், தி லயன் கிங்' போன்ற படங்களின் விமர்சனங்களைக் கல்கியில் படித்த போது மனநிறைவு ஏற்பட்டது. நல்ல படங்களை வாசகர்களுக்குச் சரியான சமயத்தில் இனம் காட்டியுள்ளீர்கள்.
மொரட்டுப்பாளையம்,
க.நா. இராஜேஸ்வரன்.

◆ காப்பியின் விலையேற்றம் இன்றுதானா நடக்கிறது? 1951 ஆம் ஆண்டு கல்கி இதழ் ஒன்றிலேயே காப்பி விலையேற்றம் பற்றிக் கார்ட்டூன் ஒன்று வெளியாகியுள்ளதை இப்போது மற்ற வாசகர்களுக்கும் எடுத்துக்காட்ட ஆசைப்படுகிறேன்.
இராஜபாளையம்,
கொ.மா. கோதண்டம்.
(ரூ. 20 பரிசு பெறும் கடிதம்)

பிடிக்க முடியாது!



நம்பிக் கோட்டையின் விலை நாளுக்கு நாள் ஏறிக்கொண்டு வருகிறது!

◆ முருகேசன் முண்டாசு கட்டுவதை விடவில்லை என்றபோதே அவரது எளிமையும் திறமையும் புரிகிறது! நிறுவன டைரக்டரானதில் வியப்பில்லை.
மதுரை - 9,
இரா. கல்யாண சுந்தரம்.

'கோமதிக்குத் தெரியாதா?'

சமையலுக்கும் சமயத்துக்கும் என்ன சம்பந்தம் என்று யாராவது சந்தேகப்பட்டால் இன்றோடு அந்த எண்ணத்தை விட வேண்டும். உணவைச் சமைப்பது போல் உணர்வைச் சமைப்பது சமயம். பக்குவமற்ற விஷயங்களைப் பக்குவப்படுத்துவது என்பது இரண்டுக்கும் பொதுவான பொருள்.

திருநெல்வேலி பக்கத்தில் சமையல் கலை வல்லாரைத் தவசுப் பிள்ளை என்று அழைப்பர். தபஸ் என்ற வடமொழிச் சொல் தவசு என்று தமிழாகிறது. தவஞ்செய்வாரே தவசி (தபஸ்வி) என்பது புராணங்களில் உள்ள செய்தி. இரண்டு பேரும் ஒரே காரியம்தான் செய்கிறார்கள் என்று நானும் கருதுகிறேன்.

தட்பம், வெப்பம் இரண்டையும் தக்க அளவில் மாறி மாறிப் பயன்படுத்தினால் உணவு பக்குவமாகிறது. அரிசியைத் தண்ணீரில் நனைத்து அடுப்பில் கொதிக்க விட்டு நீராலும் நெருப்பாலும் உணவைப் பக்குவமாக்குகிறார் தவசுப் பிள்ளை. அடுப்பை ஊதி ஊதி நெருப்பைப் பெருக்கிச் சமைப்பது போல தபஸ்வியும் மூலக் கனலை ஊதி ஊதிப் பெருக்கி மனத்தைச் சித்தமாக்கி, சித்தத்தைச் சிவமாக்கினால் அவனது சமையல் முடிந்தது! "மூலாதாரத்தில் மூண்டெழு கனலைக் காலால் எழுப்பும் கருத்தறிவித்து'' என்பது விநாயகர் அகவல்.

தாறுமாறாக அலைபாயும் சுவாசக் காற்றை ஒழுங்குபடுத்துகிறான் யோகி. 'சித்தம் சிவமானால் செய்தனவே தவமாகும்' என்கிறது திருவாசகம். எனவே அன்னத்தைச் சமைக்கும் சமையல் கலைஞரும் எண்ணத்தைச் சமைக்கும் சமயக் கலைஞரும் தவசி எனப்பட்டார்கள். இதுவே வாழ்வின் உண்மை நோக்கம் என்பதை உலகம் புரிந்து கொள்ள வேண்டி உலக மாதாவாகிய அம்பிகை தவம் புரிந்த தலங்கள் பல உண்டு.

'பூத்தவளே' எனத் தொடங்கும் அபிராமி அந்தாதி, மாத்தவளே என்கிறது அம்பிகையை. மாத்தவளே என்றால் அரிய பெரிய தவம் செய்தவள் என்பது பொருள். தவமே தானாகிய தாய் ஏன் தவம் செய்கிறாள்? சின்னப் பிள்ளைக்கு ஒரு விஷயத்தைப் புரிய வைக்க வேண்டும் என்றால் சின்னப் பிள்ளை மாதிரியே நாம் நடந்து கொண்டு புரிய வைத்தால் லகுவில் புரியும். குழந்தைகட்கு 'அ-ஆ' சொல்லும் ஆசிரியை, குழந்தைகளை விட பெரிதாக வாயைத் திறந்து கொண்டு, குழந்தைத்தனமான முகத்துடன் 'ஆ' சொன்னால் அப்படியே குழந்தைக்குப் பதிந்து விடும். எவ்வளவுக்கெவ்வளவு சின்னப் பிள்ளைத்தனமாகப் பெரியவர்கள் சேட்டை செய்கிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு விரைவாகக் குழந்தைகள் மனத்தில் அது பதியும்.

நமக்கெல்லாம் தவத்தைச் சொல்லிக் கொடுக்க வந்த அம்பாள் மனுஷத்தனமாகத் தவமிருந்தால்தானே தவம் நம் தலையில் ஏறும். அப்படித் தவம் இருந்த விஷயமே ஒரு பெரிய விழாவாகத் தமிழ்நாட்டில் நடக்கிறது ஒரு ஊரில்... பத்து நாள் திருவிழா. ஆடித் தபசு என்று சங்கரன்கோவிலில் நடைபெறும் பெருவிழா.

பூகைலாயம், புன்னைவனம், சீராசபுரம், சீராசை, வாராசைபுரம், கூழைநகர் என பல பெயர் பெற்ற ஊர் சங்கரன்கோவில். மதுரையில் இருந்து ராசபாளையம் வழி இவ்வூர் செல்லலாம். திருநெல்வேலி ஸ்ரீவில்லிபுத்தூர் பேருந்துகள் இவ்வூர் வழி செல்லும். 900 வருடங்கட்கு முன்பு உக்கிரம பாண்டியனால் கட்டப்பட்ட இத் திருக்கோவில் நூற்றி இருபத்தைந்து அடி உயரமுள்ள ஒன்பது நிலை உடைய கம்பீரமான - அகலமான ராஜகோபுரம் உடையது. கோயிலில் கிழக்குப் பிராகாரத்தில் வலது தூணில் உக்கிரமபாண்டியன் சிலையும், இடது தூணில் உமாபதி சிவாச்சார்யர் உருவமும் உள்ளன.

திருக்கோயில் மகாமண்டபத்தைச் சுற்றிலும் சிற்பச் செறிவுமிக்க சிறு சிறு உருவங்கள் செதுக்கி இருப்பது மிக மிக அருமையானது. மற்றபடி சிவாலயங்களில் வழக்கமாக உள்ள சுற்று தேவதா வடிவங்கள் எல்லாம் இங்கு உண்டு. கருவறைமூலவர் சங்கரநயினார் என்று அழைக்கப் பெறும் சங்கரலிங்க சுவாமி. மனோன்மணி என்ற சக்தியுடன் உள்ளிருக்கிறார்.

இந்தத் திருக்கோயிலின் பெரும்புகழும் கோயிலின் வடபால் உள்ள கோமதித் தாயிடம்தான் அடங்கி இருக்கிறது. ஒரு கரத்தில்

சுகிசிவம்

மலர்ச் செண்டு ஏந்தி, மறுகரத்தால் தன் திருவடிகளைக் காட்டும் பேரழகி கோமதி. கல்லாய் நின்றாலும் கல் மனத்தைக் கரைக்கும் அழகி அவள். 'ஆத்தா' என்று அடிவயிற்றிலிருந்து குரல் எழுப்பும் பாமரர் பக்திக்குப் பாய்ந்து வந்து உதவும் பராபரை அவள்.

உடற்பிணி உற்றோர் 'பிணியே பிணிக்கு மருந்தே' என்றபடி இவளை வேண்ட நோய் நீங்கி நலம்பெறுவது நாளும் நடக்கும் அதிசயம். உடம்பில் பாதிக்கப்பட்ட உறுப்பான, கண், காது போன்றவை அச்சடிக்கப்பட்ட வெள்ளித் தகடுகள் அம்பிகைக்கு நேர்த்திக் கடனாகச் செலுத்துவது வழக்கம். மாவிளக்கு ஏற்றி, சந்நிதியில் எதிரில் படுத்து வயிற்றிலும் நெஞ்சிலும் அதைச் சுமந்திருப்போரை இன்றும் என்றும் இவள் கோயிலில் காணலாம். உடற்பிணி அன்றியும் வேறு வகைத் தீமைகளையும் கண்டித்து துயர்நீக்கும் ஸ்ரீசக்கரம் இங்குண்டு. திருவாவடுதுறை பத்தாவது குருமகா சந்நிதானமாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ வேலப்பதேசிகர் பேர் அருள்பெற்ற பெரியார். அவர்கள் பிரதிஷ்டை செய்த சக்கரம் அம்பிகை திருக்கண் நோக்கால் தீராவினை தீர்க்கும் உயிர்ப்புடன் உள்ளது.

இங்கு இன்னொரு சிறப்பு அம்சம் புற்று மண் பிரசாதம். சங்கரன்கோவில் இறைவர் புற்றிலிருந்து வெளிப்பட்டதால் வன்மீகநாதர் என்றும் பெயர் பெறுவார். ஆதியில் இவ்வூர் புன்னைவனம். அங்கிருந்த புற்றைக் காவலுக்கிருந்தவன் கலைக்க அதிலிருந்த நாகம் வால் வெட்டுண்டு ஓடியது. ஆச்சர்யம். உள்ளே, கலைந்த புற்றில் சிவலிங்கம் இருந்தது. அதே நேரத்தில் அப் பகுதியை அரசாண்டிருந்த உக்கிரம பாண்டியனின் பட்டத்து யானை, கொம்பினால் தரையைக் குத்திக் கீழே விழுந்து புரண்டது. என்ன தீங்கோ! என்று மன்னர் அஞ்சிடும் போது காவலன் ஓடி வந்து நடந்ததை விளக்க, அங்கு ஆலயம் அமைக்கும்படி அசரீரீ ஒலித்தது. உக்கிரம பாண்டியன் புன்னைவனம் வந்து, புற்றையும், புற்றில் பெருமானையும், கூழையான பாம்பையும் கண்டு வணங்கி - கோவில் சமைத்தான். எனவே புற்றுமண் இத்திருக்கோவில் பிரசாதம் ஆனது. நோயுற்ற பகுதியில் புற்று மண்ணைக் குழைத்துத் தடவி நலம் பெறுவார் பலர் உண்டு.

அக்கினி தீர்த்தம், அகத்திய தீர்த்தம் சூர்யதீர்த்தம், வைரவ தீர்த்தம், கௌரி தீர்த்தம் என ஐந்து தீர்த்தங்கள் இங்கு உண்டு. மேலும் சங்கன், பதுமன் என்கிற இரு பாம்பு அரசர்களால் நன்கு தோண்டப்பட்டதும், முழுகப் பெற்றதுமான நாககனை, கோவிலுக்குள் நுழையும் இடத்தில் உள்ளது.

காந்திமதி என்ற சொல்லுக்கு ஒளி உடையவள் என்று பொருள் வருவது போல்,



கோமதி என்றால் பசுக்களை உடையவள் என்று பொருள். நெல்லை மாவட்டத்தில் ஆவுடையப்பன், ஆவுடையம்மை என்று மிகுதியான பெயர்கள் உண்டு. ஆ = பசு; உடையவள் = தலைவி. எனவே கோமதி ஆவுடையம்மை எனப் பெறுகிறாள். ஆன்மாக்களாகிய பசுக் கூட்டத்தை உடையவள் அவள்தானே!

இங்குள்ள இன்னொரு மூர்த்தி சங்கர நாராயணர். திருமாலைத் தமது இடது பாகத்தில் உடையவராகச் சிவபெருமான் காட்சி அளிக்கிறார். இங்குள்ள தீவிர சைவ சித்தாந்திகள் இந்த மூர்த்தியைப் பல காரணங்களால் விரும்பி வழிபடுவது இல்லை. ஆனால் தல வரலாறு கூறும் செய்தி நுட்பமானது. சங்கன், பதுமன் என்ற பாம்பு அரசர்கள் அரன் பெரியவனா? அரி பெரியவனா? என்று சண்டையிட்டனர். இந்தச் சங்கரநாராயணரைக் கண்டதும் சிவபெருமானின் ஒரு கூறுதான் அரி என்று தேர்ந்தனர். "ஐய நின் கூறே மாலும் அயன் முதல் தேவும் என்னும் மெய் உணர்வே எஞ்ஞான்றும் விளைவுற வேண்டும்" என்று தலபுராணம் சொல்கிறது. ஹரியும் ஹரனும் ஒன்றே என்று கருதும் மிதவாதிகள் கூட்டமும் உண்டு.

"தாழ் சடையும் நீள் முடியும் ஒண் மழுவும் சக்கரமும்
சூழ் அரவும் பொன் நாணும் தோன்றுமால்..."

என்கிற பேயாழ்வார் அனுபவமும் –

ஆழ்வார் வாக்கை அனுபவித்து சமமாகக் கருதும் சமயவாதிகளும் உண்டு.

இப்படி விஷ்ணுமூர்த்தியுடன் பொருந்தி சிவனைத் தரிசிக்கவே அம்பிகை தவமிருக்க, அதுவே ஆடித் தவசு விழாவாக இன்றும் நடைபெறுகிறது. திருமாலுடன் பொருந்திய திருக்கோலம் காட்டியருள்க என்று உமையம்மை வேண்ட, இந்தப் புன்னை வனத்தில் தவம் செய்யும்படி பெருமான் பணித்தார். பூலோகம் வந்த அம்மையுடன் தேவர்களும் தேவப் பெண்களும் பிரிய மாட்டாது தொடர்ந்தனர். அம்பிகை பூசித்த சிவபெருமானை – புன்னை மரங்களாக நின்று தேவர்கள் பூமாரி பெய்து வணங்கினர். தேவப் பெண்கள் பசுக்களாகிப் பால் பெய்து சூழ நின்று, அம்மையை அப்பனை அன்புடன் வணங்கினர். பசுக்கள் சூழப் பெற்றதால் ஆ உடை அம்மையான, அம்பிகையின் அருந்தவத்தை மெச்சி சிவபெருமான் ஆடி மாதம் பௌர்ணமியன்று தேவி விரும்பிய சங்கர நாராயணராகக் காட்சி கொடுத்தார் என்பதால் – இன்றும் ஆடித் தவசு விழாவில் சங்கர நாராயணராக இறைவர் காட்சி தருகிறார். திருக்கைலாயத்தில் இருந்த முனிவர்களே ஆதி சைவர்களாகப் பிறந்து இங்கு பூசிப்பதாக மரபு. தேவர்கள் புன்னை மரமாக, தேவப் பெண்கள் பசுக்களாக முனிவர்கள் ஆதிசைவராகிப் பூசிக்க, அம்பிகை ஆவுடையம்மையாகி சிவ பெருமானோடு இங்கு எழுந்தருளி இருப்பதால் இத்தலம் பூலோக கைலாயம் எனப்படுகிறது.

இந்தக் கோமதியம்மையிடம் சண்டைக்குப் போனார் ஒரு தமிழ்ப் புலவர். ஒரு பிள்ளை என்ன செய்ய வேண்டும் என்பதைக் கற்றுக் கொடுக்க வேண்டியவள் தாய்தானே? எலி பிடிப்பது எப்படி என்று குட்டிப் பூனைக்குத் தாய்ப் பூனைதானே கற்றுக் கொடுக்கிறது. பால் குடிக்கத் தெரியாத பச்சைக் குழந்தையைத் தாய் பட்டினி போடுவாளா? மார்புறவே அணைத்து எப்படி அருந்துவது என்று அறியாத சிசுவுக்கு எடுத்து ஊட்டும் கருணை தாயின் கடமை அல்லவா?

அது மாதிரி பக்தி பண்ணத் தெரியாது திரிந்து எமனிடம் சிக்க இருக்கும் ஜீவனைப் பால் குடிக்கப் பழக்கும் தாய் மாதிரி, திருவடி நிழலுக்குப் பழகும் பக்தனாக்குவது உன் கடமை அல்லவா? என்று சண்டைக்குப் போகிறார் அழகிய சொக்கநாதன் பிள்ளை. பருந்து பறந்து வந்து குஞ்சுகளைக் கொத்த வந்தால் – பலஹீனமான தாய்க் கோழி கூட துரத்துமே! குஞ்சுகளை இறகுகளில் ஒடுக்குமே! எமனிடமிருந்து மீட்டு இறகுகளில் அடைக்கும் கோழிக்கு உள்ள கருணை கோமதிக்கு வேண்டாமா?

" 'போடா' என்று எமனை விரட்டு! என்ன செய்வது என்று அறியாத இந்த மூடனை 'வாடா' என்று அழைத்து திருவடியில் அழுத்து. இப்படிச் செய்தால் யார் தடுப்பார் அன்னையே! கோமதி ஈஸ்வரியே!" என்று பாடினார். 'போ' என்று எமனை விரட்டு என்று சொல்லாமல், 'போடா' என்பதில் எமனிடம் வெறுப்பும் அம்பிகையின் அதிகார உரிமையும் வெளிப்பட்டது. பக்தனை 'வாடா' என்று அழைக்க வேண்டும் வரியில் பரிவு பாசம் இத்துடன் தன் மீது அவளுக்குள்ள உரிமையும் வெளிப்பட்டது.

'வா' என்பதை விட 'வாடா' என்பதில் நெருக்கமும் பாசமும் புலப்படும். உரிமை வெளியாகும். எந்த உரிமையும் கடமையுடன் கூடியது என்ற தர்க்க நியதிப்படி அம்பாளின் கடமையையும் நினைவூட்டும் பாடல் அழகிய சொக்கநாதரின் அழகிய பாடல்.

'கேடாவரும் நமனைக் கிட்டவராதே தூரப்
போடா என்றோட்டி உன்தன் பொற்கமலத்தான் நிழற்கீழ்
வாடா என அழைத்து வாழ்வித்தால் அம்மா! உனைக்
கூடாதென்றார் தடுப்பார் கோமதித்தாய் ஈஸ்வரியே.'

இந்த ஆண்டு

முதலிடத்தைப் பிடித்துள்ள

சூப்பர் ஹிட்!



ரூ. 54 மட்டுமே

இந்தியில் சரளமாகப் பேசப் பயிற்சியளிக்க இவ்வளவு ஈஸியான புத்தகம் இதுவரை வெளிவந்ததில்லை என மக்களின் பாராட்டைப் பெற்று முதலிடத்தைப் பிடித்துள்ளது **GRP** ஈஸி இந்தி கோர்ஸ்.

இந்தி பேசப்படும் மாநிலங்களுக்கு வியாபார விஷயமாக அல்லது வேலை காரணமாகச் செல்லும் போது நீங்கள் இந்தியில் சகஜமாகப் பேசப் பயிற்சியளிக்கிறது. **GRP** ஈஸி இந்தி கோர்ஸ்.

பல இந்திப் பரிட்சைகள் எழுதியும் இந்தியில் சரளமாகப் பேச முடியவில்லையே என வருந்துவோருக்கு வட நாட்டவர்களே வியந்து பாராட்டும் வகையில் அனாயாசமாக இந்தியில் பேசக் கற்றுத் தருகிறது. **GRP** ஈஸி இந்தி கோர்ஸ்.

எல்லாக் கடைகளிலும் கிடைக்கிறது! நீங்களும் வாங்கிப் பயனடையுங்கள்!

V.P.P. யில் பெற விரும்புவோர் GRP ஈஸி இந்தி கோர்ஸ் புத்தகத்தை V.P.P. யில் பெற விரும்புகிறேன் என்று குறிப்பிட்டு கடிதம் எழுதுங்கள். புத்தகத்தை பத்திரமாகப் பேக் செய்து V.P.P. மூலம் உடனே அனுப்பி வைக்கிறோம். தபால்காரரிடம் புத்தகத்தின் விலை மற்றும் தபால் செலவை செலுத்திப் பெற்றுக் கொள்ளுங்கள்.

நீங்கள் கடிதம் எழுத வேண்டிய முகவரி

G.R. PUBLICATIONS

39, நடேசன் தெரு, தி. நகர், சென்னை – 600 017.

GRP

A B F L - FOR PROSPERITY

16 கிளைகள்
இவையே எங்கள் வேர்கள்.

சென்னை அண்ணா நகர் ☎ 6262515	அசோக் நகர் ☎ 4825119	அடையார் ☎ 414311	ஆழ்வார்பேட் ☎ 4994809
ஜார்ஜ் டவுன் ☎ 5231231	நங்கநல்லூர் ☎ 2342163	தாம்பரம் ☎ 2366310	தி.நகர் ☎ 8241195
வளசரவாக்கம் ☎ 4826509	ஈரோடு ☎ 61264	**கோயம்பத்தூர்** டி.பி. ரோடு	**பாண்டிச்சேரி** ☎ 32833
செக்கந்திராபாத் ☎ 867377	**பெங்களூர்** மல்லேஸ்வரம் ☎ 366519	இந்திரா நகர் ☎ 5542815	ஜெயநகர் லக்கி பாரடைஸ் பில்டிங்

சிறப்பான சேவையே டெபாசிட்டருக்கு மனநிறைவைத் தரும் என்பதை அனுபவ பூர்வமாய் உணர்ந்தவர்கள் நாங்கள். அதனால் தான் வாடிக்கையாளரின் வசதியை மனதில் கொண்டு **16 கிளைகளைத் திறந்துள்ளோம்.** கம்ப்யூட்டர் உதவி யுடன் சேவை புரியும் நாங்கள், **அனுபவமிக்க மேலாளர்களைக் கொண்டு முதலீட்டு ஆலோசனைகளையும் அளிக்கிறோம்.** இந்த சேவை மனப்பான்மை தான் **55,000க்கும் மேற்பட்ட டெபாசிட்டர் களின் நம்பிக்கையை பெற்றுத் தந்திருக்கிறது.**

- **ABFL** இந்திய அரசு அங்கீகாரம் பெற்றது.
- முதன்முதலில் முதிர்வுக் காசோலை முறையை அறிமுகம் செய்தது **ABFL**தான்.
- இந்தியாவின் **180 இடங்களில்** மாற்றத்தக்க வட்டிக் காசோலை களை வழங்குகின்றோம்.

சுப்ரீம் பே-பேக் பாண்ட்

ரூ. 10,000 ➡ **24 மாதங்களில்** ➡ ரூ. 15,164

டெபாசிட் ரசீது + முன் தேதியிட்ட காசோலை

பென்ஷனர்ஸ் பெட் டெபாசிட்

முதலீட்டுத் தொகை ரூ.	வருடாந்திர வட்டி விகிதம்/காலம்			
	12 மாதங்கள்	24 மாதங்கள்	36 மாதங்கள்	48 மாதங்கள்
5,000	6,095	7,505	9,340	11,725
10,000	12,195	15,015	18,680	23,450

- **0.5% ஊக்கத்தொகை, 180 நாட்கள் மற்றும் அதற்கு மேலான டெபாசிட் திட்டங்களுக்கு**

21% வரை

◀ **உங்களின் வளர்ச்சிக்கு** ▶

ஆழ்வார்ப்பேட் பெனி:பிட் :பண்ட் லிமிடெட்

பதிவுபெற்ற அலுவலகம் :
43-B சி.பி. ராமசாமி ரோடு, ஆழ்வார்பேட்,
சென்னை 600 018. போன் : (044) 4994809

Dattaram

தாரகை

குழந்தை சிணுங்கியது.

விஸ்வநாதன் விடவில்லை.

படபடவென கன்னம் தட்டினான்.

குழந்தை புரண்டது.

தயக்கமாய்க் கண் திறந்தது.

"அனு... எழுந்திரு...!"

விஸ்வநாதனின் குரல் எரிச்சலாய் வந்தது.

குழந்தை மீண்டும் கண்களை மூடியது.

பளிச்சென முதுகில் அறை விழுந்தது.

குழந்தை முகம் கோணியது.

தமயந்தி பதறினாள்.

"என்ன இது... காட்டுமிராண்டித்தனம்?"

முறைத்தாள்.

அருகில் அமர்ந்தாள்.

குழந்தையின் கன்னம் வருடினாள்.

"அம்மா...!"

புரண்டு மடியில் முகம் புதைத்தது.

விஸ்வநாதன் வாட்ச் பார்த்தான்.

"போதும் கொஞ்சல்... சீக்கிரம் கிளப்பி விடு...!"

கோபம் வந்தது.

"பாவம் சின்னக் குழந்தை... அதைப் போட்டு சித்ரவதை பண்றீங்களே...?"

ரௌத்ரமானான்.

"என்னடி அம்மாவும், பொண்ணும் விளையாடறீங்களா...? அங்கே டைரக்டர் காத்திட்டு இருப்பார்... கிளைமாக்ஸ் சீன் எடுக்கணும்...!"

"சரி... அதுக்காக... ராத்திரி இரண்டு மணிக்குக் குழந்தை படுத்தது... கொஞ்சமாச்சும் இரக்கம் வேண்டாம்...!"


அவன் குரல் உயர்ந்தது.

"பத்தாயிரம் ரூபாய்... படத்துக்குப் பத்தாயிரம்... போகலைன்னா... அவ்வளவுதான்... வேறு யாராச்சும் கொத்திட்டுப் போய்டுவாங்க...!"

"பெத்த புள்ளையோட பணம் பெரிசாப் போச்சா...?"

"த பார்.. சீக்கிரம் கிளம்பு... அப்புறம் நான் பொல்லாதவனாய்டுவேன்...!"

விஸ்வநாதன் நகர்ந்தான்.



மதுமிதா


தமயந்தி துக்கத்துடன் குழந்தையின் தலை கோதினாள்.

ஹீரோயின் இன்னும் வரவில்லை.
காத்திருந்தார்கள்.
குழந்தை மடியில் தூங்கிக் கொண்டிருந்தது.
தமயந்தியின் கை குழந்தையின் முதுகில் தட்டிக் கொண்டிருந்தது.
தூரத்தில் விஸ்வநாதன் உதவி டைரக்டரிடம் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தான்.
ராட்சசன்.
நான்கு வயதுக் குருத்தையை வைத்து சம்பா தித்துக் கொண்டிருக்கிறான்.
தடுக்க முடியவில்லை.
கண் கொப்பளித்தது.
தோளில் கை விழுந்தது.
சடாரெனத் திரும்பினாள்.
நிவேதிதா.
மாறவேயில்லை.
கல்லூரியில் படித்த அதே பொலிவுடன் இருந்தாள்.
"ஹாய்... தமு... இங்க என்ன பண்றே...?"
குரல் மலர்ச்சியாய் வந்தது.
சொன்னாள்.
"ஹை... இது படம் ரெண்டு, மூணு பாத்துருக்கேன். எனக்கே தெரியலையே...!"
குழந்தையின் விரல் கோர்த்தாள்.
"நீ என்னடி பண்றே?"
தமயந்தி கேட்டாள்.
"ஆதரவற்றோருக்கான ஒரு ஹோம் நடத்தறேன்... இந்தா என் விசிட்டிங் கார்டு...!"
நீட்டினாள்.
"விச்ராந்தி ஹோம் உன்னதுதானா...? சரி... முரளி எப்படி இருக்கார்...?"
"ஓ... ஃபைன்... வேலையை ரிசைன் பண்ணிட்டார். நானும், அவரும்தான் இதைப் பாத்துக்கறோம்... அப்புறம் நிமோஷினி வரச் சொன்னா... அதான் இந்தப் படத்தோட ஹீரோயின்... டொனேஷன் தர்றேன்னா... அதான்...!"
சிரித்தாள்.
"அடியே இவளே... நீயும் சினி ஸ்டாரோட அம்மா... எதாச்சும் டொனேஷன் கொடு...!"
தமயந்தி தயக்கமாய்ச் சிரித்தாள்.
"உங்க ஹோம்ல யாரெல்லாம் இருக்காங்க?"
"அநாதைக் குழந்தைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், குழந்தைகளால் விரட்டப்பட்ட பெற்றோர்கள்..."
நிவேதிதா ஆர்வமாய் சொல்லிக் கொண்டிருந்தாள்.

இயக்குநரின் குரல் உயர்ந்தது.
"சீக்கிரம்... மழை போடுங்க...!"
நாலு பக்கமிருந்தும் ரப்பர் குழாயிலிருந்து தண்ணீர் பீறிட்டது.
கதாநாயகி நனைந்தாள்.
அவள் தோளிலிருந்த குழந்தை நனைந்தது.
காமிரா ட்ராலியில் உருள ஆரம்பித்தது.
குழந்தை தலையைப் புரட்டிப் புரட்டி எடுத்தது.
தமயந்தி அதிர்ந்தாள்.
"என்னங்க... என்னங்க...?"
விஸ்வநாதனை உலுக்கினாள்.
"காலங்கார்த்தால குழந்தை மேல இப்படி தண்ணி கொட்டினா...?"
"சும்மா இருடி... கிளைமாக்ஸ் சீன்... இந்த சீன் பாத்துட்டு தியேட்டர்ல தாய்க்குலம் கண்ணீர் விடப் போறது... நம்ம பாப்பாவுக்கு ரேட் உயரும்...!"
அழுகை வந்தது.
குழந்தையையே பார்த்துக் கொண்டிருந்தாள்.
குழந்தை முழுவதும் நனைந்திருந்தது.
சோகப் பாடல் பின்னணியில் ஒலித்தது.
கதாநாயகியின் உதடு ஒத்துழைக்கவில்லை.
இயக்குநர் 'கட்' சொன்னார்.
மீண்டும் மழை.
மீண்டும் பாடல்.
மீண்டும் கட்.
கதாநாயகி குழந்தையை இறக்கி விட்டாள்.
இடுப்பு அசைத்து நடந்து போய் நாற்காலியில் உட்கார்ந்தாள்.
தமயந்தி வேகமாய்ப் போய் குழந்தையைத் தூக்கிக் கொண்டாள்.
பரபரவென புடைவையால் குழந்தையின் தலை துவட்டினாள்.
நகர்ந்து ஒதுக்குப்புறமாய் நின்றாள்.
விஸ்வநாதன் துணை நடிகையிடம் பேசிக் கொண்டிருந்தான்.
குழந்தையை மெல்ல இறுக்கிக் கொண்டாள்.
சட்டென திரும்பி நடக்க ஆரம்பித்தாள்.

கதவைத் திறந்தது அப்பாதான்.
சிரித்தார்.
"வாம்மா... ஹாய்... அனுகுட்டி...!"
உள்ளே போனார்கள்.
அம்மா ஆர்வமாய்க் கேட்டாள்.
"என்ன ஷூட்டிங் இன்னைக்கு எதுவும் இடையாதா?"
தமயந்தி உடைந்தாள்.
அம்மா பதறினாள்.
"என்ன தமயந்தி?"
விம்மலுடன் சொன்னாள்.
அப்பா இவளையே பார்த்துக் கொண்டிருந்தார்.
"தப்புப் பண்ணிட்டியே தமயந்தி!"
"என்னப்பா சொல்றீங்க...?"
"ஆமாம்மா... இதில என்ன கஷ்டம்... பத்து நாள் நடிச்சுக் கொடுத்தா பத்தாயிரம் கிடைக்குது...!"

காய்ந்த கண்ணீர்!



பொழுது புலர்ந்தது — புத்துணர்ச்சி பிறந்தது
நல் விடியலுக்குத்தடை — தந்தி ரூபத்தில்
"தம்பிக்கு உடல் நலமில்லை"— கண்ணில் தண்ணீர்
காரணம் தம்பி மட்டுமல்ல தாமதமின்றி தந்தி வந்ததற்கும்

அந்த கண்ணீருடன் ஏறினேன் பேருந்தில்
விரைந்தது அதுவும் இடை யூறின்றி
காய்ந்த கண்ணீர் மீண்டும் ஈரங்கொண்டது
சாலை மறியல் இன்றி தம்பியூர் சேர்ந்தமைக்கு

படுக்கையில் உடன்பிறப்பு —மூச்சுக்கு முகாரி பாடிக்கொண்டு
பதறினேன் பரிதவித்தேன் — வாரி அணைத்துக் கொண்டு
ஏறினேன் விரைந்தேன் ஆட்டோவில்— மீண்டும் கண்ணீர்
பேரம் பேசாத ஓட்டுனரின் பெருந்தன்மை கண்டு.

நின்றது ஆட்டோ — ரோட்டில் நிறைந்த வாகன வரிசையில்
தலை எடுத்தது தவிப்பும் — பதறலும் பரிதவிப்பும்
காரணம் கேட்டுக் கலங்கியது நெஞ்சு
வாகன அணிவகுப்பு பலமணி நேரமாம் — தங்கத்தலைவனாம்
தரணி ஆள்பவன் பிணிரதம் — சாலை கடக்கும் வரை
பாதுகாப்புக் கருதியாம் — குமுறியது நெஞ்சம்
தம்பி இடத்தில் இந்தத் தலைவன் இருந்தால் — இப்படி
தடுக்கத்தான் முடியுமா? இந்தத் தடைகள்தான் வருமா?
நடப்பதென்ன! "குடி"யாட்சியா? "முடி"யாட்சியா? ஒன்று உறுதி
"ஓடமும் ஒருநாள் வண்டியில் ஏறும்"
இம்முறை வரவில்லை கண்ணீர் —

— வர்ஷாந்த்

"அப்பா... நீங்களுமா?"

அவள் கேள்வியில் வேதனை இருந்தது.

"என்ன தப்பு இதில?"

"குழந்தை பாவம்பா...!"

"இங்க பார் தமயந்தி... விஸ்வநாதன் சாதாரண குமாஸ்தா... பத்தாயிரம் சம்பாதிக்கிறதுக்கு ஆறு மாசம் வேலை பாக்கணும். குழந்தை பத்து நாள்ல சம்பாதிச்சிடும்...!"

"அப்பா... பணம்... பணம்னு நீங்களும் பேசறீங்களா?"

"ஆமாம்மா... முழுசா பத்தாயிரத்தை நான் ரிடையர் ஆனப்பதான் பாத்தேன்.. உன் தங்கை கல்யாணத்துக்குக் கூட உன்கிட்டதான் பணம் கேக்கலாம்னு இருக்கேன்... சித்தி கல்யாண செலவு அனுவோடது...!"

அப்பா விவஸ்தையின்றிச் சிரித்தார்.

"ஆட்டோ கொண்டு வர்றேன்... நேரா ஸ்டுடியோவுக்குப் போற வழியப் பாரு...!"

அப்பா ஆட்டோ பிடிக்கக் கிளம்பினார்.

விச்ராந்தி ஹோம்.

அமைதியாக இருந்தது.

தயக்கமாய் நுழைந்தாள்.

தோளில் குழந்தை தூங்கிக் கொண்டிருந்தது.

வயதான பெண் எதிர்ப்பட்டாள்.

"நிவேதிதாவைப் பாக்கணும்...!"

"வாம்மா...!"

பின்தொடர்ந்தாள்.

வழியெங்கும் குழந்தைகள் தென்பட்டன. முதியவர்களும் கூட.

நீள காரிடார் முனையில் நிவேதிதாவைப் பார்த்தாள்.

அவள் கை பிடித்து ஒரு குழந்தை தள்ளாடித் தள்ளாடி நடந்து கொண்டிருந்தது.

இவளைப் பார்த்ததும் மலர்ந்தாள்.

"ஹாய்... தமயந்தி, நான் இவ்வளவு சீக்கிரம் எதிர்பார்க்கலை... எங்க ஹோமுக்கு எவ்வளவு டொனேஷன் கொடுக்கப் போறே...?"

இங்கும் பணம்தான் பிரதானமா?

தமயந்தி யோசித்தாள்.

"இல்லை. சும்மா பார்த்துட்டுப் போகலாம்னு வந்தேன். டொனேஷன் அப்புறமா தர்றேன்!" என்றாள்.



படங்கள் — நன்றி : ஸ்வாகத்

"கால் ஆணி வேறு. பாதத்தின் அடியில் சின்னக் கட்டி மாதிரி துருத்திக் கொண்டு கிளம்பும் பிளான்டர் வார்ட் வேறு. இரண்டும் பார்ப்பதற்குக் கிட்டத்தட்ட ஒரே மாதிரி இருந்தாலும், இரண்டுக்கும் வித்தியாசம் இருக்கிறது!" என்கிறார் சரும நோய் நிபுணர் டாக்டர் வி. ஆர். ஜானகி.

"நார் போன்ற திசுக்களின் அபரிமிதமான வளர்ச்சி (Excessive fibrous tissues proliferation) காரணமாகத்தான் காலில் ஆணி வருகிறது. ஒரு காலுக்கு அதிக அழுத்தம் கொடுத்து நடக்கும் போது, அந்த அழுத்தம் காரணமாகக் காலில் ஆணி வருகிறது. Flat foot எனப்படும் தட்டைக் கால்கள் உள்ளவருக்கும் கால் ஆணி வருகிறது. இது ஆர்த்தோபீடிக் (எலும்பு) சம்பந்தமானது. அதாவது, இதிலும் பிரஷர் அல்லது அழுத்தம் தான் முக்கிய காரணி. இவை தவிர, சரும நோய் காரணமாகவும் ஆணி வரலாம்!" என்கிறார் டாக்டர் ஜானகி.

"ஆணி (corn)யை அகற்றுவதை விட, அது தோன்றியதற்கான அடிப்படைக் காரணத்தை அறிந்து, அதற்குண்டான சிகிச்சையை மேற்கொள்ளுவதுதான் நல்லது. பிறகு ஆணியை மருத்துவ சிகிச்சை மூலமாக – அதாவது மருந்துகள் உட்கொண்டோ,

பொன்னான பாதங்கள் புண்ணாகலாமா?


அறுவைச் சிகிச்சை மூலமாகவோ குணப்படுத்தி விடலாம்."

முதலில் . அந்தப் பகுதியிலுள்ள தோலின் கனத்தைக் குறைக்கும் முயற்சியில், 10% சாலிசைலிக் ஆஸிட் க்ரீம் கொடுக்கப்படுகிறது.

அடுத்தபடி, மிருதுவான செருப்பு அணியச் சொல்லுகிறார் டாக்டர்.

"மிருதுவான என்றால்?"

"மைக்ரோ செல்லுலர் ரப்பரால் செய்யப்பட்ட பாத அணிகள். இவை இப்போது கிடைக் கின்றன."



அப்புறம், ஆணி வந்த இடத்துக்கு மட்டும் குஷன் எஃபெக்ட் கொடுக்கும் மிருதுவான செருப்புகள் அணியலாமாம்.

"முதலில் சொன்ன பிளான்டர் வார்ட் வர என்ன காரணம்?"

"வைரஸ் கிருமிகளின் தாக்குதலால் வருவதுதான் இந்த வார்ட். இதற்கும் முதலில் சாலிசைலிக் ஆஸிட் ஆயின்ட்மென்ட் தடவலாம். கடைகளில் 'கார்ன் பிளாஸ்டர்' என்று விற்கிறார்கள் இல்லையா? இதிலும் இந்த சாலிசைலிக் ஆஸிட்தான் இருக்கும். லிக்விட் நைட்ரஜன் கொண்ட 'க்ரையோ தெரபி' செய்து குணப்படுத்தலாம். இல்லை என்றால் அறுவைச் சிகிச்சையால் அகற்றி விடலாம். இவர்களும் கூட மேற்படி மிருதுவான காலணிகளை அணியலாம். பாதத்தை அழுத்தி வைத்து நடக்கும் போது வலி தெரியாது."

"உள்ளங்காலில் பாளம் பாளமாக வெடிப்பு உண்டாகிறதே சிலருக்கு. அதற்கு என்ன காரணம்?"

"பெரும்பாலும் மரபுக்கூறுதான் காரணம். அதாவது பரம்பரை பரம்பரையாக இது இருந்து வரும். பொதுவாக, இத்தகைய வெடிப்பு உள்ளவர்களின் காலின் மேல் தோல் வறண்டு இருக்கும்.

"மேற்கத்திய நாடுகளில் இந்தப் பிரச்னை வருவதில்லை. காரணம், சாக்ஸ் போட்டு அதற்கு மேல் ஷூக்களையும் போட்டுக் கொண்டு விடுகிறார்கள். இதனால் மேல் தோல் வறண்டு போவதில்லை என்பதோடு வெளி அழுக்குகளும் அண்டுவதில்லை."

"நம் நாட்டில் ஸ்லிப்பர்கள் போட்டுக் கொண்டு கூட நடமாடுவது இல்லை. அதனால் சில வெளியிடங்களில், வெறும் காலோடு நடப்பதால், மண் உள்ளே புகுந்து, இன்ஃபெக்ஷன் காரணமாக, வெடிப்புகள் தோன்றுகின்றன. இதை ஃபிரஷர்ஸ் என்கிறோம்."

"சரி, இதற்கு என்ன மருந்து?"

"பலரும் இதற்குக் களிம்பு வாங்கிப் பூசுகிறார்கள். களிம்பில் இருப்பது வாஸிலைன்தான். வாஸிலைன் மிருதுவாக வருடுவது போன்ற தன்மை உடையது. (பெட்ரோலியம் ஜெல்லிதான் வாஸிலைன்!) அதைத் தினசரி போட்டு வந்தாலே இன்ஃபெக்ஷன் போய் விடும். தேவைப்பட்டால் டாக்டரைக் கேட்டு ஆன்ட்டிபயாடிக் மாத்திரைகளும் சாப்பிடலாம். இவர்களும் மிருதுவான காலணிகள் அணியலாம். இவை எல்லாம், இரண்டு கால்களிலும் வெடிப்புகள் இருந்தால் மட்டுமே!" என்றார் டாக்டர் ஒரு சின்ன சஸ்பென்ஸ் வைத்து.

"ஒரு காலில் மட்டும் இருந்தால்?"

"ஒரே காலில் மட்டுமே வெடிப்பு இருந்தால், அந்தப் பகுதிகளில் உணர்ச்சியும் இல்லாமல் இருந்தால், வேறு நோய் ஏதாவது இருக்கிறதா என்று மருத்துவரிடம் காண்பித்துப் பரிசோதித்துக் கொள்ளுவது நல்லது!"

\- சாருகேசி

நாட்டியமும்
நடனமும்
ஆடுவதற்குத்தான்
ஆரோக்கியமான
பாதங்களும்
உள்ளங்கால்களும்
தேவை
என்பதில்லை.
நடப்பதற்கும்
அந்த
ஆரோக்கியம்
தேவை என்பதால்
பாதங்களையும்
நாம் சுத்தமாகப்
பராமரிப்பது
அவசியம்....

ஆனால்
முகத்தைத்
தேய்ப்பதில்
செலுத்தும்
கவனத்தில்
பாதியைக் கூட
நாம்
பாதங்களுக்குத்
தருவதில்லை...
விளைவு...?
வெடிப்புகள், கால்
ஆணி என்று
சிறிதும்
பெரிதுமாகப்
பலவித
தொந்தரவுகள்....

போட்டிக் கதை – 1

"சார்! விபத்து நடந்து ரெண்டு வருஷம் ஆயிடுச்சு. இந்த ஊனமான காலோட இதுவரைக்கும் இங்கே நூறு தடவைக்கு மேல வந்துட்டேன். ஆனாலும் லேபர் கோர்ட்ல இன்னும் கேஸ் நடந்துக்கிட்டே இருக்கு. எனக்கு எப்ப சார் நியாயம் கிடைக்கப் போவுது? எப்ப சார் நான் கேட்ட பணம் கிடைக்கப் போவுது?"

டிரைவர் ஜெயராமனின் மனசு பதறியது. தேகம் துடித்தது.

மானேஜிங் டைரக்டர் ஹர்ஷவர்தன் அமைதியாய் ஏறிட்டார்.

இதே ஜெயராமன் வேலையில் சேரும்போது எவ்வளவு துடிப்பாக இருந்தான்! கட்டுமஸ்தான உடல். கால்பந்தாட்ட அணியிலும் எவ்வளவு சிறந்தவனாகப் பேர் எடுத்தான்! அப்படிப்பட்டவன் இன்று வலது முழங்காலை இழந்து, வேலையையும் இழந்து, ஊன்றுகோலுடன் நடமாடிக் கொண்டிருக்கிறான் என்றால் அது எவ்வளவு பெரிய கொடுமை!

ஆனாலும் ஆறுதல் வார்த்தைகள் தவிர அவரால் உறுதியாய் எதுவும் சொல்ல முடியவில்லை.

மதுமனோ

"உன் வேதனை எனக்குப் புரியுது ஜெயராமன். உனக்காக கேஸ் விஷயமா நானும் எவ்வளவோ முயற்சி எடுத்திருக்கேன். ஆனாலும் கேஸ் வாயிதா வாங்கிக்கிட்டே இருக்கு."

"ஏன் சார் வாயிதா வாங்கணும்? நான் சாகறவரைக்கும் கோர்ட்ல கேஸ் வாயிதா வாங்கிக்கிட்டே இருக்குமா? என்ன சார் நியாயம் இது?"

"அப்படிச் சொல்லாதே ஜெயராமன். கேஸ் இவ்வளவு காலமா இழுத்துக்கிட்டிருக்கிறதுக்கு முக்கிய காரணம், உன் தரப்புல பலமான சாட்சியங்கள் இல்லை."

"இருக்கு சார். கண்டக்டர் சொல்றது சாட்சி இல்லையா?"

"அது போதாது. பஸ்ல இருபது பயணிகள் இருந்தாங்களே தவிர, அவங்கள்ல யாராவது ரெண்டு பேர் சாட்சி சொல்ல வந்திருக்கலாமில்லையா?"

"சார், நீங்க பெரிய பதவில இருக்கீங்க. பெரிய படிப்பு படிச்சிருக்கீங்க. உங்களுக்குத் தெரியாதது எதுவும் இல்லை. அர்த்தஜாமம் ரெண்டு மணிக்கு இந்த விபத்து நடந்திருக்கு. அப்ப பயணிகள் எல்லோருமே நல்லா தூங்கிக்கிட்டிருந்தாங்க. அவங்க யாராவது முழிச்சுக்கிட்டிருந்தாத்தானே விபத்து நடக்கிறதுக்கு முன்னால பார்த்திருக்க முடியும். சாட்சி சொல்ல முடியும்."

"இதெல்லாம் நமக்குள்ள பேசிக்கலாம். ஆனா நடைமுறைக்கு ஒத்து வராது."

"அப்ப என் மேலேயே தப்புன்னு சொல்றீங்களா?"

"நான் ஸ்பாட்ல இல்லையே ஜெயராமன். நடந்தது என்னங்கிறது சாட்சியங்களை வைச்சுத்தானே கேஸே நடந்துக்கிட்டிருக்கு."

"என்ன சார் சாட்சியங்கள்? சாராய லாரில வந்த நாலு கயவாளிப் பசங்க சொல்றதுதான் சாட்சியா? அந்த லாரி டிரைவர் நல்லா குடிச்சுட்டு, அவனது இடதுபக்கத்தைச் சுத்தமா விட்டுட்டு என்னுடைய சைட்ல வந்து மோதிட்



டான். மேலும் நான் ஓட்டிக்கிட்டுப் போயிருந்த பஸ் விபத்துக்குள்ளானதும் ரோட்டுக்கு இடது பக்கமாத்தானே ஒதுங்கியிருந்தது. டிராபிக் டிபார்ட்மெண்டுலேருந்தும் ஆட்கள் வந்து

கோடு கிழிச்சு வெச்சிருந்தாங்களே, இதுக்கு மேலேயா ஆதாரம் வேணும்?"

"நான் எதுவும் சொல்லக்கூடிய நிலையில இல்லை ஜெயராமன். எதிர்த்தரப்பு வக்கீலால கேஸ்ல பல திருப்பங்கள் ஏற்பட்டிருக்கு. அவ்வளவுதான் என்னால சொல்ல முடியும்."

"எனக்குத் தெரியும் சார். சாராய லாரி ஓனர் சாதாரண ஆளில்லை. நிறைய அரசியல் செல்வாக்கு உள்ளவன். எங்கெங்கே பணத்தைக் கொடுத்து கேஸை உடைக்க முடியுமோ அங்கேயெல்லாம் பணத்தைக் கொடுத்து கேஸை முடிக்கப் பார்க்கிறான். பணம்தான் சார் பேசுது. நியாயம் நேர்மை இதுக்கெல்லாம் காலம் இல்லை."

"நம்பிக்கையோடு இரு ஜெயராமன். உனக்கு நிச்சயம் நல்லது நடக்கும். ஆனா அது எப்படி எப்ப நடக்கும்னுதான் என்னால சொல்ல முடியலை."

ஜெயராமன் முகத்தில் விரக்தி, வேதனை. மேற்கொண்டு ஏதும் பேச விரும்பாமல் வெளியேறினான்.





வீட்டு வாசலில் காத்திருந்த மனைவி வசந்தி, கணவனிடமிருந்து நல்ல சேதியை எதிர்பார்த்து வழக்கமாய் ஏமாந்து போனாள். முகம் வதங்கிப் போயிற்று.

'ஒவ்வொரு முறையும் இப்படியே சொல்லிக்கிட்டிருந்தா எப்படிங்க? நம்ம கஷ்டங்கள் எப்பங்க விடியப் போவுது?"

"விடியாது வசந்தி. நான் செத்ததுக்கப்புறம் தான் விடியும்."

வசந்திக்குக் கண்கள் கலங்கின.

"அப்படிச் சொல்லாதீங்க. நம்ம குழந்தைகளுக்கு அப்புறம் யார் இருக்கா?"

ஆமாம்! குழந்தைகளின் கதி?

அவனும் பல முறை யோசித்திருக்கிறான்.

அடுத்த மாதம் முதல் தேதி வந்தால் குழந்தைகளுக்கு பீஸ் கட்டியாக வேண்டும். வாடகை கொடுத்தாக வேண்டும்.

மளிகைக் கடையில் கணக்கெழுதும் வேலை பார்த்து, அதில் கிடைக்கும் சொற்ப பணத்தில்

வீட்டுச் செலவுகளை சமாளிக்க முடியாமல் விழி பிதுங்கினான். மனைவியின் ஓரிரு நகைகளையும் விற்றாகி விட்டது. வீட்டிலிருந்த பொருட்களும் கரைந்து கொண்டிருந்தன. அடுத்து?

"யுவர் ஆனர்! ஒரு விஷயம் தெளிவாகத் தெரிகிறது. பஸ் டிரைவர் ஜெயராமன் மட்டும் ஹெட்லைட்ஸ் போட்டு வாகனத்தை ஓட்டியிருந்தால் எதிரே இரசாயன பொருளை ஏற்றி வந்து கொண்டிருந்த லாரி இப்படி மோதியிருக்காது."

அடப்பாவி! சாராயம் என்பது இரசாயனப் பொருள் ஆகி விட்டதா? எப்படி கதை விடுகிறான் இந்த வக்கீல்!

விசாரணைக் கூண்டில் நின்றிருந்த ஜெயராமனின் மனசு பரபரத்தது.

நீதிபதி எதையோ குறித்துக் கொள்ள, மீண்டும் எதிர்த்தரப்பு வக்கீலே தொடர்ந்தார்.

"இது மட்டுமில்லை. விபத்து நடப்பதற்கு முன் டிரைவர் ஜெயராமன் மணிக்கு நூறு கி.மீ. வேகத்தில் பஸ்ஸை ஓட்டிச் சென்றதாக ஆதாரங்கள் இருக்கின்றன."

அதற்கு மேலும் ஜெயராமனால் பொறுமையாய் இருக்க முடியவில்லை. சரேலென வாதத்தின் நடுவே இடைமறித்தான்.

"இது பொய்! அப்பட்டமான பொய்! அர்த்தஜாமத்தில் கட்டுப்பாடில்லாமல் வந்து கொண்டிருந்த அந்த லாரியைக் கண்டதுமே வேகத்தை மணிக்கு இருபது கி.மீ.க்கு குறைத்து விட்டேன். ஹாரனும் அடித்து எச்சரித்தேன். ஆனாலும் பிரயோஜனம் இல்லை. குடி போதையில் இருந்த லாரி டிரைவர் காட்டுத்தனமாய் வந்து மோதி விட்டான்."

எதிர்த்தரப்பு வக்கீல் கரடியாய்ச் சீறினார்.

"இதெல்லாம் நம்பத்தகாத கட்டுக்கதை. தான் கோரிய ஈட்டுத் தொகையை அடைய வேண்டும் என்பதற்காக, குற்றத்திலிருந்து எப்படியாவது தப்ப வேண்டும் என்பதற்காக ஜெயராமன் இப்படியெல்லாம் வாதிடுகிறார். நேரில் பார்த்த சாட்சியங்களே இருக்கும் போது, இவர் சொல்வதை யாராலும் நம்ப முடியாது என்பதை கனம் கோர்ட்டார் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்."

ஜெயராமன் திகைத்துப் போனான். யாரோ முன்பின் தெரியாத இருவர் சாட்சிக்காக விசாரணை கூண்டுக்கு வர நீதிபதியிடம் மன்றாடினான்.

"சார். நான் சொல்வதை நம்புங்கள். நான் மட்டும் உரிய நேரத்தில் பிரேக் போடாமல் இருந்திருந்தால் பெரும்பாலான பயணிகள் இறந்திருப்பார்கள். ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை. ஓரிரு பயணிகள் மட்டுமே லேசான காயம் அடைந்திருந்தார்கள்."

எதிர்த்தரப்பு வக்கீல் அலட்சியமாய்ப்

விவேகானந்தாவின் " ஹைபவர் இங்கிலீஷ் கோர்ஸ் " விவரம்

LEVEL-1 (அடிப்படை ஆங்கிலம்) ABCD யிலிருந்து தொடங்கி ஆங்கில வார்த்தைகளை எழுத, படிக்க எளிய முறையில் பயிற்சி பெறலாம் கட்டணம் ரூ. **110/-** மட்டுமே

LEVEL-2 (இலக்கணப்பயிற்சி) ஆங்கில இலக்கணத்தை முழுமையாகக் கற்றுக் கொண்டு, பிழையின்றி கடிதங்கள், கட்டுரைகள் எழுத முறையான பயிற்சி பெறலாம் கட்டணம் ரூ. **140/-** மட்டுமே.

LEVEL- 3 (ஸ்போக்கன் இங்கிலீஷ்) எந்தச்சூழ்நிலையாக இருந்தாலும் தயக்கமின்றிச் சரளமாகப் பேச நவீன முறையில் பயிற்சி பெறலாம். கட்டணம் ரூ. **170/-** மட்டுமே

SPECIAL OFFER

LEVEL- 2&3 இரண்டு பிரிவுகளிலும் சேர்ந்து பயிற்சி பெற ரூ. **270/-** மட்டும் செலுத்தினால் போதும்.

LEVEL- 1,2&3 மூன்று பிரிவுகளிலும் சேர்ந்து பயிற்சி பெற ரூ. **350/-** மட்டும் செலுத்தினால் போதும்.

முன்பணம் அனுப்பத் தேவையில்லை. பாடங்களை V.P.P யில் அனுப்பு கிறோம்.

இக் கூப்பனைப் பூர்த்தி செய்து இன்றே அனுப்புங்கள்.

KLK

விவேகானந்தா கல்வி நிலையம்

9, NATESAN STREET, T.NAGAR, MADRAS-600 017.

நான் விவேகானந்தாவின் ஹைபவர் இங்கிலீஷ் கோர்ஸில் சேரவிரும்புகிறேன், பாடங்களை V.P.P. யில் அனுப்புங்கள் (தேவையான கட்டத்தில் ✔ குறியிடவும்)

- ☐ LEVEL-1 பாடங்களை அனுப்புங்கள் ரூ. 110/- செலுத்திப் பெற்றுக்கொள்கிறேன்
- ☐ LEVEL-2 பாடங்களை அனுப்புங்கள் ரூ. 140/- செலுத்திப் பெற்றுக்கொள்கிறேன்
- ☐ LEVEL-3 பாடங்களை அனுப்புங்கள் ரூ. 170/- செலுத்திப் பெற்றுக்கொள்கிறேன்
- ☐ LEVEL-2 & 3 பாடங்களை அனுப்புங்கள் ரூ. 270/- செலுத்திப் பெற்றுக்கொள்கிறேன்
- ☐ LEVEL-1,2 & 3 பாடங்களை அனுப்புங்கள் ரூ. 350/- செலுத்திப் பெற்றுக்கொள்கிறேன்

பெயர்..

முகவரி..

....

....PIN : ☐☐☐☐☐☐

பார்த்தார். சாட்சிக்கு வந்திருந்தவர்களிடம் ஏற்கெனவே தயாரித்து வைத்திருந்த கேள்விகளைத் தொடுத்தார். சிறிது நேர விசாரணைக்குப் பிறகு கோர்ட் தள்ளி வைக்கப்பட்டது.

மானேஜிங் டைரக்டர் ஹர்ஷவர்தன் எதிரே சோகமே உருவாய் நின்றிருந்த ஜெயராமனுக்கு எப்படி சமாதானம் சொல்வதென்று புரியாமல் தாழப் பார்த்தார். புண்பட்ட நெஞ்சுக்கு எது சொன்னாலும் ஏற்காது.

"ரொம்ப வருத்தப்படறேன் ஜெயராமன். இன்னும் ரெண்டு மூணு ஹியரிங்ல வழக்கு முடிஞ்சுடும்னு எதிர்பார்க்கிறேன். ஆனாலும் ஏனோ எதிர்த்தரப்பு வக்கீல் எதையெல்லாமோ கிளறிக்கிட்டுப் போறார்."

"எதுக்கு சார் இப்படியெல்லாம் நடக்குது? நான் நிரபராதின்னு சொன்னா ஏன் யாரும் நம்ப மாட்டேன்றாங்க? ஆனா உங்களுக்குத் தெரியும். நீங்க நினைச்சா எனக்காக வாதாட முடியும். என்னை இந்த கேஸ்லேருந்து காப்பாத்த முடியும்."

"என்னைக் கொஞ்சம் புரிஞ்சுக்க ஜெயராமன். நான் இந்தப் பதவிக்கு வந்ததிலேருந்து எவ்வளவோ விபத்துகள் நடந்திருக்கு. எல்லா வழக்குலேயும் என்னால தலையிட முடியாது. ஏன்னா நான் எதையும் நேர்ல பார்க்கிறதில்லை. எனக்குன்னு ஒரு வரம்பு இருக்கு. மனிதநேயம் இருந்தாலும் சட்டப்படிதான் நடக்க வேண்டியிருக்கு."

"அப்ப நீங்க எனக்கு ஒரு வேலையாவது போட்டுக் கொடுக்கலாமே. ஒரு கால்தான் போச்சே தவிர இரண்டு கையும் நல்லாத்தானே இருக்கு. அட்லீஸ்ட் ஏதாவது எழுதற வேலையாவது போட்டுக் கொடுக்கலாமே. நானும் பிளஸ் டூ பாஸ் பண்ணினவன்தானே?"

"கோர்ட்ல கேஸ் இன்னும் முடியலையே ஜெயராமன். நீ நிரபராதியா இல்லை குற்றவாளியான்னு எதுவும் தீர்ப்பான பிறகுதானே உன் பைல் க்ளோஸ் ஆகும். அதுக்குப் பிறகுதான் என்ன செய்யணும்னு முடிவு எடுக்கணும்."

"கேஸ் நடக்க ஆரம்பிச்சு ஏற்கெனவே நாலு வருஷம் ஆயிடுச்சு சார். இன்னும் எத்தனை காலம் என்னால காத்துக்கிட்டிருக்க முடியும்?"

பாக்கெட்டிலிருந்து எட்டணா நாணயத்தை எடுத்துக் காண்பித்தான்.

"இதுதான் சார் என்கிட்ட இருக்கிற காசு. இதை வைச்சுக்கிட்டு எப்படி சார் இந்த நொண்டிக் காலோட வீடு போய்ச் சேர முடியும்?"

"காசு வேணுமா ஜெயராமன்?"

"வேண்டாம் சார். அந்த அளவுக்கு நான் மோசம் ஆயிடலை."

"சரி. நீ எங்கே போகணும்னு சொல்லு. டிரைவரை அனுப்பி வைக்கிறேன்."

திடீரென ஜெயராமனின் குரல் கம்மியது. கண்கள் பனிக்க ஏறக்குறைய அழுதான்.

"சார்! நான் ஒண்டிக்கட்டையா இருந்தா பரவாயில்லை. என்னை நம்பி மூணு ஜீவன்கள் இருக்கு."

ஹர்ஷவர்தன் பிரமித்துப் போனார்.

"சேச்சே. என்ன இது ஜெயராமன்? தைரியமா இருக்கணும். மனசை திடப்படுத்திக்கணும். அப்பத்தான் காரியத்தைச் சாதிக்க முடியும்."

"அடுத்த ஹியரிங் எப்ப சார் வருது?"

"வர்ற ஏப்ரல் மாசம் பதினைஞ்சாம் தேதி. ஆனா அதுவரைக்கும் நான் இங்கே இருக்க மாட்டேன்."

"என்ன சார் சொல்றீங்க?"

"அடுத்த வாரத்தோட நான் ரிடையர் ஆகப் போறேன்." ஜெயராமனுக்கு இன்னும் மனசு உடைந்து போயிற்று.

"இது சோதனை சார். எனக்கு ஏன் இப்படியெல்லாம் வருதுன்னு தெரியலை."

"எல்லாத்துக்கும் ஒரு முடிவு வரப் போகுது ஜெயராமன். நாளைக்கு சாயங்காலம் என் வீட்டுக்கு வா பேசுவோம்."

அவர் சொல்லியிருந்தபடியே ஜெயராமன் சென்றான். ஹர்ஷவர்தன் தான் ஒரு அதிகாரி போல் அல்லாமல் அவனிடம் கரிசனத்துடன் நடந்து கொண்டார். ஒரு நல்ல யோசனையைத் தந்ததுடன் நம்பிக்கையும் ஊக்கமும் அளித்தார்.

"இதுல நிச்சயம் பலன் கிடைக்கும் ஜெயராமன். இந்த மேட்டரை டைப் பண்ணி முப்பது நாற்பது ஜெராக்ஸ் காப்பி கொண்டு வா போதும். இந்த கருணை மனுவை தமிழ்நாட்டுல இருக்கிற நம்ம டிபார்ட்மெண்ட் எல்லாத்துக்கும் அனுப்பி வைப்போம். எல்லா டிபார்ட்

"கபாலி, நான் இனிமே மாமூலாய் உன்கிட்டேயிருந்து ஒரு பைசா கூட வாங்கப் போறதில்லை."

"ஆச்சரியமாயிருக்கே!"

"அதுக்குப் பதிலா இன்ஸ்பெக்டர்கிட்டே சொல்லி என் சொந்த ஊருக்கே என்னை டிரான்ஸ்பர் பண்ணறதுக்கு நீ ஏற்பாடு பண்ணினா, அதுவே போதும்."

— வி. ரெங்கநாதன்





அருள்வாக்கு

முதலில் தேவதா உபாஸனை வேண்டத்தான் வேண்டும். ஆனாலும், உபாஸிக்கப்படும் தேவதையும் உபாஸகனான தானும் வேறில்லை என்று ஆகிறதற்கு ஆரம்ப ஸாதனமாகவே உபாஸிக்கிறோம் என்று புரிந்து கொள்ள வேண்டும். முதலில் வித்யாஸங்கள் பார்க்கத்தான் வேண்டும். லோக வியாபாரம் ஒழுங்காக நடக்க வேண்டுமானால், நமக்குள் காரியங்களைப் பல தினுசாகப் பிரித்துக் கொண்டு, அந்தந்தக் காரியத்தையும் சுத்தமாகப் பண்ணுவதற்கு என்ன தனிப்பட்ட ஆசார அநுஷ்டானாதிகள் உதவி செய்யுமோ, அப்படிப் பிரித்துதான் அவரவருக்கான தர்மங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். ஆனாலும் இதுவும், கடைசியில் ஸகல வித்யாஸமும் போய், எல்லாமும் எல்லாரும் ''தானே'' என்று தெரிந்து கொள்வதற்குத்தான் என்ற அடிப்படை உணர்ச்சி இருக்க வேண்டும். வேத அத்யயனம், வேத கர்மாநுஷ்டானம் எல்லாம், அந்த வேதமே அவசியமில்லாமல் போய் விடுகிற அகண்டமான மஹாஅநுபவத்துக்கு வழிதான் என்று வைத்துக் கொண்டு, அவற்றை அப்பியாஸம் பண்ண வேண்டும். புஷ்பம் இருந்தால்தான் பிறகு பழம் உண்டாகும். புஷ்பம் பார்க்க ரொம்ப அழகாக இருந்தாலும், அது காய்ந்து போய் விழுந்தால்தான் பழம் உண்டாகும். பூவே இல்லாமல் காய்க்க வேண்டும் என்று, இந்த நாளில், வைதிகாநுஷ்டானமே இல்லாமல் வேதாந்தத்துக்குப் போகிறவர்கள் நினைத்தால், அது யதார்த்தத்துக்குச் சரியாக வராது.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

பகுத்தறிவு மாய்கின்ற தறுவாயில்தான், ஞானம் பிறக்கின்றது என்பதைப் பின்புதான் உணர்ந்தேன். நான் தளைகளிலிருந்து விடுதலை அடைவதற்கு முன் என்னிடம் நிகழ்ந்தது, வெறும் அறிவே.

● பகுத்தறிவு வகுக்கும் பொய்த் தோற்றங்களைப் போற்றுவதுதான் அறிவின் தொழில் என்று கருதுகின்றனர். ஆனால் ஞானமோ இசை மூட்டத்தை விலக்கிக் கொண்டு உண்மை ஒளியைக் காண்கின்றது.

● பொருள்களின் அம்சங்களை வரையறுத்துக் கொண்டு, அவற்றிடையே காணப்படும் மாறுபாடுகளைப் பகுத்தறிவு ஆராய்கின்றது. ஆனால், வித்தியாசங்களைச் சமரசப்படுத்தி, நீக்கும் ஓர் ஐக்கியத்தை ஞானம் நிலைநாட்டுகின்றது.

- ஸ்ரீ அரவிந்தர்

மெண்ட்லேயும் மொத்தம் முப்பதாயிரம் பேர் வேலை செய்யறாங்க. அதுல எத்தனை பேருக்கு உதவி செய்ற மனப்பான்மை இருக்குன்னு பார்ப்போம்."

ஜெயராமன் கஷ்டத்தோடு கஷ்டமாய் அவர் சொன்னபடியே செய்தான். நாற்பது ஜெராக்ஸ் காப்பிகளை கொண்டு வந்து அவரிடம் கொடுத்தான். ஹர்ஷவர்தன் அன்றே தனக்குத் தெரிந்தவர்கள் உள்பட எல்லா இடங்களுக்கும் அந்த கடிதங்களை தபால் செய்தார். தான் வேலை பார்த்துக் கொண்டிருந்த டிபார்ட்மெண்டிலும் சுற்றறிக்கை விட்டார்.

ஜெயராமன் பொறுமையாய்க் காத்திருந்தான். ஒரு மாதத்திற்குப் பிறகு ஹர்ஷவர்தனிடமிருந்து கடிதம் வர ஒருவித பதற்றத்துடன் அவரைக் காணச் சென்றான்.

ஹர்ஷவர்தன் அவன் தோளை ஆதுரத்துடன் பற்றிக் கொண்டார்.

''உனக்கு ஒரு அதிர்ச்சியான செய்தியைச் சொல்லப் போறேன் ஜெயராமன். இன்ப அதிர்ச்சி. நாம அனுப்பி வைச்சிருந்த கருணை மனுவுக்கு அமோக பலன் கிடைச்சிருக்கு. மொத்தம் நாலு லட்சத்துக்கு மேல வசூலாகியிருக்கு!"

ஜெயராமனுக்கு மூச்சு நின்று விடும் போலிருந்தது. பேச்சு வரவில்லை.

ஹர்ஷவர்தன் உள்ளே சென்று ஒரு பெரிய கேன்வாஸ் பையைக் கொண்டு வந்து அவன் முன்னே வைத்தார்.

''மொத்தம் இருபதாயிரம் ஊழியர்கள் உனக்கு உதவி செஞ்சிருக்காங்க. சிலர் மணி ஆர்டர் மூலமாகவும் சிலர் செக், டிடி. மூலமாகவும் அனுப்பிச்சிருக்காங்க. எல்லாத்தையும் எண்ணி பார்த்துக்க."

அவனுக்கு மேனி சிலிர்த்தது.

"இருக்கட்டும் சார். என்னால நம்ப முடியலை. இவ்வளவு பணம் வசூலாகும்னு நான் கனவுல கூட எதிர்பார்க்கலை."

"அதான்பா தெய்வ சங்கல்பம். சட்டம் உன்னைப் புறக்கணிச்சாலும் சமூகம் உன்னைப் புறக்கணிக்கலை. இந்த பரந்த சமூகத்துல இன்னமும் மனிதநேயம் இருக்குங்கிறதுக்கு இதைவிட வேற என்ன உதாரணம் வேணும்? நீ கோர்ட்ல கேட்டிருந்த ஈட்டுத் தொகையை விட இப்ப உனக்கு அதிகமாகவே கிடைச்சிருக்கு. ஒரு விஷயம் சொல்லணும். ஆபீஸரா இருந்து உனக்கு உதவ முடியலேன்னாலும் ரிடையரான பிறகாவது உனக்கு உதவ முடிஞ்சதேன்னு மனசுக்கு ரொம்ப நிம்மதியா இருக்குப்பா. நீ உண்மையிலேயே சாதிச்சுட்டே."

ஜெயராமன் உணர்ச்சிப்பெருக்கில் மெய் மறந்து நின்றிருந்தான்.

கண்ணில் நீர் மல்கியது.

ஆனந்தக் கண்ணீர்!

பாலகுமாரன்

என்னுயிரும் நீயல்லவோ

23

கதிரேசன் சொர்ணலக்ஷ்மியையே ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தான்.

தகர மேலையில் காது வைத்துக் கொண்டு தன் கையாலே தகரத்தை ஓங்கி அறைந்தால் காது அதிரும் சப்தம் கேட்பது போல் இடி தரையில் இறங்கியது. தொடர்ந்து இன்னொரு மின்னல் வெட்டியது.

சொர்ணலக்ஷ்மி பயத்தில் துள்ளி அவன் அருகே வந்தாள். அவன் மீது பட்டாள். மின் சாரம் துண்டாயிற்று. மலையை இருள் கவ்வியது. மழை மிக பலமாய் பெய்யத் துவங்கியது. திறந்த ஜன்னல் வழியே காற்று சாரலை அள்ளிக் கொண்டு வந்து அறை முழுவதும் வீசியது. சாளரத்தை அடைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

மின்னல் சவுக்கின் ஓசை மறுபடியும் இடியாய் மலை முழுவதும் எதிரொலித்தது. அவன் மீது பட்டுக் கொண்டிருந்த சொர்ணலக்ஷ்மி ஒட்டிக் கொண்டாள். இன்னொரு மின்னல் மின்ன, இடிக்குக் காத்திருந்தார்கள். மலைச்சரிவில் உருண்டு விழும் வாகனம் போல இந்த முறை இடி தொடர்ந்து முழங்கிற்று. அவன் அவள் புஜத்தினுள் கையை விட்டு இறுக கட்டிக் கொண்டான். அவனுள் உறங்கிக் கிடந்த புலி கண் விழித்தது.

'சொர்ணலக்ஷ்மி கொஞ்சம் இரு!' நெற்றி மயிர் தெரியாத இருட்டில் அவன் கைநீட்டி சுவர் தேடினான். அறையினுள் இருக்கும் கறுப்பை விட வெளியே இருக்கும் கறுப்பு வெளிர் கறுப்பு. அவன் அவளை அணைத்த படியே சாளரம் நோக்கிப் போனான். இடது கையால் அவள் இடுப்பை சுற்றிப் பிடித்திருந்தான். பஞ்சு பொதித்த பட்டு போல அவள் இடுப்பு இருந்தது. விரல்களை வெறுமனே வைத்திருந்தாலும் அது குழைவது தெரிந்தது.

கைநீட்டி ஜன்னல் கதவை இழுத்தான். காற்று வெளியே இழுத்தது. சட்டென்று சாரலால் முகம் தாக்குண்டது. இரண்டு பேரும் குளிர்தாங்காமல் இறுக்கிக் கொண்டார்கள். இந்த முறை ஜன்னல் கொக்கியை கதிரேசன் உறுதியாய்ப் பிடித்தான். காற்று மீறி ஜன்னலை இழுத்தான்.

"வெளியே இருட்டா இருந்தாலும் அழகா இருக்கு இல்லை?" அவன் மூடுகிற நேரம் பார்த்து அவன் சொன்னான்.

அடடே, இவன் இருட்டின் அழகை ரசிக்கிறானா. ஜன்னலின் பிடியைத் தளர விட்டாள். காற்று ஈரம் அனுப்பியது.

"அய்யோ கதவைச் சாத்துங்களேன். குளிர் கொல்லுது." முதல் வாக்கியத்துக்கு எதிர்வாக்கியமாய்ப் பேசினாள். குளிரால் பெரிதும் தாக்கப்பட்டவள் போல் இன்னும் ஒண்டிக் கொண்டாள்.

ஆண் முட்டாளாக இருக்கிறானா என்று பெண் சோதித்துப் பார்க்கும் நேரமிது. ஆம் என்பதாய் சொர்ணலக்ஷ்மி புரிந்து கொண்டாள். அவள் ஒண்டிக் கொண்ட போது புலி தலை தூக்கி உறுமியது. மான் வாசனையில் திணறியது.

"இன்னா சொர்ணலக்ஷ்மி?" அவன் எதுவோ கேட்க நினைத்து வெற்றுக் கேள்வியாய் நின்றான்.

"நீங்க இல்லாம என்னால உயிர் வாழ முடியாதுங்க." அவள் வேறு எதுவோ பேச நினைத்து, பெரிய பொய்யை வெளியே கக்கினாள்.

"என்னைப் புடிச்சிருக்கா சொர்ணலக்ஷ்மி?" இறுக பிடித்துக் கொண்டிருப்பவளை இவனும் பார்த்துக் கொண்டு கேட்டான்.

விலகி நின்று பார்ப்பவர்க்கு காமமும் பொய். காதலும் பொய். விலகாது இறுகிக் கொண்டவர்களுக்கு வேறு எதுவும் முக்கியம் இல்லை.


தொட்ட கை தடவியது. தடவிய கை இறுகியது. அவர்கள் படுக்கையில் உட்கார்ந்தார்கள். சாய்ந்தார்கள். தாங்கள் என்ன செய்கிறோம் என்பதை மறந்தார்கள்.

விடிந்து எழுந்ததும்தான் திகீரென்று இருந்தது கதிரேசனுக்கு. வெளிச்சம் பரவிய போது தலைதூக்கிப் பார்க்க அவன் அருகே குழந்தை போல் சொர்ணலக்ஷ்மி தூங்கிக் கொண்டிருந்தாள். பெரிய குழந்தை. பூரணமாய் வளர்ந்த குழந்தை.

மழையின் ஈரம்பட்ட மண்ணும் மரங்களும் வெளிச்சம் பட்டு தகதகத்துக் கொண்டிருந்தன. பறவைகளின் கூவல் காதை நிறைத்தது. கிருஷ்ணமூர்த்தி அய்யர் காம்பவுண்டுக்கு வெளியே ஒரு கும்பலோடு பேசிக் கொண்டிருந்தார். அந்தக் கும்பலின் பேச்சில் ஒரு பதற்றம் தெரிந்தது.

கிருஷ்ணமூர்த்தி அய்யர் அழைக்கப்பட்டுத் திரும்பியவர போல அழைக்காமல் திரும்பினார்.

"எழுந்திட்டீங்களா?" சந்தோஷமாக அவர்களை நோக்கி நடந்து வந்தார்.



"ஹால் மேஜையில பல்பொடி வைச்சிருந்தேனே பாக்கலையா, பல் தேய்ச்சுட்டு வாங்க டக்கரா காப்பி போட்டுத் தரேன். குழந்தை எழுந்திருக்கலையா?"

"அங்கே என்னங்க கூட்டம்?"

"நல்லவேளை நீங்க அடிவாரம் போகலை."

"என்ன?"

"முந்நூறு, முந்நூத்தம்படிக்கு மண்ணு சரிஞ்சு போச்சு. மலைப்பாதை அப்படியே பத்து அடி ஆழத்துக்கு அப்படியே அமுங்கிப் போச்சு. ஏதோ . கொஞ்ச தூரம் பாதை ரிப்பேர்னா, கரெக்டா கல்லு போட்டு ரிப்பேர் பண்ணுவான். முந்நூறு அடிக்கு அமுங்கிப் போச்சுன்னா மொல்லத்தான் ரிப்பேர் ஆவும். கேரன்னா உள்ள போய் மேற்குப் பக்கமா மலை ஏறணும். எழுபது எண்பது கிலோ மீட்டர் தூரமாயிடும். சுத்திண்டு வந்துடலாம். நாம போற வேளைக்கு மண்ணு இறங்கியிருந்தா, ஒரு ஜீப் இறங்கிடுத்தாம். உள்ள இருக்கிறவா கத்திவே கயிறு போட்டுத் தூக்கிட்டாங்களாம். ஜீப்புலேந்து இறங்கி கைக் குழந்தையோட ஒரு குடிசைல ஒதுங்க இரண்டு கிலோ மீட்டர் தூரம் நடந்திருக்கா. குழந்தைக்கு ஒண்ணும் இல்ல. அம்மாவுக்கு ஜுரம் வந்திடுத்து."

பல் தேய்த்து முகம் கழுவி காப்பி குடிக்கும் போதும், சொர்ணலக்ஷ்மி எழுந்திருக்கவில்லை.

"ராத்திரி நல்ல மழை. புருஷனும், பொண்டாட்டியும் அசந்து தூங்கிட்டேன் போலருக்கு!" சிரித்தபடி விசாரித்தார்.

ஆம் தூங்கினேன் என்றால் ஏன் தூங்கினாய், இல்லை, தூங்கவேயில்லை என்றால் என்ன செய்தாய் என்ற பேச்சுக்கள் வரும். கதிரேசன் மௌனமாய் இருந்தான்.

ஷூக்கள் மாட்டி மறுபடியும் காப்பி எஸ்டேட்டிற்குள் புகுந்தான். மேட்டில் ஏறுகின்ற போது நினைவுகள் வந்தன.

என்ன துணிச்சல் எனக்கு, எந்த நம்பிக்கையில் இந்த பெண்ணைத் தொட்டேன். இவளை மனைவி என்று கொள்வதா அல்ல வேறு ஏதேனுமா. என் நம்பிக்கை இருக்கட்டும், இவளுக்கு என்ன நம்பிக்கை. எதனால் சம்மதித்தாள்.

ஆனால் பெண் எத்தனை சுகம். கூடல் எவ்வளவு பெரிய யுத்தம். அதில் ஈடுபட்டதும் ஜெயித்ததும் எப்பேர்ப்பட்ட சுகம். இன்னும் தூங்குகிறாள் என்றால் அயர்ந்து துணியாய் இருக்கிறாள் என்றுதானே அர்த்தம். அயர வைத்தேன் என்பதுதானே சந்தோஷம். கதிரேச னுக்கு உடம்பெல்லாம் இனித்தது.

இந்த காப்பித் தோட்டம் வாங்கி விட வேண்டும். இந்த காப்பித் தோட்டத்தில் நடப் பது சந்தோஷமாக இருக்கிறது. இது ஒரு நல்ல இடம் என்பதாய் மனசுக்குத் தோன்றுகிறது. ஆனால் காப்பிக்கு மதிப்பே இல்லை, குப்பை யில் போட்ட காசு என்று பலரும் சொல்கிறார் கள். ஏலக்காய் எஸ்டேட் வாங்கலாம் என்றால் விற்பதற்கே பலர் தயங்குகிறார்கள். வெறும் குப்பைமேட்டை எஸ்டேட் என்கிறார்கள்.

காப்பியா, ஏலமா எதுவாயினும் சரி இந்த மலையை விட்டுப் பிரிய வேண்டாம் என்று தோன்றுகிறது. மலை மீது ஒரு பிடிப்பு வந்து விட்டது. இந்த அய்யர் அனுசரித்தால் இன் னும் கூட சீப்பாக வாங்கலாம்; அய்யருக்கு வேண்டு மட்டும் உதவி செய்யலாம். அய்ய ருக்கு மலை பிடிக்கவில்லை. அவருக்குத் தரை மீதுதான் காதல் இருக்கிறது.

காப்பி கிடைத்தாலும் சரி, ஏலம் கிடைத்தாலும் சரி இனி மலைதான். செட் டிப் பெண் கிடைத்தாலும் சரி இந்தப் பெண் மனைவியானாலும் சரி இனி மலைதான்.

ஆனால் காப்பியா, ஏலமா? யோசித்த படியே எஸ்டேட்டை சுற்றி பிள்ளையார் கோவில் வாசலில் நின்றான்.

"புள்ளையாரே நான் உன்கூட இருக்கட் டுமா, இல்லை வெளியே இருக்கட்டுமா?" அவரை நோக்கிக் கேள்வி கேட்டான். குளிர் காற்றில் பிள்ளையார் தலையிலிருந்த செம் பருத்தி தரையில் விழுந்தது.

சரி காப்பிதான், இந்த எஸ்டேட்தான். அய் யரை கொஞ்சம் வலை போட்டு இறக்கணும். கதிரேசன் வேகமாய் யோசிக்க ஆரம்பித்தான்.

அவளும் யோசித்தாள்.

பாத்ருமுக்குள் போனதுமே வித்தியாசம் தெரிந்து விட்டது. நெடுநாள் கரையில் இருந்து விட்டு திடீரென்று கடலுக்குள் பயணப்படு வது போல வித்தியாசம் அது. ஏதோ ஒரு இனம் தெரியாத சோகம் நெஞ்சைக் கவ்விக் கொண்டது. இனி பழைய சொர்ணலக்ஷ்மி இல்லை என்பது சிரமமாக இருந்தது.

யாரைப் பார்த்தாலும் ஒரு நாணம் ஏற் படும் என்று தோன்றியது. ஆனால் நாணப் படக் கூடாது. கதிரேசனைக் கண்டால் மட் டும் நாணுவது போல் நடிக்க வேண்டும். லேசாய் அழ வேண்டும். பகவதி அக்காளிடம் நாணினால் செருப்பால் அடிப்பாள். அப்ப இருந்திருக்கணும்டி வெட்கம் என்று இன் னொரு முறை அடிப்பாள்.

வேறெதாவது விபரீதம் ஆகிவிடுமா? ஆகாது. நான் கணக்குப் பார்த்தால் ஆவதற்கு வாய்ப்பே இல்லை. மறுபடியும் இந்த அறைக் குள் கதிரேசன் வரும் வரை காத்திருக்க வேண் டும். வந்த பிறகு நானும் நாடகத்தை ஆரம்பிக்க வேண்டும். அவள் காத்திருந்தாள்.

'உலகம் நாடக மேடை' என்று சொன்ன தற்கு அர்த்தம், இது ஒன்றும் முக்கியமில்லை என்று சொல்வதற்கு அல்ல. இது எவ்வளவு பெரிய பிரமாண்டம் என்பதைப் புரிந்து கொள் என்பதற்காக. நான், மனைவி, இரண்டு குழந்தைகள், நாலு நண்பர்கள், பத்து உறவுகள், நூறு பேர் தெரிந்தவர்கள் என்பதோடு உலகம் முடிந்து விடவில்லை, கோடானு கோடி மக்களை உலகம் கொண்டிருக்கிறது. யார், யாரை எங்கே பார்க்கிறார்கள் என்பதைச் சொல்லவே முடியாது.

லாரியில் வந்து இறங்கிய நாலு வய சான தொழிலாளியில் ஒருவன் பகவதியை நோக்கி வந்தான். அவனுக்குக் கடுமையான தலைவலி. பத்து ரூபாய் முன்பணமாய் காசு கேட்க வேண்டும் என்கிற எண்ணத்தில் அவள் வீட்டு வாசலில் நின்றான்.

பகவதி கதிரேன் பற்றிய கவலையில் இருந் தாள். சொர்ணலக்ஷ்மியையும், இவனையும் சேர்த்து அனுப்பி விட்டோமே என்கிற திகி லில் இருந்தாள்.

இந்தப் பொண்ணு அசடு, கதிரேசன் கொஞ்சம் பயந்த பையன் இல்லியா என்று சமாதானப்படுத்திக் கொண்டாள். எங்கியா வது பாதை சரிஞ்சு வண்டி உருண்டு தப்பா யிட்டுருக்குமோ! பயந்து நடுங்கினாள்.

மனம் எங்கேயோ லயித்திருக்க வந்திருப்ப வனை "என்னப்பா?" என்று கேட்டாள்.

"காப்பி தோட்டம் வாங்கப் போறீங்களாக் கும்!" வந்தவன் எடுத்தவுடன் காசு கேட்காமல் ஏதாவது பேசி விட்டு காசு கேட்லாம் என்று நினைத்தான்.

"என்னங்கிற அதுக்கு இப்போ?" பகவதி நினைப்பு எங்கேயோ இருக்க சிடுசிடுத்தாள்.

வந்தவனுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை.

"நம்ம காரை ஒரு காப்பி தோட்டத்தில பார்த்தேன். நீங்கன்னா ஒரு பத்து ரூபாய் கைமாத்து வாங்கலாம்னு நினைச்சேன்

"காரு பார்த்தியா, நம்ம புள்ளை எங்கே?"

"தெரிலீங்களே."

"சொர்ணலக்ஷ்மி."

"பாக்கலீங்களே."

எப்போது, எந்த எஸ்டேட்டில்? விவரம் தெரிந்து கொண்டாள். 'அந்த எஸ்டேட்டுக்குள்



"என்னப்பா இது! ஆபீஸ் முழுக்க எல்லா இடத்திலேயும் சோப்புப் போட்டு நல்லா கழுவி விட்டுக்கிட்டு இருக்கே?"

"அதுவா! நேத்திக்கு 'லஞ்ச ஒழிப்புத் துறை' அதிகாரிங்க வந்து எங்க ஆபீஸை திடீர்னு சோதனை பண்ணிட்டுப் போனாங்க! அதான்!"

- வி. ரெங்கநாதன்

கார் ஏன் போயிற்று?' கவலையோடு யோசித்தான்.

அந்தப் பக்கத்திலிருந்து வருகின்ற தொழிலாளர்கள் யார் யார்? மடமடவென வலை விரிக்கத் துவங்கினான்.

"ஏது பத்தியும் கவலை வேணாம்; சொர்ணலக்ஷ்மி. நான் இந்த எஸ்டேட் வாங்கறேன். இதைவிட ஒரு நல்ல விலை இன்னி தேதிக்கு இந்த எஸ்டேட் ஆளுக்குக் கிடைக்காது. என்னிய விட ஒரு நல்ல புருஷன் உனக்குக் கிடைக்க மாட்டான். இப்படி ஒரு அழகு எனக்கும் கிடைக்காது." கதிரேசன் சொர்ணலக்ஷ்மியை இருக்கிக் கொண்டான்.

"என்னை கைவிட்டீங்கன்னா எனக்கு சாவறதைத் தவிர வேற வழியில்லை."

"சாவறதைப் பத்தி ஏன் பேசற? வாழறதைப் பத்திப் பேசு. இங்க உட்கார்ந்து பேசு." அவன் தொடைகளை தட்டிப் பேச அவள் மிகவும் தயங்கியது போல் வந்து உட்கார்ந்தாள். மறுபடியும் அந்த அறையில் சூடு பரவியது.

விசாரிக்காமல் இருந்தால் எல்லோருக்கும் தெரிந்திருக்காது, விசாரணை அதிகமாக, விஷயம் வெளியே வந்து விட்டது. விநாயகம் எந்த எஸ்டேட் என்று கேட்டுத் தெரிந்து கொண்டான்.

காப்பித் தோட்டம் வாங்கப் போகிறார்களா, நாராயணனுக்குள் வேதனை பரவியது. இந்த எஸ்டேட்டை கண்ணும் கருத்துமாகக் காப்பாற்றி வந்ததற்கு இதுதான் கைமாறா? ஏலக்காய் எஸ்டேட் வாங்கினால் ஏலக்காய் தெரிந்தவனுக்கு மதிப்பு அதிகமாகி விடும். அவனை மட்டம் தட்டி வைக்க வேண்டும் என்றுதான் காப்பிக்கு மாறுகிறார்களாம். மூன்று மணி நேரத்தில் மலையில் அந்தப் பகுதியில் பல பேருக்கு விஷயம் தெரிந்து விட்டது.

அந்த எஸ்டேட்காரங்க காப்பி வாங்குறாங்களாமே! காரணமில்லாம வாங்குவாங்களா, என்ன காரணம்? ஏலம் மார்க்கெட் சரியப் போகுதாம். மிடில் ஈஸ்ட்ல ஜனங்களுக்கு நடுவில் ஒரு புரளி வந்திடுச்சு, ஏலக்காய் ஜாஸ்தி சாப்பிடாதீங்க. ஆண்மை போயிடும்னு. அது பெரிசாகி விலை கேட்க ஆளில்லாம போயிருக்குமோ.

"ஏலக்காய் அதிகம் சாப்பிட்டா ஆண்மை போயிடும் என்பது உண்மையா?"

"இது என்ன மல்லாட்டப், பயிரா போக வரத் தின்ன? அதெல்லாம் ஒண்ணும் ஆகாது. ரொம்ப தின்னம்னா பித்தம், ரொம்ப தின்னவும் முடியாது. இந்தியாவுல ஒரு ஆளுக்கு ஒரு வருஷத்துக்குப் பன்னிரெண்டு கிராம் ஏலக்காய் போதும். இந்த பன்னிரெண்டு கிராம் கூட சாப்பிடறதில்லைன்றதாலதான் ஏத்துமதியாவுது. இந்த வருஷம் இன்னம் கூட சேப்பாங்களே தவிர குறைக்க மாட்டாங்க."

"காப்பி என்னங்க ஆவும்?"

"கென்யாவுக்கும், பிரேசிலுக்கும்தான் போட்டி. நம்ம பிளான்டேஷன் ஏ காப்பியை பிரேசில்காரன் வாங்குறான். அவன் பொடியோட நம்ம பொடியைக் கலந்து ஐரோப்பாவுக்கு அனுப்பறான். ஆனா பெரிய விலை ஒண்ணும் இல்லை. காப்பி எல்லா வருஷமும் நஷ்டம்தான். ஏலத்தை விட காப்பி பாரு இந்த உள் தோல் போற வரைக்கும் தேய்ச்சுக் கழுவி, கை தேய்ஞ்சு போகுது. கழுவலைன்னா காப்பி கொட்டை அழுகிப் போயிடுது."

"அப்ப எதுனால காப்பி வாங்குறாங்க?"

"தெரியலையே!"

விநாயகம் எல்லாம் கேட்டுக் கொண்டான். மதுரைக்குப் போன் செய்தான்.

"எதுக்கும் ஒரு நடை நீங்க வந்துட்டுப் போயிடுங்க. பகவதியோட சொந்தக்காரப் பொண்ணு. கதிரேசனோட ஒரே கார்ல சுத்துது. ரெண்டு பேரும் ஒரே கார்ல போய் ராத் தங்கிட்டு வராங்க. கதிரேசன் காப்பி எஸ்டேட் வாங்கிறதுலயே குறியா இருக்கிறார். உங்களுக்குத் தைரியம் பத்தலை. பகவதியும் வயசுப் பொம்பிளைதானே, புருஷன் இல்லாதவதானே, சட்டுனு தோள்ல கைவைச்சாத் தானா மடிஞ்சுடுங்க. கதிரேசு பையன் போற போக்குல கவுத்துட்டான்.

எழுபது கிலோ மீட்டர் சுத்தி ஊர்து ஆபத்சகாயத்தைப் பாத்து கிருஷ்ணமூர்த்தியின் உதவியோடு விலை பேச ஏக்கர் முப்பத்தி ஓராயிரம் ரூபாய்க்குப் படிந்தது. ரெண்டு பகுதியாய் காக தருவதாய் உறுதியாயிற்று. முதல் பகுதி மறுநாள் காலையே வேண்டும் என்று ஊர்து அடம்பிடித்தார்.

அன்றிரவு ஊர்து வீட்டிலேயே தங்கி காப்பி பற்றி கதிரேசன் தெரிந்து கொண்டான். சொர்ணலக்ஷ்மிக்கு நைட்டியும், தனக்கு லுங்கியும் வாங்கிக் கொண்டான். அங்கேயும் - அந்த இரவும் - அவர்கள் கணவன் மனைவியாக இருந்தார்கள்.

(தொடரும்)

நகைச்சுவை ஒன்றே பிரதானம் என்று முடிவு செய்து விட்டபடியால் கதை, லாஜிக் போன்ற கெட்ட சமாசாரங்களையெல்லாம் ஒரு மைல் தூரத்தில் ஒதுக்கி நிற்கவைத்து விட்டிருக்கிறார்கள்.

டைரக்டர் கேயாரின் ஒரே டிரம்ப் கார்ட், ஊர்வசி. அகன்ற வண்ணத்திரையில் பிறருக்கு அரை சென்ட்டிமீட்டர் கூட இடம் இல்லை. அல்லி ராஜ்ஜியம்; அநாயாசம்.

அரைப் பைத்தியமாக நடிப்பது ரொம்ப கஷ்டம். முன்னதாக நாலைந்து படங்களில் ஏகதேசம் இதே போல செய்திருப்பதால், இந்தப் படத்தில் அனுபவம் பேசுகிறது. 'அட்டாக்' சொல்லி, ராம்கியை சித்திர வதைப்பதும் அப்பா கம்பெனியில் புகுந்து இன்டர்வியூவுக்கு வரும் பூச்சிகளிடம் ரகளை பண்ணித் துரத்துவதும் ஒரு மாதிரி இழுத்து இழுத்துப் பாடுவதும் மழைச்சாரல் சுகம்.

இடைவேளை வரை ஒரு மாதிரி மெதுவடை ரேஞ்சில் போகிற படம், திடீரென்று தொடர் மரணம், 'ஆவி'யாகும் ஊர்வசி, இன்னொரு ஊர்வசி, வில்லன், பழிவாங்கும் படலம் என்று திசை மாற, அதுவரை பட்டொளி வீசிப் பறக்கும் ஹ்யூமரும் ஜூட் விட, சரம் சரமாகக் காதுலே பூ.

ஆவிகளோடு பேசுகிறதைக் கிண்டல் செய்யும் விதமாக அந்த இரண்டாவது ஊர்வசி கேரக்டர். மெட்ராஸ் பாஷையில் என்னமாய் கலக்குகிறார்? ஈடு கொடுக்க, ஹீரோ ராம்கியா? தேவுடா! பிடித்து வைத்த பிள்ளையார்.

யதார்த்தத்தை மீறி விட்ட கதை என்பதால் கிளைமாக்ஸில் 'கிஷ்கிந்தா'வில் எடுக்கப் பட்டிருக்கிற மாயாஜாலக் காட்சிகள்... குழந்தைகளுக்குப் பிடிக்கும்!

'அனிமேஷன்' அசத்தல்கள் மருதுவுடையவை. வில்லனுக்கு ஹீரோ முகத்தை மாற்றி, களத்தில் இறக்குகிற அந்த கம்ப்யூட்டர் ஜாலங்கள் வியப்பின் உச்சம்.

இசை, இளையராஜா என்றார்கள்.



மாயா பஜார் 1995

நம்புவதற்குக் கஷ்டமாக இருக்கிறது. வெகு 'போர்'.

இஷ்டத்துக்குக் கதை வளர்த்திருக்கிறார்கள். ஆனால் கொஞ்சமாவது புதுமை வேண்டாமா? கல்யாணராமா.

- ஆர்.பி.ஆர்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : வி. ராஜேந்திரன். ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா, விளம்பரம் : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.

REGISTERED NO. M 4/92
Registered as Newspaper in Srilanka

